# கிறிஸ்தவ தலைமைத்துவ
# பயிற்சிப் பாடங்கள்

ஆசிரியர்
ஜே.சி.சோட்

வெளியிடுவோர்
தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## மொழியாக்கம் செய்தவரின் முன்னுரை

உலக மக்கள் பாவத்தினின்று மீட்கப்படும்படியாக தேவன் தம்முடைய வேதத்தில் கர்த்தரும் இரட்சகரும் அவருடைய ஏக சுதனுமான இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் மூலமாக ஒரே வழியை அறிவித்துள்ளார். அந்த வழிகயை மக்களுக்கு காலங்காலமாக அநேகர் அறிவித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சிப் பாடங்களை எழுதியுள்ள வேத அறிஞர் ஜே.சி.சோட் அவர்கள் கிறிஸ்துவின் பணியைச் செய்கிறவர்கள் எப்படிச் செய்ய வேண்டுமென்று சற்றும் பிசகாமல் தேவனுடைய ஆலோசனைகளிலிருந்து அனுபவப் பூர்வமாக மிகத் தெளிவாக, எளிமையாக அதே சமயம் மிகவும் ஆழமாக எழுதியிருக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவரும் குறிப்பாக சத்தியத்தை போதிக்க விரும்புகிற, போதிக்கிற யாவரும் அவசியம் ஆழ்ந்து, ஆய்ந்து கற்க வேண்டிய புத்தகமிது.

சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன் இந்த அரிய வாய்ப்பை அடியேனுக்கு அளித்தது அவருடைய ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவானவரின் கிருபையே.

தேவ ஆவியானவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆலோசனைகளின் விளக்கங்களை மொழியாக்கம் செய்யும்படி மிகவும் உற்சாகப்படுத்திய தேவதாசர் அன்பு சகோதரர் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியர் அர்ஜுனன் அவர்களுக்கும், இதை இனிய தமிழில் எழுதி உதவிய செஞ்சி கிறிஸ்துவின் சபை ஊழியர் சகோதரர் காளப்பன், சலோமி, வாணி மற்றும் என்னுடைய துணைவி ரேச்சல் அவர்களுக்கும் நன்றியுடையவனாயிருக்கிறேன்.

இதுபோன்ற சிறந்த வேத அறிவை அனுபவப் பூர்வமாக வளர்க்க உதவும் நூல்களை சகோதரர் ஜே.சி. சோட் அவர்கள் இன்னும் ஏராளம் எழுத சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுகிறேன்.

கிறிஸ்துவின் பணியில்

**G.DANIYAL, CHURCH OF CHRIST**
No: 1, 6th Street, Mandapam Road
Kilpauk, CHENNAI - 600 010

**© Copyright 2006 The Word of Christ Publications**
**First Printing in Tamilnadu, 2006 This printing 1,000 Copies**

# கிறிஸ்தவ தலைமைத்துவப் பயிற்சிப் பாடங்கள்

புது தில்லியில் 1968 ஆம் ஆண்டு முதல் கர்த்தருடைய சபையை ஸ்தாபித்து எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அது வளர்வதை கண்டுள்ளேன். இப்பொழுது கர்த்தருடைய மக்களடங்கிய இந்த சரீரம் தனக்கென்று சொந்த மூப்பர்களுடையதாய் இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சபையின் அங்கத்தினர்களையும் அதன் மூப்பர்களாகிய சன்னி டேவிட் பிரான்ஸிஸ் டேவிட், மற்றும் குமார் மாலிக் ஆகியோர்களைப் பாராட்டுகிறேன். இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில் நீங்கள் தொடர்ந்து வளர்ந்து தேசம் எங்கிலுமுள்ள கிறிஸ்துவின் சபைகளுக்கு நல்ல மாதிரியாக இருக்க வேண்டு மென்று ஜேபிக்கிறேன்.

இந்தியாவிலும், கீழ்த் திசை நாடுகளிலும் உள்ள கர்த்தருடைய சபைகள் தங்களுக்குரிய வழிநடத்துனர்களை உருவாக்க வேண்டிய அவசியத்தில் எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் பலதரப்பட்ட வயதில் உள்ள ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், உருவாக்க வேண்டும். கர்த்தர் மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும், பிரசங்கியார்களாகவும் இருக்கின்ற பொறுப்பை புருஷர்களுக்கு கொடுத்திருக்கிறார் என்பது உண்மையாய் இருந்தாலும ஸ்திரீகளும், பிள்ளைகளுக்கும், வாலிப ஸ்திரீகளுக்கும் போதிப்பது மற்றும் எல்லோருக்கும் முன்பாக தன்னை நல்ல மாதிரியாக காண்பிப்பது போன்ற பொறுப்பைப் பெற்றவர்களாயிருக்கிறார்கள்.

ஒவ்வொரு சபையும் தனக்குரிய வழிநடத்துனர்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தால் பின்வரும் குறிப்புகளை ஆலோசனையாகவும், எதிர்பார்ப்புக்கு ஏற்ற சிந்தனையாகவும் எழுதியுள்ளேன். ஒருவர் தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வது மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் அவசியத்தையும் எழுதியுள்ளேன்.

குறிப்பாக பிரசங்கியார்களின் மிகப்பெரிய தேவை கருதியும், அநேக வாலிபர்கள் பிரசங்கியாவதற்கு ஆர்வம் காட்டுவதாலும் அதிகமுக்கியத்துவம் இதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடங்களின் மூலமாக சபையானது கீழ்த்திசை நாடுகள் அனைத்திற்கும் பெருமை சேர்க்கக்கூடிய பிரசங்கியார்கள் மற்றும் வழிநடத் துனர்களை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய ஜெபமாகும்.

*J.C. சோட்*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பாடம் | -1 | வழிநடத்துனர்கள் தேவை |
| பாடம் | -2 | சபையில் மூப்பர்கள் |
| பாடம் | -3 | சபையில் உதவிக்காரர்கள் |
| பாடம் | -4 | சபையில் பிரசங்கியார்கள் |
| பாடம் | -5 | சபையில் போதகர்கள் |
| பாடம் | -6 | பெண் போதகர்கள் |
| பாடம் | -7 | பிரசங்கியாராவது எப்படி |
| பாடம் | -8 | பிரசங்கிப்பதன் நோக்கங்கள் |
| பாடம் | -9 | பிரசங்கியாருடைய பயிற்சி |
| பாடம் | -10 | பிரசங்கியாருடைய ஜீவியம் |
| பாடம் | -11 | பிரசங்கியாருடைய குடும்பம் |
| பாடம் | -12 | பிரசங்கியாருடைய உதவி |
| பாடம் | -13 | பிரசங்கியார் பணத்தை எப்படி பயன்படுத்துவது |
| பாடம் | -14 | வாடகை பிரசங்கியார் |
| பாடம் | -15 | அன்னியநாட்டு உதவி |
| பாடம் | -16 | தன்னிறைவுள்ள சபையை உருவாக்குவது |
| பாடம் | -17 | பிரசங்கியாரின் தோற்றம் |
| பாடம் | -18 | யார் பிரசங்கியார்? |
| பாடம் | -19 | பிரசங்கியாரின் நூலகம் |
| பாடம் | -20 | பிரசங்கிக்கும் முறைகள் |
| பாடம் | -21 | பிரசங்கியாரின் பேச்சு |
| பாடம் | -22 | பிரசங்கியாரின் வேலைகள் |
| பாடம் | -23 | உபதேசத்தில் உறுதி |
| பாடம் | -24 | தேவைப்படாத பிரசங்கியார்கள் |
| பாடம் | -25 | கள்ளப் போதனைகளை சமாளிப்பது |
| பாடம் | -26 | பிரசங்கியார்களுக்குப் பயிற்சி |
| பாடம் | -27 | பிரச்சனைகளை கையாள்வது |
| பாடம் | -28 | ஆத்தும ஆதாயம் செய்தல் |
| பாடம் | -29 | புதிய சபைகளை ஸ்தாபித்தல் |
| பாடம் | -30 | பிரசங்கியார்களின் இலக்குகள் |

## பாடம் - 1
# வழி நடத்துனர்கள் தேவை

வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் எப்பொழுதுமே வழிநடத்துனர் தேவைப்பட்டிருக்கிறார்கள். அரசியல், ராணுவம், தொழில், கல்வி, கல்விச்சாலைகள், மதங்கள், மற்றும் குடும்பங்கள் யாவற்றிலும் அவர்கள் மிக முக்கியமான இடங்களில் இருந்திருக்கிறார்கள். ஒரு தேசமோ, தொழிலோ அல்லது வேறு எந்த அமைப்பாக இருந்தாலும் அது உயர்வதும் வீழ்வதும் தங்களுடைய தலைவர்களைப் பொறுத்தே அமையும்.

ஒரு தலைவனைக்குறித்து, அவன் தலைமை ஏற்று நடத்துவதைக் குறித்து நாம் பேசும் போது அப்படிப்பட்ட ஒரு நபருடைய தகுதிகள், செயல் திறமைகள் அதாவது தன்னுடைய நண்பர்கள் சக குடிமக்கள் ஆகியவர்களோடு காரண காரியங்களை விவரித்துப் பேசவும் அவர்களை ஒரு குறிப்பிட்ட திசையில் வழி நடத்தவும் அவர்களுடைய மனதை சம்மதிக்கவும் செய்ய வேண்டும். வேறு வார்த்தையில் சொல்வதென்றால் அப்படிப்பட்ட ஒருவர் மற்றவர்கள் தன்னைப் பின்பற்றும்படி செய்யக்கூடியவராக இருப்பார். தனிப்பட்ட கவர்ச்சியினாலோ பயிற்சியினாலோ அல்லது காலத்தின் தேவையினாலோ ஒருவர் இந்த விதமான தகுதியைப் பெற்றிருக்கும்போது, அவர் மிக பொறுப்பான பதவியில் அமர்த்தப்படுகிறார். அப்படிப்பட்ட ஒருவர் தன்னுடைய செயல்களுக்கு மட்டும் அல்ல, தான் யாரிடமெல்லாம் செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறாரோ அவர்களுடைய செயல்களுக்கும் பதில் சொல்ல வேண்டியவராக இருக்கிறார்.

உண்மையாகவே குறிப்பிட்ட மக்களோ, தேசமோ, ராணுவமோ, தொழிலோ, கல்வி ஸ்தாபனமோ, தன்னுடைய தலைவனை மீறி செயல்பட முடியாது. ஆகவே நல்ல தலைவர்களோடும், தலைமைத்துவத்தோடும் மக்கள் பயன் அடைந்து உயர் நிலை அடைகிறார்கள். மாறாக மக்களை, தன்னைப் பின்பற்றும்படி வஞ்சித்து நடத்துகிறவர்கள். உண்மையாகவே இவர்கள் சுயநலமிக்கவர்களும், பொல்லாதவர்களும் தன் ஜனங்களைக் குறித்து ஒன்றும் கவலைப்படாமல் இருந்து ஞானமற்ற தலைமைத்துவத்தில் மோசமான தீர்மானங்களைச் செய்து தன்னைப் பின்பற்றுவர்களுக்குப் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிடுவார்கள்.

தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறார், அவர் நம்முடைய நன்மைக்காகவே எப்பொழுதும் சிந்தித்து செயல்படுகிறார். நாம் இரட்சிக்கப்படும்படியாக தேவன் அவருடைய குமாரனை இந்த உலகிற்கு

அனுப்பி நாம் மீட்கப்பட்டு பரலோக ராஜ்யத்திற்குள் செல்லும்படியாக அவரை ஜீவிக்கவும் மரிக்கவும் செய்தார் (யோவான் 3:16-17). "...இயேசு நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவான் 14:6). யார் இப்படி பட்ட தலைமைத்துவத்தில் மேலோங்கிச் செல்ல முடியும்? இவ்வுலகில் ஒரு ஆத்மாவும் இல்லை. நாம் பரலோகம் செல்ல வேண்மென்று எதிர்நோக்கியிருப்போமானால் அவரையே நோக்கிப்பார்த்து அவரையே பின்பற்றுவது ஞானமாகும்.

ஆரம்பத்திலிருந்தே தேவன் மனிதனுக்கு பரலோகத்திலிருந்து வழிநடத்துதலை கொடுத்தோடு மட்டுமல்லாமல் இங்கேயும் நல்ல வழிநடத்துனர்களையும் கொடுத்திருக்கிறார். சரித்திரத்தில் தனிச்சிறப்புப் பெற்றிருக்கும் சில மனிதர்களான நோவா, ஆபிரகாம் ஈசாக், யாக்கோபு, யோசேப்பு, தாவீது, சாலமோன், ஏசாயா, எரேமியா தானியேல் போன்றவர்கள் சிலர். இந்த மனிதர்களைக் குறித்தும், இவர்கள் தங்கள் காலத்தில் அடைந்தவைகளைக் குறித்தும் எவ்வளவு பெரிதாகச் சொல்ல முடியும்! இன்றைக்கும் அவர்களால் நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம், கிறிஸ்துவின் காலத்தில் கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வாழ்ந்து அவருக்கு வழிகளை ஏற்படுத்திய யோவான் ஸ்நானகனைக் குறித்து வாசிக்கிறோம். அதன் பிறகு மெய்யாகவே ஒப்புவமையில்லாத தலைவனாக கிறிஸ்து இந்த உலகத்தில் தேவகுமாரனாகப் பிறந்தார். அவர் எதைச் சொன்னாரோ, அதையே செய்தபடியால் அவருடைய குறுகிய வாழ் நாட்களில் அநேகர் அவரிடம் வந்து அவரைப் பின்பற்றினர்.

சிலுவை தனக்கு முன் இருந்ததினாலே நீண்ட காலம் இந்த மாம்சத்தில் இருக்கப் போவதில்லை என்பது கர்த்தருக்குத் தெரியும். அவருடைய பணி தொடர்ந்து நடக்க வேண்டுமென்பதை அறிந்தவராய் அதற்கென்று அப்போஸ்தவர்கள் என்றழைக்கப்பட்ட பன்னிரெண்டு பேரைத் தெரிந்து கொண்டு போதித்து பயிற்சி அளித்தார். புதிய ஏற்பாட்டில் உள்ள மத்தேயு என்ற புத்தகத்தில் பின்வருமாறு வாசிக்கிறோம், (மத்தேயு 10:1-4). "அப்பொழுது அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களை தம்மிடத்தில் வரவழைத்து அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன. முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன் அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின்

குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபெயு, கானானியனாகிய சீமோன் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே". மற்ற இரண்டு அப்போஸ்தவர்கள் பின்னர் இவர்களோடு சேர்க்கப்பட்டனர். இயேசுவைக் காட்டிக் கொடுத்து யூதாஸ் தற்கொலை செய்து கொண்ட பின்பு அவனுடைய இடத்தில் மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டான் (அப்போஸ்தலர் 1). மற்றொருவர் புறஜாதியாருக்கு விசேஷித்த செய்தியாளரான பவுல். கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதலுக்குப் பிறகு அவருடைய அப்போஸ்தலர்கள், பரத்திலிருந்து வரும் வல்லமையைப் பெற்றுக் கொள்ளும் வரை எருசலேமிலே தரித்திருக்கும்படி கட்டளையிட்டார் (லூக் 24:49, அப் 1:8). தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவி அவர்களுக்கு முன்பே வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தார் (யோவான் 14:26). அவர் அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் கர்த்தர் போதித்த யாவற்றையும் நினைவு கூரும்படி அவர்களுக்கு உதவிசெய்வார். மக்களுடைய பாஷைகளில் பேசவும் இயேசு கிறிஸ்துவே தேவனுடைய ஒரே குமாரன் என்று திரளான மக்கள் நம்பவும் பல விதமான அற்புதங்களைச் செய்யும்படியான வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்.

பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்ட பிறகு அப்போஸ்தலர்கள் சுவிஷேசத்தைப் பிரசங்கித்தனர். அதன் விளைவாக சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் தாங்கள் செய்வதற்கும் அதிகமான வேலையிருக்கிறது என்று அறிந்தார்கள். ஆகவே கர்த்தர் அவர்களுக்கு தங்கள் மத்தியிலிருந்து உண்மையுள்ள சகோதரர்களை உதவியாகத் தேர்ந்தெடுக்கும்படி பெலன் கொடுத்தார். அவர்கள் மீது அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து அற்புதங்கள் செய்யும்படியான வல்லமையைப் பெற்றுக் கொள்ளும்படி உதவினார்கள் (அப் 6). சபையின் ஆரம்ப காலத்தில் மற்றவர்களும் பரிசுத்த ஆவியானவருடைய அற்புதங்களை செய்யும் வல்லமையை அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்ததினால் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அப்படி வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் வேறு யாருக்கும் அதைக் கொடுக்க முடியாது. அப்படியாக அற்புதங்கள் அப்போஸ்தலர்கள் மரிக்கும் வரை யார் மீதெல்லாம் அவர்கள் கைகளை வைத்தார்களோ அவர்களும் உயிரோடு இருக்கும் வரை அற்புதங்கள் தொடர்ந்தன. அந்தக்காலகட்டத்தில் புதிய ஏற்பாடு முழுவதும் எழுத்து வடிவிலே கொடுக்கப்பட்டாயிற்று. ஆகவே இந்த விதமான செய்திகள் தேவனிடமிருந்து வந்தன என்பதை நிரூபிக்க அற்புத அடையாளங்கள் தேவையில்லை. விசுவாசமானது இப்பொழுது

அற்புதங்களைக் காண்பதினால் அல்ல, தேவனுடைய வார்த்தையினாலே வருகிறது (ரோம.10:17). மேலும் எழுதப்பட்ட வார்தைகளை வைத்து சராசரி மனிதனும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து போதிக்கப் பட்டியிருப்பது என்ன என்று தெரிந்துகொள்ள முடியும். (2 தீமோ 3:16-17).

அற்புதங்கள் இல்லாத காலத்திலும் தலைமைத்துவத்துக்கான திட்டங்களை தேவன் வைத்திருந்தார். அவரே சபைக்கு ஒரே தலைவராக இருந்தும், சபையை அவருடைய வார்த்தையின்படி நடத்தியும் அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பிறகு ஒவ்வொரு பிராந்திய சபையும் மற்ற சபையிலிருந்து சுயதீனமுள்ளதாக தனக்கென்று வழிநடத்துனர்களை உடையதாக இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அந்தச் சபைகள் ஒருவரோடொருவர் தாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய வார்த்தைகளால் ஆளப்படுகிறோம், என்கின்ற உண்மையின் அடிப்படையில் ஐக்கியப்பட்டாலும், ஒவ்வொரு பிராந்திய சபையும் அதன் அங்கத்தினர்களால் (1தீமோ 3; தீத்து 1) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள தகுதியின்படி மூப்பர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். மூப்பர்களுடைய நடத்துதல்படி உதவிக்காரரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பின் பிரசங்கியார்கள், போதகர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். இது சபையை வழிநடத்துவதற்கான தேவனுடைய திட்டமாயிருந்தது. பின் வரும்பாடங்களில் இதைக் குறித்து ஆழமாகப் பார்ப்போம்.

## பாடம் - 2
# சபையில் மூப்பர்கள்

கடந்த பாடத்தில் எப்படி தேவன் தம்முடைய ஜனங்களுக்கு எப்பொழுதுமே நல்ல வழிநடத்துனர்களைக் கொடுத்தார் என்பதைப் பார்த்தோம். அவர் தம்முடைய சொந்தக் குமாரனையே இந்த உலகிற்கு அனுப்பினார். பின்பு அவர் அப்போஸ்தலர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தைத் தெரிந்து கொண்டு சபையை அதன் துவக்க காலங்களில் நடத்தினார். அவர்கள் சென்ற பின்பு இன்றளவும் தொடர்கின்ற இயற்கையான முறையிலான தலைமைத்துவத்தை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுது நாம் படிக்கப் போகிற சபையில் மூப்பர்கள் என்கிற பகுதிக்கு வருகிறோம்.

ஒரே ஒரு சபைதான் உண்டு. அது உலகம் எங்கிலும் காணப்படவேண்டும். இது கர்த்தருடைய சபை, கிறிஸ்து சபை அல்லது கிறிஸ்துவின் சபை (மத் 16:18-19; எபேசியர் 4:1-6, 5:23-27). இந்த ஒரே சபையைப்பற்றி தான் வேதத்திலே நாம் படிக்க முடியும். இது தேவனால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரே ஒரு சபை. மக்கள் தாங்கள் வசிக்கின்ற பகுதியிலே தேவனைத் தொழுது கொள்ளவும், அவரை சேவிக்கவும் ஏதுவாக சபையானது அநேக சங்கங்களால் ஆனது. (பிராந்திய சபை) இந்த விதமான பிராந்திய சபைகளை குறித்து புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். (உம்) கொரிந்துப் பட்டணத்தில் உள்ள சபை 1கொரிந் 1:2 தெசலோனிக்கேயாவில் உள்ள சபை 1தெச 1:1 மேலும் மற்றவைகளும் ஆகும். ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்ட அநேக அங்கத்தினர்களால் ஆனது (கொலே 1:18, எபே 1:22-23) அவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு ஒரே சரீரத்தில் அங்கமாயிருக்கிறபடியால் இசைந்து வேலை செய்து. ஒரே நாமத்தைத்தரித்தவர்களாக ஒரே விதமாகத் தொழுது கொண்டு ஒரே சுவிஷேத்தைப் போதித்தாலும், ஒவ்வொன்றும் தன்னாட்சியுள்ளது அல்லது சுதந்திரமானது. அவர்கள் சுதந்திரமானவர்கள் என்பதன் பொருள் என்னவென்றால் ஒவ்வொரு பிராந்திய சபையும் தனக்கென்று தலைமைத்துவம் உடையதாக இருக்க வேண்டும். அதாவது 1தீமோ 3 தீத்து 1-ல் சொல்லப்பட்ட தகுதிகள் இருக்கும் பட்சத்தில் அங்கத்தினர்கள் தங்கள் மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் உடையவர்களாக இருக்கலாம்.

வேத வாக்கியங்களிலே பிலிப்பிய பட்டணத்திலிருந்த சபையின் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைப் பற்றி வாசிக்கிறோம் (பிலி 1:1).

தீத்துவை கீரேத்தாத்தீவில் உள்ள ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்களை ஏற்ப்படுத்தும்படி புத்திசொல்லுகிறார் (தீத்து 1:5). பேதுருவும் கூட தன்னை ஒரு மூப்பராக அங்கீகரிக்கிறார். "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும் இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிற தென்னவென்றால் உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து கட்டாயமாயல்ல மனப்பூர்வமாயும் அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச்செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1பேதுரு 5:1-4). மந்தை என்று அவர் இங்கே குறிப்பிடுவது பிராந்திய சபையின் அங்கத்தினர்களே. பிரதான மேய்ப்பர் இயேசுவே.

ஒரு பிராந்திய சபை மூப்பர்கள், உதவிக்காரர்கள் இல்லாமல் இருக்க முடியுமா? முடியும். ஏனென்றால் அதன் அங்கத்தினர்கள் அந்த விதமான தலைமைத்துவப் பொறுப்பிற்குத் தகுதி பெறாமல் இருக்கலாம். ஒரு வேளை அவர்கள் சரீரப் பிரகாரமாக மிகவும் இளையவராகவும், திருமணம் ஆகாதவர்களாகவும் அல்லது திருமணமாயிருந்தாலும் தேவனுக்குக் கீழ்ப்படியும் அளவிற்கு பிள்ளைகள் இல்லாமல் இருக்கலாம் அல்லது ஆவிக்குரிய பிரகாரம் குழந்தைகளாக இருக்கலாம். அந்தவிதமான பொறுப்பை ஏற்பதற்கு மிகவும் இளையவராயிருக்கலாம். இந்தச் சூழ்நிலையில் அந்த சபைக்கு யார் வழிநடத்தக்கூடிய பொறுப்பை ஏற்க முடியும்? மெய்யாகவே ஆண் அங்கத்தினர்கள் (சகோதரர்கள்). இதில் என்ன வித்தியாசம்? வித்தியாசம் என்னவென்றால் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர் அதற்குரிய தகுதியில்லாமல் போனால் பெருமையினால் நிரப்பப்பட்டு எந்தவிதமாக அந்தப் பதவியில் பணியாற்ற வேண்டுமோ அப்படிச் செய்யாமல் போகலாம். சில புருஷர்கள் தாங்கள் தகுதி பெறாத நிலையை அறிந்தும் தாழ்மையோடு சிறப்பாகத் தங்களால் இயன்றவரை இந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற விரும்பினால் செய்யலாம். அவர்கள் தகுதி பெற்ற பின்பு அதன் அடிப்படையில் நியமிக்கப்பட்டால் பிராந்திய சபையில் தேவன் விரும்பிய வண்ணம் மூப்பர்களாக அவர்கள் இருப்பார்கள்.

வேத வாக்கியங்களில் ஒருவர் மூப்பராவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பவுல் பின் வருமாறு எழுதுகின்றார். "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல

வேலையை விரும்புகிறான்". இது உண்மையான வார்த்தை ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும் போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மது பானப்பிரியனும் அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல் பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியபண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிருக்கவேண்டும். (1தீமோ 3:1-7). பவுல் பின்னும் தீத்துவுக்கு சொன்னதாவது: " நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும் நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னை கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன். குற்றஞ்சாட்டப்படாதவனும் ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே(மூப்பராக) ஏற்படுத்தலாம். ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய் குற்றஞ்சாட்டப்படாதவனும் தன் இஷ்டப்படி செய்யாதவனும் முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும் பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும் எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையுள்ள வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்" (தீத்து 1:5-9).

முதலாவது எந்தெந்த பிராந்திய சபையில் மூப்பர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருக்கவேண்டும். ஒரே ஒரு மூப்பர்மட்டும் இருந்த சபையைப் பற்றி நீங்கள்

ஒருபோதும்(வேதத்தில்) வாசிக்க முடியாது. கர்த்தர் ஒரு மனிதர் ஆட்சி, அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு எதிரானவராகயிருந்தார் என்பதே இதன் பொருள். இரண்டாவதாக மூப்பர்கள் ஞானமுள்ள வழிநடத்துனர்களைக் கொடுக்கும்படி சரீரப் பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் முதிர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்த அடிப்படையில் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மூன்றாவதாக மந்தையை வழிநடத்துபவர்கள் மேய்ப்பர்கள் அல்லது மந்தையை நடத்துபவர்கள் என்று அழைக்கப்பட்டனர் (அப். 20:28). அவர்கள் கண்காணிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள். நான்காவதாக மூப்பர்களுக்குரிய தகுதியிலே ஒரே மனைவியையும், நன்னடைத்தையுள்ள பிள்ளைகளையும் உடைய வர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் காண்பிப்பது என்னவென்றால் அவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தையும், பிள்ளைகளையும், கர்த்தருடைய சித்தத்தின்படி நடத்தக்கூடிய தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதே. அவர்கள் மேலும் கனத்தையோ, மகிமையையோ, அல்லது உலகத்திற்குரிய ஆதாயத்தையோ வலியுறுத்தாமல் கர்த்தருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்யக் கூடிய திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

ஆகவே மூப்பர்கள் தங்கள் பகுதியிலுள்ள பிராந்திய சபைக்கு வழிநடத்துனர்களை அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மேலும் தேவ வசனமானது போதிக்கப்படவும் சபையானது தூய்மையாக காக்கப்படவும் கள்ளப்போதனைகள் நிராகரிக்கப்படவும் சபையானது தேவனை உண்மையாய்த் தொழுது கொண்டு சேவிக்கவும் அவர்கள் கவனமாய்ப் பார்க்க வேண்டும். அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறபடியால் சபை அங்கத்தினர்கள் அவர்களை கனம்பண்ணி அவர்களைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

## பாடம் - 3
# சபையில் உதவிக்காரர்கள்

முந்திய பாடத்தில் சபையில் மூப்பர்களைப் பற்றியும் அவர்கள் யார், அவர்களுடைய தகுதிகள் மற்றும் அவர்கள் பணிகள் குறித்துப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இப்பொழுது சபையில் உதவிக்காரர்களைக் குறித்துப் படிக்க விரும்புகிறோம்.

உதவிக்காரர்கள் யார்? வேத வாக்கியங்களின் படி அவர் ஒரு சேவகர் - ஆவிக்குரிய சேவகர். அப்போஸ்தலர் 6 அதிகாரத்திலே அப்போஸ்தலர் களுக்கு உதவும் படியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையே உதவிக்காரர் களின் வேலைக்கு மாதிரியாக எடுத்துக் கொள்கிறோம். அந்த வேதபகுதி யிலே அவர்கள் உதவிக்காரர்கள் என்று குறிப்பிடப்படாவிட்டாலும் அவர்கள் உதவிக்காரர்கள் செய்ய வேண்டிய வேலையையே செய்ததாகத் தெரிகிறது.

பவுல், 1 தீமோ 3ம் அதிகாரத்தில் மூப்பர்களின் தகுதிகளைப் பட்டியலிட்டபின்பு 8 முதல் 13 வசனங்களில் உதவிக்காரர் தகுதிகளையும் குறிப்பிடுகிறார். “ அந்தப்படியே, உதவிக்காரரும் இரு நாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயுமிராமல் நல்லொழுக்கமுள்ளவர்களாயும் விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்படவேண்டும், குற்றஞ்சாட்டப் படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும் அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் எல்லாவற்றிலேயும் உண்மை யுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்த குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும், இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்” (1தீமோ 3:8-13).

பவுலுடைய வார்த்தைகளில் நீங்கள் காண்கிறபடி மூப்பர்களை போலவே யார் வேண்டுமானாலும் உதவிக்காரராக இருக்க முடியாது. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரருடைய தகுதிகளும் செயல்பாடுகளும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்தாலும் இயல்பாகவே மூப்பர்களும் உதவிக்காரும் தங்களுக்குள்ளே மிக நெருக்கமான உறவு உடையவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் அப்படியே இருக்கிறார்கள்,

மூப்பர்களுடைய கவனம் மற்றும் வேலைகள் சபையினுடைய ஆவிக்குரிய தேவைகளைப் பொருத்ததாக இருக்கிறது என்றும் ஆனால் உதவிக்காரருடைய வேலை சபையினுடைய சரீரபிரகாரமான தேவைகளைக் கவனிப்பதாக இருப்பது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப் 6-ம் அதிகாரத்திலே அப்போஸ்தலர்கள் தங்களுக்கு உதவும்படி ஏழுபேரை தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைச் சொல்லியிருப்பதை நினைத்துப் பார்க்கிறீர்களா? அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதைக் காட்டிலும், மனிதர்களுடைய சரீரப்பிரகாரமான தேவைகளை சந்திப்பதிலேயே தங்கள் நேரத்தை செலவிடும்படியாக ஆயிற்று. அந்த ஏழுபேரும் சரீரத் தேவைகளைச் சந்திப்பதிலே உதவும்படியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அப்படியாக அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய தேவைகளில் தங்கள் கவனத்தை செலுத்த ஏதுவாக இருந்தது. இந்த வண்ணமாகவே மூப்பர்களும் உதவிக்காரர்களும் செயல்பட்டார்கள்.

மூப்பர்கள் சபையினுடைய ஆவிக்குரிய தேவைகளை கவனித்து சுவிசேஷம் போதிக்கப்பட்டு, சபையானது பரிசுத்தமாகக் காக்கப்படும்படி கவனமாயிருக்கிறார்கள். உதவிக்காரர் மூப்பர்களுக்கு உதவும்படி சபைக்கு எந்தெந்த வகையிலே உதவ முடியுமோ அந்தந்த வகையிலே உதவும்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சபையிலே ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான தேவைகள் இருப்பதினாலே, குறிப்பாக மூப்பர்கள் ஆவிக்குரிய தேவைகளை கவனிக்கவும் பின்பு அவர்கள் உதவிக்காரர்களை சபையாருடைய தேவைகளை கவனிக்கும்படியும் அல்லது வேறு எந்த வழியிலாகிலும் உதவியாயிருக்கும்படியும் சொல்லலாம். எடுத்துக்காட்டாக சபையானது வாடகைக்கு எடுக்கப்பட்ட இடத்திலோ, அல்லது சொந்தமான இடத்திலோ கூட வேண்டும் என்றிருந்தால் அதற்குரிய ஏற்பாடுகள் மற்றும் அந்த இடத்தை கவனித்தல் போன்ற பொறுப்புகளை உதவிக்காரர்களிடத்திலே ஒப்படைக்கலாம். அவர்கள் மிகவும் கஷ்டத்தில் அல்லது வியாதியாயிருக்கிற சபை அங்கத்தினருக்கு உணவு அளிக்கும்படியாகக்கூட ஏற்பாடு செய்யலாம். மூப்பர்களாகவும் உதவிக்காரராகவும் இருக்கிறவர்கள் கண்டிப்பாக குறிப்பிட்ட தகுதிகளை உடையவர்களாயிருக்க வேண்டும். அது அவர்கள் செய்யும்படியாக நியமிக்கப்பட்ட வேலையை சரீரப்பிரகாரமாகவும், நன்னடைத்தையின் படியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் செய்யத் தேவையான தகுதியுள்ளவர்ளாகயிருக்கிறார்கள் என்பதை உறுதி செய்யும்.

இந்த இரண்டிலும் ஆண்கள் மட்டுமே நியமிக்கப்படும்படியான நிலையில் இருக்கிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இரண்டு

அதற்கு அதிகப்படியான ஆண்கள் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும் ஒருவர் மட்டுமே மூப்பராவதற்குத் தகுதியுடையவராக இருந்தால் அப்படிப்பட்டவரை நியமிக்க முடியாது. உதவிக்காரர்களை நியமிப்பதிலும் அப்படியே. உதவிக்காரர்கள் உதவியாயிருக்க வேண்டியிருப்பதால், மூப்பர்கள் இல்லாவிட்டால் உதவிக்காரர்களும் இருக்கமுடியாது.

மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் இருப்பதற்கு இத்தகைய தகுதியாம்சங்கள் சந்திக்கப்பட வேண்டும் என்றிருப்பதால் ஒருவர் தன்னை ஒழுங்கற்றவராக நடத்தினால், அதாவது ஒழுக்கக் கேடு உள்ளவராகவோ, அல்லது தேவனுடைய சட்டத்தை வேறு எந்த வகையிலும் மீறுபவராகவோ இருந்தால் அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மறுபடி ஒருபோதும் மூப்பராகவோ, உதவிக்காரராகவோ இருக்க முடியாது. இவைகள் ஆயுட்கால வேலைகள் அல்ல ஆனால் எதுவரையிலும் அந்தத் தகுதிகள் சந்திக்கப்பட முடியுமோ அது வரையிலும் அந்தப் பொறுப்புகளை வகிக்கலாம். உதவிக்காரராயிருப் பதற்கான தகுதியாம்சங்களை சற்று ஆழமாகப் பார்ப்போம். பவுல் சொல்கிறார்: உதவிக்காரராகயிருப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இருநாக்கு உள்ளவர்களாயிருக்கக் கூடாது. அதாவது ஒரு நேரம் ஒன்றும் அடுத்த நேரம் இன்னொன்றுமாக பேசக்கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மற்றவர்கள் அவனை நம்பும்படியாகவும் அவன்மீது நம்பிக்கை வைக்கும்படியாகவும் பேசவேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய வேலையை செய்யக்கூடாதபடி மற்றவர்களுக்குத் தன்னை ஒரு மோசமான மாதிரியாகக் காண்பிக்காதபடி (மது) குடிக்கிறவனாகவோ, (மதுபான) குடிகாரனாகவோ இருக்ககூடாது. அவன் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாகவோ, பணம் அல்லது உலகப்பொருட்கள் மீது ஆசையுள்ளவனாகவோ இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட காரியங்களை இச்சிப்பவர்களானால் வாழ்க்கையைப்பற்றிய அவனுடைய தவறான முக்கியத்துவம் மற்றவர்களுக்கும் தெளிவாகும். அப்பொழுது அவன் ஆவிக்குரியவன் அல்ல என்பதை கண்டுகொள்வார்கள். அவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனும், எப்பொழுதும் சுத்த மனசாட்சியுள்ளவனுமாக இருக்க வேண்டும். அவன் விசாரிக்கப்பட்டு சோதிக்கப்பட்டவனாயிருக்க வேண்டும். அவன் நம்பத்தக்கவனும் தவறான அல்லது மோசமானவைகளை செய்தவன் என்று குற்றம் சாட்டபடாதவனாகவுமிருக்கவேண்டும்.

இத்தகைய தகுதிகள் உதவிக்காரர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்களுடைய மனைவிமார்களுக்கும் வேண்டும். அவர்கள் உண்மையுள்ளவர்களாகவும் புறம் பேசாதவர்களாகவும் அல்லது மற்றவர்களைக் குறித்து கட்டுக் கதைகள், தீதான காரியங்கள் பேசாதவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய செயல்களில் ஜாக்கிரதையும், எல்லாவற்றிலும் விசுவாசமுடையவளாகவும் இருக்க வேண்டும்.

உதவிக்காரராகயிருப்பவர்கள் ஒரு முறை மட்டுமே திருமணம் செய்தவராயிருக்கவேண்டும். அதாவது விவாகரத்தாகி மறு மணம் செய்தவராயிருப்பதினால் திருமண வாழ்வில் குழப்பம் இருக்க கூடாது. மற்றவர்களுக்கு மாதிரியாகயிருக்கும்படி தன் பிள்ளைகளையும் குடும்பத்தையும் ஆளவும், நடத்தவும் வேண்டும். இந்தத் தகுதிகளை சந்திக்கக் கூடியவர்களாக இருந்து அவர்கள் உதவிக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டு விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் கர்த்தருடைய காரியங்களுக்காக மிகவும் பிரயோஜனமாயிருப்பார்கள்.

பிலிப்பி பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்கள், உதவிக்காரர்களைக் குறித்து பவுல் இப்படியாக எழுதியிருக்கிறார் (பிலி 1:1-2). எல்லாச் சபைகளுக்கும் இது ஒரு நல்ல மாதிரி. இயற்கையாகவே, வேத வசனங்களில் சொல்லப்பட்டுள்ள தகுதிகளின்படி மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் நியமிக்கக் கூடிய, நிலையிலிருக்கும் சபைகள் கர்த்தருக்கென்று பெரிய காரியங்களைச் செய்யமுடியும். தலைமைத் துவத்தை பொறுத்தவரையில் எங்குமுள்ள சகோதரர்கள் கர்த்தருடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல போராடி பிரயாசப்படவேண்டும்.

## பாடம் - 4
# சபையில் பிரசங்கியார்கள்

இதுவரை நாம் சபையில் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோருடைய வேலைகளைப்பற்றிப் பார்த்தோம். அவர்களுடைய தகுதிகள் ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்தான் மூப்பர்கள், உதவிக்காரர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பிற்கும் குறிப்பிட்ட வேலைகள் போன்றவற்றைப் பற்றிப் பார்த்தோம். இந்தப் பதவிகளுக்குரிய தலைமைத்துவமானது சேவை செய்ய விரும்புகிற ஆண்களைக் கொண்டு மட்டுமே நிரப்பப்பட வேண்டும். தங்களுடைய சித்தத்திற்கு மாறாக ஆண்கள் இப்பதவிகளில் நியமிக்கப்படக் கூடாது.

இப்பொழுது பிரசங்கியார், அவரது பணி மேலும் அவர் எப்படி பிராந்திய சபையில் பொருந்துகிறார் என்பதைப் பார்ப்போம். பிரசங்கியார், தான் ஊழியம் செய்யும் சபைக்கு தலைவனாகவோ அல்லது மூப்பனாகவோ இருக்கும்படி தேவன் அதிகாரமளிக்கவில்லை என்பதைக் கண்டிப்பாக கவனிக்க வேண்டும். ஒரு மேய்ப்பன் பிரசங்கியாக இருக்க முடியும், ஆனால் பிரசங்கியாரெல்லாம் மேய்ப்பனல்ல. மேய்ப்பனென்றால், மூப்பர், கண்காணி, மந்தையை மேய்ப்பவர் என்பதாகும், ஒரு பிராந்திய சபையைப் பொறுத்தமட்டில் அங்கு வேறு மூப்பர்கள் இருந்தால் அவர்கள் மூப்பர்களில் ஒருவராக இருக்கலாம், ஆனால் ஒரு சபையில் மூப்பர்கள் இருக்கும்போது பிரசங்கியும் மற்ற எல்லா அங்கத்தினர்களும் மூப்பர்களின் நடத்துதலின்படியே செயல்பட வேண்டும்.

தேவன் எப்போதும் தன்னுடைய பணியில் பிரசங்கியார்களைப் பயன்படுத்தியிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர்கள் பொதுவாக தீர்க்கதரிசி என்றும் கிறிஸ்துவின் காலத்தில் அப்போஸ்தலர்களென்றும் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லோருமே தேவனுடைய தூதுவர்கள், பிரசங்கிகள் அல்லது போதகர்களாவர்கள். அவர்களெல்லாருமே தங்களைச் சுற்றியிருந்த மக்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துரைக்கிறவர்களே.

ஆரம்ப காலங்களில் சில மிகப்பெரிய பிரசங்கியார்கள் இருந்ததை நாமறிவோம். மனந்திரும்புங்கள் : பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று வருங்காலத்திலே பிரசங்கித்த யோவான்ஸ்நானகனை நாம் நினைவு கூறலாம். அது இப்போது சபையாக சமீபித்திருக்கிறது என்பதை போன்றதே (மத்தேயு 3:1-2). தாங்கள் காலத்திலிருந்த மற்ற அநேக பிரசங்கியார்கள் மத்தியில் பேதுருவும் பவுலும் பெரிய பிரசங்கியார்களாக இருந்தனர். இது

அந்தக் கால கட்டத்தில் மட்டுமே உண்மையாயிராமல் பிற்காலங்களிலும் நல்ல தேவ மனிதர்கள் இன்றளவும் தொடர்ந்து தேவனுடைய முழு ஆலோசனையையும் அறிவிக்கும்படி தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர் தம்முடைய அப்போஸ்தலர்களை அழைத்துச் சொன்னது, "அப்போது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகலஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத்தேயு 28:18-20).

பிரசங்கிப்பதன் வழியாக இந்த மனிதர்கள் கர்த்தருடைய சித்தத்தை மற்ற மனிதர்களுக்குப் பிரசங்கிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்பினார் என்பதை இந்த வார்த்தைகளின் மூலம் நாம் புரிந்துகொள்ள முடியும். ஏதோ அற்புதமான வழியிலே மனிதனுக்குத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவது தேவ திட்டமல்ல. அல்லது பரத்திலிருந்து நேரடியாக மனிதனிடம் பேசுவது அல்லது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வெளிப்பாடு கொடுப்பது தேவனுடைய திட்டமல்ல. இப்படி இருந்தபோதிலும் இன்னும் சில மனிதர்கள் தேவன் எப்படித் தம்மிடம் பேசினார் என்றும் தேவன் எப்படி தமது சித்தத்தை சில விசேஷித்த வழிகளில் வெளிப்படுத்தினார் என்றும், தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் சொன்னார் என்றும் பேசுவதை நாம் கேட்கக் கூடும். அப்படிப்பட்டவர்கள் தவறு செய்கிறார்கள். தம்முடைய வார்த்தைக்கு அப்பாற்பட்டு தேவன் அவர்களிடம் பேசவில்லை. அப்படிச் செய்வது அவருடைய போதனைக்கு மாறானதாகும். மேலும் ஒருவரிடம் ஒரு முறையிலும் மற்றவர்களிடமும் அதே முறையிலும் பேசாமலிப்பதும் தேவன் பட்சபாதமுள்ளவரென்றாகும். ஆகவே ஒட்டு மொத்தமாக எல்லோருக்கும் அவருடைய சித்தத்தை தெரியப்படுத்த அவருடைய எழுதப்பட்ட வார்த்தைகளையும் அவைகளை உண்மையாய் அறிவிக்கிற மனிதர்களையும் பயன்படுத்துகிறார்.

அப்போஸ்தலருடைய நடவடிக்கைகள் புத்தகம் முழுவதும் குறிப்பாக கிறிஸ்தவர்களான சம்பவங்களைக் கவனித்துப்பாருங்கள். நீங்கள் அப்படிச் செய்தால் தேவன் தமது சித்தத்தைக் கேட்பவர்களுக்கு

அறிவிக்கும்படி பிரசங்கியார்களைப் பயன்படுத்தியதைக் காண முடியும். அப்போஸ்தலர்களை நடத்தும் போதும், தூதனோ, கர்த்தருடைய ஆவியானவரோ, பிலிப்புவினிடத்தில் பேசும் போதும் அல்லது பேதுரு தரிசனங்கண்ட போதும் மனிதனே இன்னொருவரிடம் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்துள்ளான் (அப் 8, அப் 10-ம் அதிகாரம்). ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்டோ அல்லது விசேஷித்த வெளிப்படுத்தல் மூலமோ பிரசங்கிக்கப்படவில்லை.

எபிரெய எழுத்தாளர் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எழுதுகிறார் (எபிரெயர் 11:6). ஆனால் விசுவாசம் எப்படி வருகிறது பவுல் நமக்குச் சொல்லுகிறார் ஆகவே விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். இயேசுவையும் அவர் செய்த யாவற்றையுங் குறித்து யோவான் எழுதும் போது: "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்". "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20:30-31).

பவுல் வாலிப பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்குச் சொன்னது: "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும், நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு" (2 தீமோத்தேயு 4:1-21). இவை எல்லாவற்றிலும் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் மக்கள் விரும்பும் போதும் அவர்கள் விரும்பாதபோதும் பிரசங்கியார் தேவ வார்த்தையைப் பிரசங்கிக்க வேண்டும் என யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார் வேறு விதமாகச் சொல்வதென்றால் சத்தியம் மனித குலத்தின் நன்மைக்காகப் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பது என்பது மிக ஜாக்கிரதையான ஒன்றாகும். செய்தி கொடுப்போர் அதோடு ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது (வெளிப்படுத்தல் 22:18-19). பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் குறித்துச் சொல்லும்போது, "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது

வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னது போல மறுபடியும்சொல்லுகிறேன் நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலாத்தியர் 1:8,9). பவுல் சொன்னதென்னவென்றால் ஒரே தூய்மையான சுவிசேஷம் கலாத்தியருக்குப் பிரசங்கிக்கப்பட்டது என்பதுதான். இந்தச் சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும்படியாக அவர் தானே மறுபடியும் வந்து வேறு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலோ அல்லது முன்பு பிரசங்கிக்கப்பட்டதிலிருந்து சற்று வித்தியாசமான சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலோ அல்லது தேவ தூதனே கூட வானத்திலிருந்து வந்து வேறு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலோ அப்படிப்பட்ட கள்ளபோதகன் தேவனுக்கு முன் சபிக்கப்பட்ட வனாயிருக்க வேண்டுமென்கிறார். பவுலைப் பற்றி அது உண்மையானால் நம்மிடத்திலும் அது அப்படியே உண்மையாயிருக்காதா?

பிரசங்கிப்பதிலே அநேக காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதாலும், சபையை நேசிப்பதாலும் மனிதர்களின் ஆத்துமாக்களை நேசிப்பதாலும் பிரசங்கிக்க வேண்டும். அவன் ஏதாகிலும் ஒன்றைச் செய்ய வேண்டுமென்றோ அல்லது பிழைப்புக்காகவோ பிரசங்கிக்கக் கூடாது. பிரசங்கியாக இருப்பது எப்போதுமே எளிதானதொன்றல்ல. அநேக தியாகங்கள் அதற்காக செய்யவேண்டும். ஆனால் அநேக ஆசீர்வாதங்கள் தேவனுடைய வார்த்தையை உண்மையாப் பிரசங்கிக்கிறவர்களுக்கு உண்டு.

## பாடம் - 5

# சபையில் போதகர்கள்

இதுவரை சபையில் மூப்பர்கள் உதவிக்காரர்கள் மற்றும் பிரசங்கியார்கள் மேலும் சபையில் அவர்களுடைய தலைமைத்துவப் பங்கு என்ன என்பதைக் குறித்துப் பார்த்தோம். ஒவ்வொருவருக்கும் செய்யும் படியாக மிக முக்கியமான வேலை உண்டு. இதை நாம் மறக்க விரும்பவில்லை. மூப்பர்களும் உதவிக்காரர்களும் சபையினுடைய அமைப்பிலே மனுஷீகமான பங்கை வகிக்கிறார்கள். அதே சமயம் பிரசங்கியார்கள் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதிலே விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சபையிலே அடுத்தபடியாக தலைமைத்துவம் உள்ள பொறுப்பு போதகனாயிருப்பது. இந்த வேலை பிரசங்கியாருடைய வேலை போன்றதே ஆனால் இது அநேக சபை அங்கத்தினர்களை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டியதொன்றாகும். ஒருவேளை இதை சிறப்பாகச் சொல்வதென்றால் எல்லா பிரசங்கியும் போதகர்களே. ஆனால் எல்லா போதகரும் பிரசங்கியார் அல்ல ஆண்கள் மட்டுமே பிரசங்கியாராகத் தகுதி பெற முடியும் ஆனால் ஆண்களும், பெண்களும் போதிக்கிறவர்களாக இருக்க முடியும். இது நாம் தொடர்ந்து படிக்கும் போது விவரிக்கப்படும்.

பொதுவாக சபையார் எல்லோரும் சேர்ந்திருக்கும்போது பிரசங்கம் செய்யப்படும். ஆனால் வகுப்பறையிலே தனிப்பட்ட முறையில் (ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ) போதிக்கப்படும். இவை இரண்டுமே வேத வசனங்களில் மிக தெளிவாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. சான்றாக, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தேகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் பெரும் திரளான மக்களுக்குப் பிரசங்கித்தார்கள். குறிப்புகளிலே பார்க்கும்போது கேட்டவர்களில் மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்படிந்தார்கள் (ஞானஸ்நானம்) என்று பார்க்கிறோம் (அப்போஸ்தலர் 2:41). தனிப்பட்ட வகையில் போதிப்பதற்குச் சான்றாக ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவை தனியே அழைத்துக் கொண்டு போய் அவனுக்கு தேவனுடைய வார்த்தையை மேலும் சரியாக போதித்தார்கள் (அப்போஸ்தலர் 18:24-28).

கர்த்தருடைய சபையானது துவங்குகிறபோது, விசேஷமாக சபையானது உலகத்தில் பலமுள்ளதாக இல்லாத பட்சத்தில் அதன் தொழுகைகளை சிறிய வீட்டிலோ அல்லது கூடத்திலோ நடத்துவார்கள்.

அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரசங்கம் போதிக்கிற முறையிலே செய்வார்கள். ஆனால் சபை வளர்ச்சி அடைந்தபோது அங்கே பிள்ளைகளோடு கூட குடும்பங்களும் அமர்ந்து கேட்கும்போது பிள்ளைகளை தனியே ஒருவகுப்பறையில் அமரச்செய்து அவர்களுக்குப் போதிப்பது சரியான முறையாகும். ஒன்றுக்கும் மேற்பட்ட வகுப்புகள் சிறுவர்க்காக நடத்தலாம். சபையிலே போதுமான இடவசதிஇருக்குமானால் வாலிபர்களுக்கு உரிய வகுப்பு, பெண்களுக்கான வகுப்புகள் பெரியவர்களுக்கான வகுப்புகள் கூட நடத்தலாம். இந்த விதமான அமைப்பிலே சிறுவர்கள் வகுப்பை ஒரு ஆணோ, அல்லது பெண்ணோ நடத்தலாம், ஆனால் அநேக சமயங்களில் இந்த விதமான வகுப்புகளை பெண்களே நடத்துகிறார்கள். ஒரு பெண் பெண்களுக்கான வகுப்பை நடத்தலாம். வளர்ந்த ஆண்களும், பெண்களும் கலந்த ஒரு வகுப்பை ஒரு ஆண் (இரட்சிக்கப்பட்ட) மட்டுமே நடத்த வேண்டும். எல்லா வயதினரும் சத்தியத்தில் வளரும்படியாக இதுபோன்ற வகுப்புகள் அவசியமானதே, எல்லா வயதினரும் ஒன்றாக கூடும்போது கற்றுக்கொள்ளும்படியாக எல்லாருடைய ஆர்வத்துக்கும் ஏற்றாற்போல் ஒரு போதகரோ அல்லது பிரசங்கியரோ ஒரு குறிப்பிட்ட போதனையினால் அவர்கள் எல்லாரையும் திருப்தி செய்வது கடினம்.

தேவனுடைய வார்த்தை போதிக்கப்படும்போது அதனுடைய தாக்கம் எல்லாருடைய மனதிலும் மிகப்பெரிய அளவில் இருக்கும் படியாக அவைகளை வகுப்புகளாகப் பிரித்து நடத்துவது அவசியம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் போதிக்கிறவர் அந்தந்த வயதினருக்கு ஏற்றாற்போல் போதிக்கலாம். இது கல்வித்துறையில் இருக்கிறர்களுக்குத் தெரிந்ததுதான் பள்ளிகளிலே வகுப்பு வகுப்பாகப் பிரித்து நடத்துகிறார்கள்.

வகுப்புகளாக நடத்தும் சூழ்நிலையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதிக்கின்ற வாய்ப்பு இருப்பது மட்டுமல்லாமல் வீடுகளிலும் தங்கள் நண்பர்களுக்கு தனிப்பட்ட முறையில் போதிக்கலாம். அநேகர் பிரசங்கிப்பதில் உள்ள ஆர்வத்தை சொல்லுகிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையிலோ அல்லது வகுப்பறையிலோ போதிப்பது குறித்து ஆர்வம் காட்டுவதில்லை. இது ஒரு வகையான சேவை மட்டுமே, முக்கியமானதென்றும் மற்றவை அப்படியல்லவென்றும் நினைக்கும்படியாக இருக்கிறது. உண்மையாகவே முடிவில் பார்த்தால் பிரசங்கிப்பதை விட போதிப்பதே அதிக முக்கியத்துவம் உள்ளதாக உள்ளது. போதிப்பது போலல்லாமல் ஒரு கூட்டத்தாருக்குப் பிரசங்கிப்பது என்பது ஒருவரையறைக்குட்பட்டதாகவே இருக்கும். ஒரு வகுப்பறையில் அல்லது ஒருவருக்கு தனியாக போதிக்கையில் ஆசிரியர் அவர்களுக்குள்ள

பிரச்சனைகள் கேள்விகள் போன்றவற்றை தெளிவாக கையாள முடியும். பெரிய சபைகளிலே அதனுடைய பலம் அவர்களுக்கு வகுப்பறையில் போதிக்கப்பட்டதாக இருக்கிறது.

போதகராக இருப்பதிலே பல சாதகங்கள் இருக்கின்றன. சபையினுடைய எல்லா அங்கத்தினர்களும் ஏதாவதொரு நிலையில் போதிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் யாரிடத்திலும் பண உதவிபெறாமல் செய்ய முடியும். வேறு வார்த்தையில் இதைச் சொல்வதென்றால் ஒருவர் தங்கள் வாழ்க்கைக்காக வேறு வேலை செய்து கொண்டே கர்த்தருடைய நாளில் ஏதாவதொரு வகுப்பில் போதிக்கலாம். அவர் மேலும் தனிப்பட்ட வேலைகளைச் செய்யலாம். வேலை செய்கிற இடத்தில் நண்பர்களுக்கு போதிக்கலாம். கைப்பிரதிகள் மூலமாக போதிக்கலாம், அவர்களுடைய நல்ல வாழ்க்கையின் மூலம் போதிக்கலாம். நோயாளிகளைச் சந்திக்கலாம். இந்த விதமான அநேக வழிகளில் போதிக்கலாம். பவுல் சொல்லுகிறபடி சபையிலே ஒருவர் மூப்பராய் இருப்பதற்கான தகுதிகளில் சரியாக போதிப்பதும் ஒன்று (1 தீமோத்தேயு 3:2). அதாவது ஒருவர் தேவனுடைய வார்த்தையை பொதுக் கூட்டங்களிலும், பிராந்திய சபையிலும் மூப்பராக இருக்கும்படி போதிக்க வேண்டும். போதிக்கிற திறமை ஒருவருக்கு இல்லாத பட்சத்தில் அவர் எப்படி இப்படிப்பட்ட பொறுப்புகளில் இருப்பதை நினைக்க முடியும். அது கூடாத காரியமாக இருக்கும். மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது ( 2 தீமோத்தேயு 2:1-2) தேவனுடைய சத்தியத்தைப் பொறுத்த வரையில், கிறிஸ்தவர்களுக்கு அதுவே முக்கியம். நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு சத்தியத்தை, அவர்கள் மற்றவர்களுக்கு போதிக்கும்படியாக போதித்துக் கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களாக இருக்கிற நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளரும்படி தேவனுடைய சித்தத்தை நமக்காகக் கற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் மற்றவர்களுக்கு அதை போதிக்கும் போதும் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளருகிறோம். மாணவனை விட ஆசிரியரே அதிகம் கற்றுக் கொள்ளுகிறார் என்பது பிரசித்தமான உண்மை. ஏனென்றால் அவர் தன்னுடைய மாணவர்களுக்கு போதிக்கும் படியாக தயாராக இருக்கும்படி முன்னமே வேதவசனங்களை கற்றுயிருக்க வேண்டும். ஆனால் ஒருவர் தான் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்கு போதிப்பதில் தவறுவாரானால் படிப்படியாக அவர் தான் கற்றுக்கொண்டதை மறந்து விடுவதோடு மற்றவர்கள் தனக்கு வேதத்தினுடைய ஆரம்ப மூல உபதேசங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டிய நிலைக்கு வரக்கூடும். இதைக்குறித்து எபிரேயர் புத்தக எழுத்தாளர் இவ்விதமாக சொல்லுகிறார்:

"காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக் கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர் களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரேயர் 5:12-14). இது ஒருவர் இவ்வாறிருப்பதைக் காண்பது ஒரு துக்கமான நிலையாக இருக்கும். தன்னை மிகுந்த துக்கமான நிலையில் காணக்கூடியதாகும். தயவு செய்து இந்த நிலை உங்களுக்கு நேரும்படி விட்டுவிடாதீர்கள்.

கர்த்தருக்கு போதகர் அநேகர் தேவை. இதுவரையில் நீங்கள் கர்த்தருக்குக் கீழ்படியாதிருந்தால் கீழ்படியும்படி வேண்டுகிறேன். கர்த்தருடைய சித்தத்தை நன்கு கற்று மற்றவர்களுக்கு அதை போதியுங்கள்.

## பாடம் - 6
# பெண் போதகர்கள்

இந்தத் தொடர் பாடங்களை நாம் படிப்பதற்கான நோக்கம், இன்றைக்கு தேவன் அவருடைய சபையில் எந்த விதமான தலைவர்கள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ளவே. தேவனுடைய சித்தத்திற்கு மாறாக அலுவல்களையும் பொறுப்புகளையும் உருவாக்குவதில் நமக்கு விருப்பமில்லை. நாம் செய்யும்படியாக தேவன் நமக்குக் கொடுத்த வேலைகளை அவர் எந்த விதமாக செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அந்த விதமாகவே செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அது அவருடைய விருப்பத்திற்கு குறைவானதாகிவிடும்.

ஒவ்வொரு சபையிலும் அங்கத்தினர்களை நடத்துவதற்கு மூப்பர்களும், உதவிக்காரர்களும் வேண்டுமென்று தேவன் சொல்லியதைப் பார்த்தோம். அப்படியென்றால் சபையில் தகுதியுள்ள ஆண்கள் (சகோதரர்கள்) இருந்தால் இந்த பதவிகளுக்கு அவர்களை நியமிக்கலாம். அப்படியில்லாவிட்டால் தகுதியுள்ளவர்களை நியமிக்கும்வரை சகோதரர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்பட வேண்டும். மேலும் மூப்பர்களின் கீழ் பிரசங்கியார்களும், போதகர்களும் மற்ற அங்கத்தினர்களோடு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தப் பாடங்களை நிறைவு செய்த பின்பு சபையில் பெண்கள் நடத்துனர்களாகவும், போதகர்களாகவும் இருப்பதைக் குறித்து பார்க்கலாம். கடந்த பாடத்திலே பெண்கள் எப்படி தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யலாம், பிள்ளைகளுக்கு வகுப்புகளிலே போதிக்கலாம், மேலும் மற்ற ஸ்திரீகளுக்கு (பெண்கள்) வகுப்புகளிலே போதிக்கலாம் என்பதைக் குறித்து வேத வசனங்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பார்த்தோம். இப்படி செய்வதன் மூலம் அவர்கள் ஒரு தலைமைத்துவப் பொறுப்பை எடுத்துக் கொண்டாலும், அது மூப்பர்கள் மேற்பார்வையிலேதான் நடக்கும்.

வேதம் சபையிலே ஸ்திரீகள் அமைதலாக இருக்க வேண்டும் என்று தெளிவாகப் போதிக்கிறது. 1 கொரிந்தியர் 14:33-35 "தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலும் அப்படியே இருக்கிறது. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும்

அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே". மற்றும் 1தீமோத்தேயு 2:11-12 "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்". இந்த வசனங்களில் சொல்லுவதை எல்லாம் பார்க்கும் போது அதிலே சொல்லப்பட்டியிருக்கிற மையக்கருத்து என்னவென்றால் புருஷர்கள் மீது ஸ்திரீகள் அதிகாரஞ்செலுத்தக் கூடாது என்பதே. ஆண்களும் பெண்களும் கலந்து இருக்கிற சபையிலே அவர்கள் பிரசங்கிக்கவோ போதிக்கவோ கூடாது. மாறாக ஒரு வகுப்பிலே சபையினுடைய ஆண் அங்கத்தினர் ஒருவர் போதித்துக் கொண்டிருக்கும்போது ஒரு சகோதரியை ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்படி அழைக்கலாம், அல்லது அவர்கள் ஒரு கேள்வி கேட்க விரும்பினால் கேட்கலாம்.

எந்த சந்தர்ப்பத்திலும் ஸ்திரீயானவள் புருஷனுடைய அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளவோ, அல்லது கட்டுப்படுத்தவோ கூடாது. அவள் தன்னுடைய கணவனுக்கோ, பெற்றோர்களுக்கோ கட்டுப்பட்டவளாக இருக்கிறாள். பொதுவான இடங்களில் தொழுகை நேரத்தில் மற்றவர்களோடு சேர்ந்து பாடலாம். ஆனால் பாடலை நடத்தவோ, அல்லது தனியாகப் பாடவோ கூடாது. மாறாக தொழுகின்ற மற்ற யாவரோடும் சேர்ந்து தேவனைத் துதித்துப் பாடலாம். அப்படிச் செய்வதன் மூலம் எந்த வழியிலும் புருஷனுடைய அதிகாரத்தைப் பறித்துக்கொள்வதாகவோ, புருஷர்கள் மீதோ அல்லது சபையினுடைய தலைவர்கள் மீதோ அதிகாரம் செலுத்துவதாகாது.

இயேசுவானவர் அப்போஸ்தலர்களை அழைத்தபோது மத்தேயு 10-ல் சொல்லப்பட்டபடி ஆண்களை மட்டுமே அழைத்தார். சுவிசேஷம் உலகமெங்கும் கொண்டு செல்லப்படவேண்டும் என்ற அந்தக் கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுத்தார் (மத்தேயு 28:18-20). நீங்கள் அப்போஸ்தல நடபடிகள் அல்லது புதிய ஏற்பாடு முழுவதையும் படித்துப் பார்த்தால் பொதுவாக எந்த இடத்திலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், பெண்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் என்று காண முடியாது. கிறிஸ்தவ பெண்கள் பிராந்திய சபைகளிலே மூப்பர்களாகவோ, உதவிக் காரர்களாகவோ சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது

கிடையாது. இன்றைக்கு மத சம்மந்தப்பட்ட உலகிலே பெண்கள் பிரசங்கிகளாகவும் சில சபைகளின் அமைப்பிலே பங்கேற்பவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால், கிறிஸ்துவின் சபை, கர்த்தருடைய ஒரே சபையிலே இப்படிப்பட்ட நிலையை நீங்கள் காண முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுமானால் அந்த சபை அல்லது சபைகளை நீங்கள் குறித்துக் கொண்டு அவைகள் சத்தியத்தை விட்டு விலகி சென்று விட்டதாகச் சொல்லலாம். பொது இடங்களிலே பிரசங்கிக்கிற அல்லது சபையிலே நேரடியாக பொறுப்புகளை எடுத்துக் கொள்கிற ஸ்திரீகள் நேரடியாக வேதத்திற்கு முரண்படுகிறார்கள்.

அப்படியென்றால் ஸ்திரிகள் குறைவானவர்களா? தேவன் அவர்களை விட்டுவிட்டாரா? அவருடைய சபை புருஷர்களின் தேவைகளை மட்டுமே சந்திக்கின்றதா? மேலும் புருஷர்களுக்கு ஸ்திரீகள் மீது மேலான பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஸ்திரீகள் சபையிலே எப்பொழுதும் இரண்டாம் தர கிறிஸ்தவர்கள் என்று அர்த்தமா, அல்லது அவர்களுக்கு சபையிலே தலைமைத்துவம் என்று வரும்போது தரமே இல்லை என்று பொருளா? இல்லை, இவைகளில் எதுவும் உண்மையில்லை. உண்மை என்னவென்றால் தேவன் ஆண்களுக்கு குறிப்பிட்ட வேலைகளும் பெண்களுக்கும் கூட குறிப்பிட்ட சில வேலைகளும் கொடுத்திருக்கிறார். ஏன் ஒருவர் இன்னொரு இடத்தையும் இன்னொருவர் வேலையையும் எடுத்து கொண்டு செய்ய வேண்டும்? இரு பாலருக்கும் சபையிலே முக்கியமான வேலைகள் உண்டு. தேவன் அவர்களுக்குக் கொடுத்த வேலைகளைச் செய்தால், அவர்கள் தேவனுக்கென்று பெரிய வேலைகளைச் செய்வார்கள், அங்கே இசைவும், சமாதானமும் இருக்கும். எப்படியிருப்பினும் சாத்தான் இவர்களுக்குள் புகுந்து சில புருஷர்கள் ஸ்திரீகளையும் தூண்டிவிட்டு இதைப் பெரிய பிரச்சனையாக்கி ஒருவர் வேலையை இன்னொருவர் ஏன் செய்யக் கூடாது என்று கேட்க வைப்பான், உண்மை என்ன வென்றால் தேவனுக்கு மிக நன்றாகத் தெரியும் அவருடைய வழி சரியானது மட்டும் அல்ல, அதுவே மிகவும் சிறந்ததும் ஆகும். நீங்கள் வேதாகம சரித்திரத்தை சற்று கவனித்துப் பார்த்தால் பழைய ஏற்பாட்டு காலத்திலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும் மிகப் பெரிய ஸ்திரீகள் இருந்திருப்பதைக் கவனிக்க முடியும். இன்றைக்கு பெண்கள் செய்ய வேண்டிய பெரிய வேலைகள் உண்டு அவர்கள் விரும்புவதைக் காட்டிலும், அது பெரியதாகவும் இருக்க முடியும் எப்போதென்றால் தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கிற வழிமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் செய்யும்போது. புருஷர்கள் விஷயத்திலும் இதுவே உண்மை. ஸ்திரீகளும் புருஷர்களும் பொதுவாக அவர்கள் சக்தியிலிருந்து மிகவும் பின்னிட்டுப்போய்விடுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களைக்

கட்டுப்படுத்தி செயல்பட்டாலும் தங்களுக்கென்று எல்லைகளை வகுத்துக்கொண்டு, தங்களைச் சுற்றி தடைகளை உருவாக்கிக் கொண்டு தங்கள் வாழ்வில் விசுவாசமில்லாத ஒரு நிலையை வெளிப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் ஸ்திரீகள் தங்களால் எத்தனை பெண்களுக்குப் போதிக்க முடியுமோ, எத்தனை சிறுவர்களுக்கும், வாலிபப் பெண்களும் போதிக்க முடியுமோ தனிப்பட்ட முறையில் எவ்வளவு ஊழியம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்ய வேண்டுமென்று அனுமதிக்கிறார் அவர்கள் செய்யக்கூடிய எண்ணற்ற நற்கிரியைகள் உண்டு.

வியாதியஸ்தர்கள், வயதானவர்கள், அனாதைகள் மற்றும் தேவையுள்ளவர்களை கவனிக்கலாம். கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதிரிகள் சிலர் முயற்சித்து போதிப்பதிலும் பிறருக்குச் சேவை செய்வதிலும் பெயர் பெற்றவர்கள், நிச்சயமாகவே ஒவ்வொரு நல்ல மூப்பர், உதவிக்காரர், பிரசங்கியார் அல்லது தேவ ஊழியர்களுக்கு மிகவும் தேவபயம் உள்ள ஸ்திரீகள் இருந்திருக்கிறார்கள். தேவன் தாமே கொடுத்த வேலையைச்செய்வதற்கு அப்படிப்பட்ட ஸ்திரீகள் நமக்கு இன்னும் நிறையத் தேவை, இது செய்யப்படுமானால் கர்த்தருடைய சபை முன்பிருந்ததைவிட சிறப்பாக வளரும்.

மற்ற ஸ்திரீகளோடு சேர்ந்து ஸ்திரீகளுக்கு போதிக்கவும், தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யவும் மேலும் இது போன்ற நற்கிரி கைகள் செய்யவும் பெண்கள் நம்மிடம் நிறைய இருக்கின்றார்களா? ஆம், இப்படிப்பட்டவர்கள் நம்மிடம் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கர்த்தருடைய சபையில் விடுபட்டவர்கள் என்று குறைச் செல்லவோ குற்றம் சாட்டவோமாட்டார்கள்.

இப்படிப்பட்ட சேவை மற்றும் பெரிய ஈடுபாடான சவாலையும், கிறிஸ்தவசகோதரிகளாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் அப்படி ஆகும்படி அதிகமாய்க் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் கிறிஸ்துவிலே விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்றால் அவர் உங்களை இரட்சிப்பார் (மாற்கு 16:16).

பாடம் - 7

## பிரசங்கியாராவது எப்படி

தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர் எப்படிப்பட்ட தலைவர்கள் தேவை என்கிறார் என்றும் இன்றைக்கு அப்படிபட்ட தலைவர்களை எப்படிபெற்றுக்கொள்வது என்றும் தெரிந்து கொள்வது முக்கியம். தவறான தலைவர்கள் தங்கள் போதனை மற்றும் வாழ்க்கையின் மூலம் வஞ்சிக்கக்கூடும். அவர்கள் உங்களை கிறிஸ்துவுக்கு பதிலாக தங்களைப் பின்பற்றும்படி ஊக்கப்படுத்த முடியும். மாறாக ஒரு உண்மையான தலைவன் நீங்கள் பரலோகம் செல்வதற்கு உதவியாக இருக்க முடியும். நிச்சயமாகவே இதைப் படித்ததின் விளைவாக, இதை படித்துக்கொண்டிருக்கிற உங்களில் சிலர் தேவனுடைய ராஜ்யமாகிய சபையிலே தலைவர்களாக வர விரும்பலாம். சபையிலே மூப்பர் உதவிக்காரர், பிரசங்கியார், போதகர் மற்றும் பெண்கள் போதிப்பதிலே ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் படித்தோம். ஆனால் பிரசங்கியாரும் அவருடைய பணியும் எல்லாவற்றைக்காட்டிலும் மிக முக்கிய மானதாயிருப்பதால் இந்தத் தலைப்பின் கீழ் இதைக் குறித்து அநேக பாடங்கள் படிக்க விரும்புகிறோம். இந்த பாடத் தொடர்களை நாம் படிக்கும் போது பிரசங்கியாரின் வாழ்க்கையில் உள்ள பலவற்றைக் குறித்துப்பார்க்கப் போகிறோம். அதாவது அவருடைய குடும்பம், அவருடைய பயிற்சி, அவருடைய பழக்க வழக்கங்கள் மேலும் அவருடைய போதனைகள் போன்றவைகள்.

பிரசங்கியார்களாக மாறுவது பற்றிய சிந்தனையோடே இதைத் தொடங்குவோம். உலகத்திலே யார் பிரசங்கியாராக வேண்டுமென்று விரும்புவார்கள் என்று ஆச்சரியப்படலாம். இப்பொழுது ஏற்கனவே அநேக பிரசங்கியார் இருக்கிறார்கள் மேலும் சந்தேகமில்லை அநேகர் வேறு வேலை செய்வதை விட பிரசங்கியாராவதை விரும்புவர். கர்த்தரைப் பொறுத்தவரையில், மேலும் உண்மையாய் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் பார்வையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதே இந்த உலகில் மிக பெரிய வேலையாக கருதப்படும். அது மிகப்பெரிய வேலை ஏனென்றால் ஒருவர் தேவனுடைய வேலையைச் செய்கிறார். அவர் மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துக்கொள்ள உதவுகிறார். அவர் ஆண்கள் மற்றும் பெண்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட சிறப்பாக உதவி செய்கிறார். மேலும் அவர்கள் தாங்கள் நித்தியத்தை எங்கே கழிக்க வேண்டுமென்று தீர்மானிக்க உதவுகிறார் (மாற்கு 16:15-16) (ரோமர் 10:13-15). இது மிக உன்னதமான நித்தியவேலை.

ஆனால் ஒருவர் எப்படி பிரசங்கியாகிறார்? அவர் பிரசங்கியாராக மாறுவதற்கு தீர்மானிக்கிறாரா? அவர் பிரசங்கியார் ஆகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறாரா? அவர் தேவனிடமிருந்து விஷேத்த அழைப்பு ஏதாகிலும் பெறுகிறாரா? அநேக பிரசங்கியார் கிறிஸ்தவ குடும்பப் பின்னனியிலிருந்து வருகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால் தகப்பனும் தாயும் கிறிஸ்துவுக்கு விசுவாசிகள்,கர்த்தருக்கு கீழ்படிந்து இருக்கிறார்கள் அவர்கள் கிறிஸ்துவின்சபையில் அங்கத்தினர்கள். அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபையோடே சேர்ந்து தொழுதுகொள்கிறார்கள். ஒரு வேளை ஒரு மகன் இருந்து வளரும் போது தன்னுடைய பெற்றோர்களாலும் மற்ற நல்ல கிறிஸ்தவர்களாலும் நல்ல தாக்கத்தைப்பெற்றால் அப்படியாகலாம். தான் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து கிறிஸ்தவனாகும்போது பிரசங்கியாராக விரும்பலாம். பல சமயங்களில் கர்த்தருடைய பந்தியை சபையாருக்குக் கொடுக்கவும், ஜெபிக்கவும் மற்ற வழிகளில் உதவியாக இருக்கவும் வாய்ப்பு அளிக்கப்படலாம். இது அவரை அதிகமாக சபையில் ஈடுபாடுள்ளவராக்கி போதிக்கவும் பிரசங்கிக்கவும் ஊக்கப்படுத்தலாம். இது ஒரு நல்ல மாதிரியான சந்தர்ப்பம். அநேக வாலிபர்கள் சபைக்குத் தானகவோ, நண்பர்கள் மூலமாகவோ அல்லது வேதாகம அஞ்சல் வழிபாடத்தில் சேர்ந்து பயில்வதன் மூலமாகவோ வருகிறார்கள். சபையோடும் தங்கள் தனிப்பட்ட படிப்பின் மூலமாகவும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய அவர்கள் தீர்மானிக்கிறார்கள். பிராந்திய சபை பிரசங்கியார்களால் அவர்கள் கவரப்பட்டு தங்களைச் சுற்றிலுமிருக்கிற இரட்சிக்கப்படாத மக்கள் இரட்சிக்கபடவேண்டுமென்கிற அக்கரையில் பிரசங்கியார் ஆக வேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

மற்றவர்கள் மற்ற சபைகளில் கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள். இவர்கள் வயதில் மூத்தவர்களாயிருக்கிறார்கள். முன்னமே பிரசங்கித்த அனுபவம் பெற்று இருக்கிறார்கள் ஆகவே கர்த்தருடைய சபையில் பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது.

சத்தியமில்லாத சபைகளிலிருந்து வந்த இவர்களிலே சிலர் தேவன் தங்களை பிரசங்கிக்க விசேஷமாக அழைத்தார் என்று நம்புகிறார்கள். அப்படிப்பட்ட பிரசங்கியர்களைக் குறித்து எல்லா விதமான கதைகளும் சொல்லப்படுகின்றன. சிலர் கர்த்தர் அவர்களிடத்தில் உண்மையாகவே பேசினார் என்றும் எண்ணுகிறார்கள். வேறு சிலர் ஒரு அடையாளத்தை பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார்கள். சிலர் சொப்பனம் கண்டதாகவும், வேறுசில காரியங்களையும் சொல்கிறார்கள். உண்மை என்ன வென்றால் கர்த்தர் எவரையும் தனிப்பட்ட விதத்திலோ அல்லது

அற்புதமான வழியிலோ இவர்கள் சொல்கிற எந்த வழியிலும் இந்த நாட்களிலும், காலங்களிலும் யாரையும் அழைக்கவில்லை. அவருடைய வார்த்தைகளிலுள்ள கட்டளைகளின் மூலமாகவே தேவன் நம்மைப் பிரசங்கிக்க அழைக்கிறார். அந்த அழைப்பு எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் நகரில்பிரசங்கித்த போது திரளான மக்கள் தாங்கள் என்னசெய்ய வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் சொன்ன பதிலை பின்வருமாறு வாசிக்கிறோம். "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர்வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி" ....(அப்2:38-39).

எபேசியர்களுக்கு பவுல், அவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்கிறார் (எபேசியர் 4:1). தெசலோனிக்கேயருக்கு பவுல் சொல்வது "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்"(1 தெச 2:12). ஆனால் எப்படி தேவன் அவர்களை அழைத்தார். பவுல் தெசலோனியருக்கு சொல்லுவதன் மூலம் பின்வருமாறு பதில் அளிக்கிறார் "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச 2:14). ஆனால் அவர்கள் எப்படி சுவிஷேத்தினால் அழைக்கப்பட்டார்கள். சுவிசேஷம் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டு அதன் மூலமாக அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முன்பே சொன்னபடி அழைக்கப்பட்டார்கள்? "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு; என்னிடத்தல் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்தேயு 11:28-30).

ஆகவே இந்த அழைப்பைக் குறித்து அற்புதமாகவோ அல்லது இயல்புக்கு மாறாகவோ ஒன்றுமில்லை. கிறிஸ்து சொன்னதை

கவனித்துப்பாருங்கள்: "வந்து என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" கிறிஸ்துவினிடத்தில் வந்து கற்றுக்கொள்ளும் போது என்ன நடக்கிறது? நாம் அவரிலே விசுவாசிகளாகிறோம். கிறிஸ்துவின் நற்செய்தியாகிய அவருடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதல் பற்றி பிரசங்கிக்கப்படுவதன் மூலம் சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நாம் அழைக்கப் படுகிறோம். கிறிஸ்துவை விசுவாசிக்கவும், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்யவும் நம்முடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெறவும் அழைக்கப்படுகிறோம் (மாற்கு 16:16, அப்2:38). கர்த்தர் நம்மை இரட்சித்து அவருடைய சபையில் சேர்க்கிறார் (அப் 2:47). இவைகளெல்லாம் இயற்கையான சாதாரண கர்த்தருடைய திட்டத்தின் படியான நடவடிக்கைகள். விசுவாசிப்பதைப்பற்றியும். கீழ்ப்படிவதைப் பற்றியும் போதிக்கப்படுவதே இது. இதைக்குறித்து அற்புதமானது ஒன்றுமில்லை ஆனால் பிரசங்கிப்பதாக, அழைக்கப்படுவதைக் குறித்து அழைக்கப்படுவது என்ன? சபையினுடைய ஒவ்வொரு ஆண் அங்கத்தினரும் அதாவது உண்மையாய்க் கர்த்தருக்குள் மனமாற்றம் அடைந்து கர்த்தரையும் மற்ற மனிதர்களுடைய ஆத்துமாக்களை நேசிக்க கூடிய தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவும், பிரசங்கிக்ககூடிய தன்மையும் உள்ளவரை கர்த்தர் அழைக்கிறார். இன்னும் சிறப்பாகச் சொல்வது என்றால் அவர்கள் ஒவ்வொருவரும் இதைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறார். கிறிஸ்து சொன்னார் "நீங்கள் உலகமெங்கும்போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" மாற்கு 16:15). வாலிப பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு பவுல் பின்வருமாறு சொல்கிறார்: "நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்ன மாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்திசொல்லு" (2 தீமோ 4:1-2).

இப்பொழுது, நீங்கள் ஒரு பிரசங்கியாரா? நீங்கள் பிரசங்கியாராக விரும்புகிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? வேதத்திலே வாசிக்கப்படுகிற சபையிலே நீங்கள் ஒரு அங்கத்தினரா? கர்த்தருடைய போதனையின்படி நீங்கள் அழைக்கப்பட்டவர்களா? நீங்கள் சத்தியத்தை மட்டுமே போதிப்பீர்களா?

## பாடம் 8
# பிரசங்கிப்பதின் நோக்கங்கள்

கர்த்தருடைய திட்டத்தை மக்களுக்கு தெரிவிக்கின்ற பணியிலே பிரசங்கியார் மிகவும் முக்கியமான நபர் ஆகவே நாம் அவரை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குப் பிரசங்கியார்கள் தேவை மற்றும் சிறந்த பிரசங்கியார்கள் தேவை இதற்கென்றே தங்களை அர்ப்பணித் பிரசங்கியாரை நாம் கனம் பண்ண வேண்டியது அவசியம். இந்த பாடத்தை படிக்கும்படி விசேஷித்த கவனத்தோடு நேரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

கடந்த பாடத்திலே பிரசங்கியாராவது எப்படி என்பதைப்பற்றியும் அவருடைய அழைப்பைப் பற்றியும் பிரசங்கியார் அல்லது கர்த்தருடைய தூதன் ஆகிறார் என்பதை பற்றிம் படித்தோம். இது குறித்து அற்புதமானது ஒன்றுமில்லை என்று கண்டோம். ஆனால் ஒருவர் வளர்ந்து பக்குவம் அடையும்போது கர்த்தருடைய வார்த்தையைக் கற்று அதனுடைய தாக்கத்துக்குள்ளாகி பின்பு கிறிஸ்தவனாகி கர்த்தருடைய சபையின் அங்கமாகும்போது சத்தியத்தைப் பற்றிய அறிவின் முக்கியத்துவம் அவரை மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் பொதுஇடங்களிலும் தனியிடங்களிலும் போதிக்க விரும்பச்செய்கிறது. அல்லது ஒருவர் வயதில் பெரியவராக இருந்து பிரிவினை சபையில் பிரசங்கியாராக பணிசெய்து அங்கே மனமாற்றம் அடைந்தவராக இருக்கலாம். இப்பொழுது அவர் முதன் முறையாக உண்மையான சத்தியம் என்னவென்று அறிந்து கொண்ட பிறகு அந்த சத்தியத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க விரும்பி பிரசங்கியாராகலாம்.

உண்மையாகவே பிரசங்கியாராவது குறித்து சொல்ல வேண்டியது அதிகமுண்டு இது ஒருலேசான காரியமல்ல. பிரசங்கிப்பதைக் குறித்த நோக்கங்களை அதிகம் சிந்திப்பது அவசியம். ஒருவருடைய நோக்கங்கள் சரியாயிருந்தாலொழிய அவன் தேவனுக்கு ஏற்ற பிரசங்கியாக இருக்க முடியாது.

ஏன் ஒரு வாலிபன் பிரசங்கியாராக விரும்ப வேண்டுமென்று அநேகருக்குப் புரிவது இல்லை. விஷேசமாக ஏழைகள் மத்தியில் அவர்கள் அந்த இளைஞன் ஆத்மாக்களை இரட்சிப்பதை விட தன்னுடைய வயிற்றை நிரப்பவே பிரசிங்கிக்கிறான் என்று சிந்திக்கிறார்கள். ஆகவே இளைஞனுடைய நோக்கங்களை சந்தேகித்து அவரை மதிப்பது கடினமாகிவிடுகிறது. கிறிஸ்தவம் சிறுபான்மை உடைய மதமாக இருக்கிற நாடுகளில் ஏழை மக்கள் அதிகமாக பிரசங்கியாராக இருக்கின்ற சூழ்நிலையில் பின்வரும் வார்த்தைகளில் வெளிநாட்டு பிரசங்கியார்களுக்கு

சாதகமாக சொல்லுவார்கள். தன்னுடைய ஜனங்களையும் நாட்டையும் சுகமான வாழ்க்கையும் விட்டு ஏழ்மையுள்ள நாடுகளில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வருவதனால் மக்கள் அவர் கர்த்தருக்கு சேவைசெய்வதிலும் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலும் தன்னை அர்ப்பணித்திருக்கிறார் என்று நம்புகின்றனர். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் மக்கள் அந்த வெளிநாட்டு பிரசங்கியார் தேவனுடைய வார்த்தையை நல்லது என்று எண்ணி, அவருடைய பிரசங்கத்தை ஆவலோடு கேட்கிறார்கள்.

ஆனால் அந்த பிராந்தியத்தில் உள்ள இளம் பிரசங்கியார் வளர்ந்து முதியவராகி பல வருடங்கள் ஊழியம், அர்ப்பணிப்பு, தியாகத்தின் மூலம் தாங்கள் உண்மையான பிரசங்கியார் என்பதையும் தங்கள் தலைமுடி நரைத்ததை வெளிப்படுத்துவதன் மூலமும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளவும் செவிசாய்க்கவும் விரும்புகிறார்கள். ஆகவே இளம் பிரசங்கியார்கள் குறிப்பாக தங்களுடைய உண்மையை நிருபிக்க வேண்டுமென்பதை புரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் உண்மையாயும் கடினமாக உழைத்தும் மற்ற சகோதரர்கள் மீது அன்பு செலுத்தி தாங்கள் செய்யும் பணியில் மிகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கிறார்கள் என்பதை காண்பிக்க வேண்டும். அவர்கள் தாங்கள் வாடகைக்கு வாங்கப்பட்டவர்கள் அல்ல என்றும், மாய்மாலக்காரர்கள் அல்ல என்றும் ஆனால் தாங்கள் உண்மையாய் மனமாற்றம் அடைந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் கர்த்தருக்கு சேவை செய்யவும் அர்ப்பணிக்கப்பட்டவர் என்பதை நிருபிக்க வேண்டும். அவனவன் கனிகளால் அறியப்படுவான் என்று இயேசு சொன்னதை நினைவு கூரவும் (மத் 7:16).

ஒரு வாலிப பிரசங்கியோ அல்லது வயதானவரோ தான் பெற்றுக் கொள்கிற பணத்துக்காக மட்டும் பிரசங்கித்தால் அது தெளிவாகத் தெரிந்துவிடும். ஒரு பிரசங்கியார் தான் செய்கிற ஊழியத்திற்காக ஊதியம் வாங்குவது பாவமல்ல "வேலையால் தன் கூலிக்குப் பாத்திரமா யிருக்கிறான்" லூக் 10:7. ஆன்மீக வேலையிலும் அது சரியானதே. ஆனால் ஒருவன் சம்பாதிப்பதற்கு மட்டுமே ஊழியம் செய்தால் தவறு அவன் கூலிக்காரன், அவன் தன்னுடைய வேலையில் வெற்றி உள்ளவனாயிருக்கமாட்டான். ஒரு சராசரி மனிதன் இவன் ஏன் பிரசங்கிக்கிறான் என்று கண்டுபிடிப்பதற்கு நீண்ட நாளாகாது.

ஒருவன் இளைஞனாக இளம் பிரசங்கியாக இருக்கின்ற காரணத்தினால் உலக நன்மைக்காக ஊழியம் செய்கின்றான் என்று அர்த்தமல்ல. ஆனால் அவன் உண்மையும், உத்தமமும், கர்த்தரிடத்தில்

அர்ப்பணித்தவனாகவும் இருக்க முடியும். இயற்கையாகவே அவன் அப்படித் தான் இருக்க வேண்டும். கண்டிப்பாக அப்படியிருந்தால்தான் கர்த்தருக்கு பிரியமான வேலையை அவன் செய்ய முடியும். ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் பிரசங்கிக்கத் தொடங்க வேண்டும். அதற்கான சிறந்த பருவம் வாலிபமே. அந்த வகையிலே தன்னுடைய வாழ்க்கை பாவத்தில் சிக்கி மீளமுடியால் போகுமுன்னே அவன் நன்றாகப் படித்து கற்று, தேவையான பயிற்சியும் பெற்றுக்கொள்ளமுடியும். எந்த ஒரு இளம் பிரசங்கியும் பின்பற்ற விரும்புகின்ற எல்லா குணங்களும் உடையவராக தீமோத்தேயு காணப்படுகிறார். ஒரு சந்தர்ப்பத்திலே பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னது " உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல்கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உன் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" (1 தீமோ 4:12-16). ஒரு பிரசங்கியார் குறிப்பாக வாலிபனாயிருக்கிறவர் தான் நிராகரிக்கப்பட்டாலும் அசட்டை பண்ணப்படாமலும் தன்னை கண்டிப்பாக சரியான வழியிலே காத்துக்கொள்ள வேண்டும். மாறாக தன்னுடைய முன்மாதிரியான ஜீவியத்தினாலும் கர்த்தருக்கு உற்சாகமாக சேவை செய்வதாலும் தான் பாராட்டப்பட்டு தன்னை தெரிந்தயாவராலும் மதிக்கப்படவேண்டும். இதுவே ஒருவருடைய வாழ்க்கையின் இலக்காக இருக்க வேண்டும்.

தீத்து மற்றொரு இளம் பிரசங்கி அவன் தன்னை நற்கிரியைகளை செய்ய நம்பிக்கைக்கு உரியவனாகவும் மதிக்கப்படதக்கவனாகவும் காண்பிக்கும் பொருட்டு பின்வருமாறு எழுதுகிறார். "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு...... அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்தி சொல்லி

நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்து 2:1-2, 6-8). இந்த விதமான பிரசங்கியாரே இன்றைக்கு நமக்குத் தேவைப்படுகிறார் குறிப்பாக இளம் பிரசங்கியார் பவுலின் புத்திமதிகளை கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிரசங்கியார்கள் தங்களுக்குள் பின்வரும் நோக்கங்களை உடையவர்களாக இருக்க கூடும். பிரசங்கிப்பது எளிதான வேலை நல்ல வருமானம் கிடைக்கிறது. விசேஷமாக வெளிநாட்டு உதவி கிடைக்கிறது. நம்மை யாரும் மேற்ப்பார்வை செய்வதில்லை. நன்றாக பிரயாணம் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. தனக்கு ஒரு பதவி இருக்கிறது என்ற பெருமையும், நான் என்கிற அகங்காரம் கொள்வது மேலும் இது போன்ற பலவற்றைக் கொண்டவராக இருக்கின்றனர்... மறுபடியும் சொல்கிறேன் தீய தவறான நோக்கங்கள் அழித்து விடும். ஒருவர் உண்மையாய் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய வேலை செய்யும்படியான ஆழ்ந்த தீர்மானத்தோடு கர்த்தர் மீதும் மனித ஆத்துமாக்களின் மீதும் அன்புள்ளவராகி கர்த்தருக்கு ஊழியம் செய்ய விருப்பமுள்ளவராக, அவருக்காக எல்லாவற்றிலும் உண்மையுள்ளவராக ஊழியம் செய்ய வேண்டும். இந்த நோக்கங்கள் ஒருவருடைய வாழ்க்கையில் காணப்பட்டு ஒரு பெரிய பிரசங்கியாராகவும், தேவனுடைய ஊழியராகவும் ஆவதற்கு உதவிசெய்யும்.

## பாடம் - 9
## பிரசங்கியார் பயிற்சி

சபையிலே சிறந்த தலைமைத்துவம் இருக்கும்படியாக வேதம் இதைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதைக் கற்று அதை வாழ்க்கையில்கொண்டு வரவேண்டும். எந்த ஒரு அமைப்பும் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டுமென்றால் அது நல்ல தலைமைத்துவத்தை உடையதாக இருக்க வேண்டும். கிறிஸ்து சபைக்குத் தலைவராக இருந்து அதனுடைய எல்லா அங்கத்தினர்களையும் தேவனுடைய வார்த்தையின்படி நடத்துகிறார் என்பது நமக்குத் தெரியும். அதோடு கூட அங்கத்தினர்கள் மத்தியிலே தலைமைத்துவத்தைக் குறித்து தன்னுடைய வார்த்தையில் குறிப்பிட்ட வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார். அது சர்வாதிகார முறையிலே இருக்கக் கூடாது. ஆனால் இரண்டு அல்லது அதிகமான ஆண்கள் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களாக இருக்கவேண்டும். இந்த வேலைக்கு பிராந்திய சபையிலே தகுதியுள்ளவர்கள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எல்லா ஆண்களும் சேர்ந்து தகுதியுள்ளவர்கள் ஏற்படும் வரை தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும். மூப்பர்கள் இருக்கும் பட்சத்தில் ஊழியத்தில் அவர்களுக்கு உதவும்படியாக உதவிக்காரர்கள் இருக்க வேண்டும். உதவிக்காரர்களுக்குப் பிறகு பிரசங்கி, போதகர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பொதுவாக இருக்கவேண்டும்.

பிரசங்கியார்கள் மூப்பர்களின் மேற்பார்வையின் கீழ் ஊழியம் செய்த போதிலும் பிரசங்கியார்கள் அவர்கள் ஊழியம் குறித்து அதிக கவனம் செலுத்துவதன் நோக்கம் அவர்களுடைய வேலைகள் மிக அதிகமாக இருப்பதாலும் தேவனுக்கு செய்கிற ஊழியத்தை அதிக மேன்மையாக செய்ய அவர்களுக்கு உதவியும், ஊக்கமும் தேவைப் படுவதுமாகும். குறிப்பாக இளம் பிரசங்கியார்கள் சபையிலும் மக்களாலும் பொதுவாக மதிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தவறான நோக்கங்களுக்காக பிரசங்கிக்கிறார்கள் என்று சந்தேகிக்கபடுவதாலே. இந்த விதமான போக்கு மாறினால்தான் சபையானது வளர்ந்து பரவ முடியும். நாம்நன்றாக பிரசங்கித்து ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படி நடத்தி கிறிஸ்தவ சகோதர்கள் மத்தியிலே கர்த்தருக்கென்று ஊழியம் செய்யும் வாஞ்சையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய தீர்மானம் தங்களுடைய ஆத்துமாக்களையும் மற்றவர்களுடைய ஆத்துமாக்களையும் இரட்சிக்கும்படியான நல்ல நோக்கங்களின் அடிப்படையிலே இருக்க வேண்டும்.

இந்தக் குறிப்புகளை மனதில் கொண்டு இப்பொழுது பிரசங்கியார் பயிற்சியைப் பற்றி சிந்திப்போம்.

ஒருவர் நான் பிரசங்கியாராகப் போகிறேன் என்று சொல்லி பிரசங்கிக்க தொடங்கி விட்டால் மட்டும் போதாது. நிச்சயமாகவே விருப்பம் இருக்க வேண்டியது அவசியம் ஆனால் பிரசங்கிக்க விரும்புகிற நபர், தான் ஒரு வெற்றியுள்ள பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்றால் அந்தப்பணிக்குத் தன்னைத்தான் பயிற்று வித்துக்கொள்ள அல்லது தயார் செய்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்ட ஒரு இளைஞனுக்கு கிறிஸ்தவப் பெற்றோர்கள் இல்லாத இளைஞனைவிட அனுகூலங்கள் அதிகம் கிறிஸ்தவ பெற்றோர்களோடு இருக்கக் கூடிய வாலிபன் கர்த்தருக்கேற்ற ஆலோசனையிலும், சிட்சையிலும், தேவனுடைய வார்த்தையிலும் போதிக்கப்பட்டு கவனமாக வளர்க்கப்படுவான் (எபே 6:4). அவன் நல்ல பயிற்சி பெற்று நல்ல பழக்க வழக்கங்கள் தனக்குள் வளரப்பெறுவான் அவன் தொழுகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வேதத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் உற்சாகப்படுத்தப்படுவான். பின்பு அவன் வளர்ந்த கிறிஸ்தவனாகி அநேக உதவிகளும் ஊக்கங்களும் பெற்று நல்ல அனுபவம் உள்ளவனாகி பிராந்திய சபையில் வகுப்புகளில் போதிக்கவும் குடும்ப ஜெபங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தேர்ச்சியுள்ளவனாவான்.

ஒருவன் கிறிஸ்தவ குடும்பத்தில் இருக்கும்படி ஆசீர்வதிக்கப்படாமல் வாழ்க்கையில் பின்பு கிறிஸ்தவனாகி அல்லது பிரிவினை சபையிலிருந்து மன மாற்றம் அடைந்து பிரசங்கியாரானால் அவன் தானே தீர்மானித்து வேதத்தைக் கற்க வேண்டும். அல்லது அஞ்சல்வழி வேதாகம பயிற்சி மூலமாகவோ வேறு பிரசங்கியார் அல்லது சபையில் ஆர்வமுள்ள அங்கத்தினர் மூலமாகவோ வேதத்தை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் வளர்ந்து தனிப்பட்ட முறையில் கல்வி கற்று கல்லூரிக்குச்சென்று படித்ததன் மூலமாக சிறப்பாக ஊழியஞ் செய்ய முடியும். வேதத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று திட்டமிடுகிற ஒருவர் ஏன் கல்லூரிக்குச்சென்று கற்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்? ஏனென்றால் நன்கு படித்தவர்கள் மத்தியில் தனக்கென்று ஒரு செல்வாக்கை ஏற்படுத்த பரந்த அறிவு தேவை இயேசுவைப்பற்றி சொல்லும் போது கூட அவர் ஞானத்திலும், வளர்ச்சியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் வளர்ந்தார் என்று காண்கிறோம் (லூக் 2:5). அதனால் அவர் சட்ட

அறிஞர்களோடும் வரிவசூலிப்பவர்களோடும் தன் காலத்திலிருந்த தலைவர்களோடும் நன்கு பேச முடிந்தது. குறிப்புகளிலே இவ்விதமாகக் காண்கிறோம். "அவர் வேதபாரகர் போல் அல்லாமல் அதிகாரம் உள்ளவராய் போதித்தார்" (மத் 7:29). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர் அறிவோடும் புரிந்து கொள்ளுதலோடும் தான் பேசுவது இன்னதென்று நன்றாக புரிந்து பேசுகிறவர்கள் போல பேசினார் அதனால் கேட்டவர்கள் பிரமிப்படைந்து அவர் மீது அதிக மரியாதை வைத்தார்கள். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு ஒருவர் மருத்துவப் பட்டம் பெற்றவராயிருக்க வேண்டியதில்லை. அதே சமயத்தில் அவர் விஷயங்கள் அறியாதவராகவும் இருக்க கூடாது. பவுல் சிறந்த கல்விமான், லூக்கா ஒரு மருத்துவர். அப்போஸ்தலர்களில் பலர் தனிப்பட்ட கல்வி அறிவு இல்லாதவர்களாகவே இருந்தார்கள். அது உண்மைதான் ஆனால் அவர்களுக்கு குழந்தைகளுக்குரிய அடிப்படைக் கல்வி இருந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் பிரதான போதகரான இயேசுகிறிஸ்துவினால் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

ஆகவே உங்களை ஒரு நல்ல கல்வி தகுதியோடு தயார் செய்யுங்கள். உங்கள் பகுதியிலே சகோதரர்கள் வேதாகம பள்ளியியோ, கல்லூரியோ பிரசங்கியார் பயிற்சி பள்ளியோ நடத்தினால் அங்கு சென்று பயில முயற்சியுங்கள். இவைகள் உங்களுக்கு கிடைக்காவிட்டால், சபைகள் வளர்ந்து இந்த வாய்ப்பு உங்கள் பிள்ளைகளுக்கு அல்லது அவர்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கும். உங்களைப் பொறுத்தவரையில் உங்கள் வேதாகமத்தை நன்றாக கற்கலாம். அதோடு கூட மற்ற சரியான கிறிஸ்தவ புத்தகங்கள் அல்லது பிரதிகள் கிடைக்குமென்றால் அவைகளை உங்கள் நூலகங்களில் சேர்த்து படிக்கலாம். ஒவ்வொரு பிரசங்கியார் வளர்ச்சிக்கும் படிக்க வேண்டுமென்ற தனிப்பட்ட அர்ப்பணிப்பு முக்கியம்.

ஒருவர் தன்னுடைய வேதாகம அறிவைக் கூட்டிக்கொள்ள வேண்டுமென்றால் போதிப்பதன் மூலமும் தனிப்பட்ட முறையில் படித்து மற்ற பெரிய சபைகள் நடத்துகின்ற அஞ்சல் வழி பாடங்களை மதிப்பீடு செய்வதன் மூலமும் பெருக்கி கொள்ளலாம். வேத வசனத்திற்கு ஒத்த வசனங்களை கண்டுகொள்ள உதவியாயிருக்கும்படி ஒரு ஒத்த வாக்கிய புத்தகத்தை பெற்றுக்கொள்ள முயற்சியுங்கள். நீங்கள் புறப்பட்டுச் சென்று உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கு ஏற்றபடி உங்கள் கிராமத்திலோ நகரத்திலோ அல்லது பெரு நகரத்திலோ அல்லது உங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலோ பிரசங்கியுங்கள் உங்களைச் சுற்றி சபைகள் இருந்தால் அங்கே சென்று பிரசங்கிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம்.

அப்படியில்லாவிட்டால் நண்பர்கள் அல்லது விருப்பம் உள்ளவர்கள் மத்தியில் கூடுகைகளை ஏற்படுத்தலாம். இந்த முயற்சியினால் நீங்கள் கற்று வளர்வதோடு, மற்ற மக்களை கிறிஸ்துவுக்குள் மனமாற்றி உங்கள் பிராந்திய சபைமூலமாக புதிய சபைகளை தொடங்கலாம். நீங்கள் சில காலம் பிரசங்கியாராக இருந்தாலும் உங்கள் வேதஅறிவு வளர்ச்சியடையும்படியாக தொடர்ந்து படிக்கவேண்டும். உங்கள் பிரசங்களை முன்னதாகவே தயார் செய்து விடுங்கள். பேசுவதற்கும் கேட்பதற்கும் பிரயோஜன முள்ளவைகளைச் சொல்வதற்கும் வித்தியாசமுண்டு. நீங்கள் பிறவிப்பிரசங்கியல்ல ஆனால் உண்மையான முயற்சியின் மூலம் அப்படி ஆகவேண்டும் உங்கள் பாடத்தைக் குறித்து சோம்பலாயும் கவலையற்றும் இருக்க வேண்டாம். நீங்கள் தேவனுடைய வார்த்தையை போதிக்கிறீர்கள் என்றும் மற்றவர்களுக்கு வெற்றிகரமாக போதிப்பது என்றால் நீங்கள் அதை நன்றாக கற்றிருக்க வேண்டுமென்றும் நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய பணியின்போது கேட்கப்படும் கேள்விகளுக்கும், கள்ளப் போதகங்களை சமாளிப்பதற்கும் நீங்கள் வேதத்தை நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

அன்பாயிருங்கள் அதே சமயத்தில் உறுதியாயிருங்கள். அதே சமயம் மென்மையாயிருங்கள். உண்மையாயிருங்கள் அதே சமயம் சிரித்த முகத்தோடிருங்கள் பிரசங்கிப்பதிலே அநேகவேலைகள் பொறுப்புகள் அடங்கியிருக்கிறது. நீங்கள் நிச்சயமாகவே ஒரு நல்ல பிரசங்கியாராக கடினமாக உழைத்து கர்த்தருக்கென்று கனிகொடுப்பவராக இருக்க விரும்புகிறீர்கள். நீங்கள் தேவன் விரும்புகிற விதமான பிரசங்கியாராகயிருக்க வேண்டுமென்றால் மக்களை கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்தும் செல்வாக்குள்ளவராகவும், உங்களை அறிந்த மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். மேலும் உங்களை அறிந்த வாலிபர்கள் உங்கள் வாழ்க்கையையும், வழிமுறைகளையும், தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற விரும்புவார்கள்.

## பாடம் - 10
# பிரசங்கியாரின் வாழ்க்கை

சபையின் தலைமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள மூப்பர்கள் உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் மற்றுமுள்ளவர்களைப் பற்றி நாம் தெளிவாகப்பார்த்தோம். அந்த சமயத்தில் பிரசங்கியாரைப்பற்றி அநேக காரியங்களையும் பார்த்தோம். இந்த பாடத்தை தொடரும் வேளையில் பிரசங்கியாருடைய வாழ்க்கையைப் பற்றியும் நாம் பேசலாம். பிரசங்கியாரும் ஒரு மனிதனே, அவனுக்கு பலவிதமான பிரச்சனைகளும் தேவைகளும் உண்டு. அவன் மற்றவர்களைப்போலவே தன்னுடைய மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டும்.

பிரசங்கியாருக்கும் அவருடைய வாழ்க்கைக்கும் பல முகங்கள் உண்டு. நீங்கள் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்றிருந்தால் நாங்கள் சொல்லப்போகிற காரியங்களை நீங்கள் மிகவும் கவனமாக சிந்திக்க வேண்டும். பிரசங்கிப்பது என்பதே மிகமுக்கிமானதாயிருக்கும் பட்சத்தில் அதனுடைய பலம் பிரசங்கியாரின் வாழ்க்கையை பொறுத்தேயிருக்கிறது. அவன் ஒரு மாயக்காரனாகவோ அல்லது கூலிக்கு வேலை செய்கிறனாகவோ இருக்கலாம். அவன் அப்படியிருக்கக் கூடாதென்று நிச்சயமாகவே ஜெபிக்கிறோம். ஆனால் அவன் அப்படியிருந்தால் அவன் பகிரங்கப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்படவேண்டும்.

முதலாவதாக பிரசங்கியாருடைய வாழ்க்கை அவனுக்கு ஒன்றோடொன்று உதவுவதாக இருக்க வேண்டும். வேறு விதமாக சொல்வதென்றால் அவன் பிரசங்கிக்கிறபடி நடக்க வேண்டும். இயேசுவைக்குறித்து லூக்கா, அப்போஸ்தலர் 1:2 - ல் " அவர் .....செய்யவும் பிரசங்கிக்கவும் தொடங்கினார்" என்று எழுதுகிறார். கவனியுங்கள் இயேசு முதலாவது ஜீவித்தார், செய்தார், பிறகு பிறருக்கு போதித்தார். இந்த விதமான பிரசங்கமே இன்றைக்கும் என்றைக்கும் தேவை. வேறு எந்த விதமான பிரசங்கமும் கேலிக் கூத்தாயிருக்கும். இந்தப் பாடத்தில் பிரசங்கியாருடைய சரீர வாழ்க்கைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவன் வாழ்கின்ற விதம். நன்னடத்தை அவனுடைய சமூக வாழ்க்கை, அவனுடைய பழக்கங்கள், அவனுடைய பேச்சு மற்றும் அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பிரசங்கியாருடைய சரீர வாழ்க்கையைப் பற்றி முதலில் பார்ப்போம். கிறிஸ்தவனாவதற்கு முன்பு அவன் வேறுவிதமான வாழ்க்கை

வாழ்ந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ பாவமன்னிப்புக்கு ஏதுவான மனம் திரும்புதலினால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார் ஆகவே வளர்ந்து வரும் பிரசங்கியார் தூய்மையான அப்பழுக்கற்ற தேவ வாழ்க்கை வாழ வேண்டும். அவனுடைய நன்னடத்தை கேள்விகளுக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும். ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களைக் குறித்து பவுல் சொல்வது விசேஷமாக இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும் (ரோமர் 12:1-2).

பிரசங்கியார்கள் விசேஷமாக இளம் பிரசங்கியார்கள் வாலிப ஸ்திரீகளோடு பழகும் விதத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வயதான பிரசங்கியார் கூட பெண்களிடத்தில் பழகும் போது தாங்கள் சோதனைக்குட்பட்டு தங்கள் ஆத்துமாவையும் நற்பெயரையும் கெடுத்துக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது உன் இளமையை குறித்து ஒருவரும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு மற்றவர்களுக்கு முன்பாக நல்ல மாதிரியை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார் (1 தீமோ 4:12). மேலும் தொடர்ந்து சொல்லும் போது "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு" (2தீமோ 2:22) என எழுதுகிறார். பவுல் மேலும் ஒரு இளம் பிரசங்கியாகிய தீத்துவுக்கு எழுதும் போது " ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி" (தீத்து 2:11-12). பிசரங்கியார்கள் தங்கள் பேச்சை கவனிக்க வேண்டும் அல்லது காத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு போதும் பொய் சொல்லவோ, ஆபாசமாக பேசி சிரிக்க வைக்கவோ, சபிக்கவோ சத்தியம் செய்யவோ வேண்டாம். பவுல் சொல்கிற ஆலோசனையின்படி கண்டனம் பண்ணப்படாத வகையிலே ஒருவர் பேச வேண்டும் (தீத்து 2:8). ஒருவன் தன் நாவை புறம்பேசுவதற்கோ பழி வாங்குவதற்கோ பயன்படுத்தக் கூடாது. யாக்கோபு சொல்கிறபடி "ஆகையால் என் பிரியமான சகோதரரே கேட்பதற்கு தீவிரமாயும், பேசுவதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்வகள்" (யாக் 1:19).

அவனுடைய பழக்கவழக்கங்களைப்பற்றிய காரியம் என்ன? இயற்கையாகவே அவன் புகைபிடிக்கக்கூடாது, குடிக்கக்கூடாது, புகையிலை

சம்மந்தமான அல்லது வேறுபழக்கத்திற்கு உட்படக்கூடாது. எந்தவிதமான போதை மருந்து பழக்கங்களிலும் சிக்கிக்கொள்ளக் கூடாது. தவறான அல்லது கேள்விக்குரிய எந்த ஒரு பொழுதுபோக்கையும் விட்டு ஒதுங்கி யிருக்கவும். அவன் தன்னுடைய கடன்களை சரியாக திருப்பிச் செலுத்தவும் வேண்டும். கிறிஸ்தவனிலிருந்து பிரசங்கியார் வித்தியாசமானவர் அல்ல. மாறாக அவர் அநேகருக்கு தெரிந்திருக்கிறபடியால் அவர் எந்த விதமான வாழ்க்கை வாழ்கிறார் என்றும் மற்றவர்களிடத்தில் எப்படி நடந்துகொள்கிறார் என்றும் அநேகர் கூர்ந்து கவனிப்பார்கள். சககிறிஸ்தவர்களும் உலகத்தின் மற்ற மக்களும் அவரை சாதாரண கிறிஸ்தவர்களைவிட அதிகம் கவனிப்பார்கள்.

பிரசங்கியாருடைய சமூகத் தொடர்புகளைப் பற்றியும் இதுவே உண்மை. அவருடைய நண்பர்கள் யார், அவர் எந்த விதமான மக்களோடு இருக்க ஆசைப்படுகிறார். அவருடைய வேலையினிமித்தமாக எல்லாவிதமான மக்களோடும் பழக வேண்டும். ஆனால் அவர் யாருக்கு நண்பராக இருக்கிறார் என்பது கேள்வி, கெட்ட நடத்தையோடு கூடிய கேள்விக்குறிய குணாதிசியங்கள் உடையவர்களாக அவர்கள் இருக்க கூடாது. அவருடைய சரீரத்தைவிட முக்கியமாக ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியிருக்கிறது. ஜெபஜீவியம் எப்படி, வேதத்தை வாசிக்கும்படி செலவிடும் நேரம் எவ்வளவு? அவருடைய அனுதின வாழ்க்கை ஆவிக்குரிய தன்மையை வெளிப்படுத்துகிறதா? பிரசங்கம் தயார் செய்வதில் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்கிறார்? நன்கு படிக்கும் பழக்கம் அவரிடத்தில் உள்ளதா? அவர் உண்மையாகவே தன்னுடைய வேலையில் ஆர்வமுள்ளவராகயிருக்கிறாரா? தன்னுடைய பிரசங்கத்தில் அன்பையும் உண்மையான கண்டிப்பையும் வெளிப்படுத்துகிறாரா? வேதம் போதிக்கிறபடி தன்னுடைய வருமானத்திலிருந்து கொடுக்கிறாரா? தனிப்பட்ட ஊழியம் செய்கிறாரா? போதிக்கவும் வியாதியஸ்தரை சந்திக்கவும் செல்கிறாரா? வீட்டிலிருந்து வெளியூருக்குச் செல்லும் போது தொழுகையில் கலந்து கொள்கிறாரா? அவரை சுற்றியுள்ள மக்கள் அவரை எப்படிபார்க்கிறார்கள்? அவருக்கு நற்பெயர் இருக்கிறதா?

ஒருவர் ஆவிக்குரியவராக இல்லாவிட்டால் அது வெளிப்பட்டு விடும். பவுல் சொல்கிறபடி: "நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்" (கொலோ. 3:7). கிறிஸ்து சொல்கிறார் நாம் அவரையும் அவருடைய ராஜ்யத்தையும் முதன்மையாக வைக்க வேண்டும் என்று (மத் 6:33) மேலும் அவர் சொன்னது ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னை

தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் என்னை பின்பற்றக்கடடவன் (லூக்கா 9:23). ஒரு பிரசங்கியானவன் கர்த்தருக்கென்று தன்னை அர்ப்பணித்தவன். இந்த உலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் மனிதர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்லி இரட்சிக்கப்பட உதவியாயிருப்பவன். ஆகவே அவன் மிகப்பெரிய பொறுப்பை எடுத்துக்கொண்டிருக்கிறான். அவன் கர்த்தருக்கும் சக மனிதர்களுக்கும் கொடுத்த வாக்குறுதியைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கர்த்தருக்கென்று நேரத்தையும் தேவைப்பட்டால் தன்னுடைய ஜீவியத்தையும் தியாகம் செய்யும்படி தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும். இதில் ஏதாகிலும் குறையுமானால் அது ஒன்றுமில்லாதாகிவிடும். யாரோ ஒருவர் "நீ வேறு எதாவது செய்யக்கூடுமானால் பிரசங்கியாதே, ஆனால் நீ கண்டிப்பாகப் பிரசங்கிக்க வேண்டுமென்றால் மட்டுமே பிரசங்கி" என்று சொன்னார்.

நமக்கு பிரசங்கியார்கள் ... நல்ல பிரசங்கியர்கள்... கர்த்தருக்கு என்று தன்னை ஒப்புக்கொடுத்து அவருக்கு உண்மையாயிருந்து ஊழியத்தை செய்யக்கூடிய பிரசங்கியார்கள் அநேகர் தேவை!

## பாடம் - 11
## பிரசங்கியாருடைய குடும்பம்

கர்த்தர் தம்முடைய சபையில் எந்த விதமான மக்கள் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைப்பற்றி ஆழமாக பார்த்தோம். இது உங்களை கர்த்தருக்கு கீழ்படிந்து கிறிஸ்தவனாக்கி, கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக்கி, அப்படிப்பட்டத் தலைவர்களில் ஒருவனாக நீங்கள் உங்களை தயார் செய்ய இந்தப் பாடங்கள் ஊக்கப்படுத்தும் என்று நம்புகிறோம்.

நீங்கள் பிரசங்கிப்பதில் ஆர்வமுள்ளவராக இருக்கலாம். அப்படியானால் இப்பொழுது நாம் படிக்கிற பாடங்கள் விசேஷமாக பிரசங்கியார் அவருடைய நோக்கங்கள், பயிற்சி மற்றும் வாழ்க்கை ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பாடத்தில் பிரசங்கியாருடைய குடும்பத்தைப் பற்றி நாம் சிந்திப்போம்.

அநேக மனிதர்கள் தாங்கள் மிகவும் இளைஞனாக இருக்கும்போதே பிரசங்கிக்க தொடங்குகிறார்கள். உண்மையாகவே ஒருவர் தன்னை தயார் செய்வதற்கும் சரியான பயிற்சி பெறுவதற்கும் இதுவே சிறந்த சமயம். பின்பு வளர்ச்சியடைந்து திருமணமாகி குடும்பமாகி அவர் செய்யும்படி தேர்ந்தெடுத்த இந்த வேலையை செய்ய தயாராக இருப்பார். திருமணத்திற்கு முன்பு பயிற்சி பெறும்போது தன் பெற்றோர்களோடு அவர் வசிக்கலாம். அது அவருக்கு பாதுகாப்பான தனக்கு சொந்தமான மேலும் தன்னை நேசித்து இந்த வேலையை செய்யும்படி உற்சாகப்படுத்துகிறவர்களோடிருக்கிறோம் என்ற உணர்வை கொடுக்கும்.

ஒரு பிரசங்கியார் திருமணம் செய்வதை வேதம் ஒரு போதும் தடைசெய்யவில்லை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். எப்போதாவது ஒரு பிரசங்கியார் அவருக்கு விருப்பமானால் திருமணம் செய்ய வேண்டாம் என்று தீர்மானிக்கிறார் அது நல்லது. தனிமையாக இருக்க முடிவு செய்யும் பட்சத்தில் தன்னுடைய வேலைக்கென்று பயன்படுத்தலாம். சுதந்திரமாக பிரயாணம் செய்யலாம். ஒரு குடும்பஸ்தனுக்கு இருக்கிற பொருளாதாரத் தேவைகள் அவனுக்கு இருக்காது. அப்போஸ்தலனாகிய பவுல் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதோடுகூட தன் காலத்திலிருந்த மக்களையும் அந்த காலத்திலிருந்த கடினமான சூழ்நிலை கருதி திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று சொல்கிறார். இருப்பினும் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் செய்து கொள்ளலாம் என்று தன்னுடைய வார்த்தையில்

சொல்லியிருக்கிறார் (1கொரிந்தியர் 7:7-9). அநேக பிரசங்கியார்கள் திருமணம் செய்து குடும்பத்துடன் இருக்கவே தெரிந்துக் கொள்கிறார்கள். இது நம்மை மேலும் பெரிய சிந்தனைக்கு உள்ளாக்குகிறது. பிரசங்கியார் கிறிஸ்தவராக்வும் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராகவும், மீதமுள்ள வாழ்க்கையை கர்த்தருடைய தீர்மானத்தின்படி பயன்படுத்தவும் முன்பு திருமணமாகாத ஒரு பெண்ணை திருமணம் செய்வது அவசியமானது (மத்தேயு 19:9). அந்தப் பெண்ணும் கிறிஸ்தவளாக கிறிஸ்துவின்சபை அங்கத்தினராக இருக்க வேண்டும். கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிற ஒரு தோழியிடம் இருந்து எல்லாவிதமான ஊக்கமும் தேவைப்படும். கிறிஸ்தவர் அல்லாத ஒருவரையோ, அல்லது பிரிவினைசபையைச் சார்ந்த ஒருவரையே திருமணம் செய்வது மிகுந்த நஷ்டத்தைக்கொடுக்கும். பவுல் பின்வருமாறு கூறுகிறார்."அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது"(2கொரிந்தியார் 6:14-15).

ஒருவர் விசுவாசியாயிருந்து அதே சபையில் அங்கத்தினராக இருந்தால் பிரச்சனையில்லை என்று விவாதிக்கலாம். அனால் அது மிகப்பெரிய பிரச்சனையாகவும் மாறலாம். சிறந்த வழி என்னவென்றால் உங்கள் விசுவாசத்தையும் தேவனோடு கூடிய உறவையும் பகிர்ந்து கொள்ள முன்வராதவரோடு திருமணத்தில் பிணைக்கப்படுவதை தவிர்ப்பது நல்லது.

திருமணத்தைப்பற்றி அடுத்த கேள்வி என்னவென்றால்? நீங்கள் இருக்கின்ற பகுதியிலுள்ள சபை சிறியதாக இருந்து இளம் கிறிஸ்தவ பெண்கள் அங்கு இல்லை என்றால் என்ன செய்வது? அப்படிப்பட்ட சூழ்நிலையில் திருமணம் செய்யும் முன்பு தேர்ந்தெடுக்கிற பெண்ணுக்கு சத்தியத்தை போதித்து, அவளோடு கூட அவள் குடும்பமும் இரட்சிக்கப்படும்படியாக செய்ய வேண்டும். ஒரு பெண்ணை மாற்ற முடியவில்லையென்றால் வேறு ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கலாம். மனைவியாகும்படி தகுதியான ஒருபெண்ணைக் கண்டுபிடித்து மனமாற்ற முடியாமற் போனால் திருமணம் செய்வதா? அல்லது கர்த்தருக்கு ஊழியம் செய்வதா? என்று தீர்மானிக்கவேண்டும். பிரசங்கியார் ஒருவருக்கு கிறிஸ்துவின்சபை அங்கத்தினரல்லாத ஒரு பெண்ணைத் திருமணம் செய்வது மிகுந்த நஷ்டத்தில் முடியலாம்.

ஆனால் அந்த வாலிப பிரசங்கி அவளை திருமணம் செய்து மனைவியாக்கினபின் மனமாற்றிக் கொள்ளலாம் என்று சொல்லலாம். இது கேட்பதற்கும் சிந்தனை ரீதியாகவும் நன்றாக இருந்தாலும் அநேக சமயங்களில் திட்டமிட்டபடி நடப்பதில்லை. நிச்சயமாகவே ஒருவர் தன்னுடைய மனைவியை கர்த்தருடைய சபையின் அங்கத்தினராகும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. அவளுக்கென்று ஒரு மனம் உண்டு. அவளுடைய சொந்த ஆத்மாவிற்கு அவளே பொறுப்பு. அவள் போதிக்கப்படுவது மட்டுமல்லாமல் சுயமாக தீர்மானிக்கவும் சுதந்திரமளிக்க வேண்டும். அவள் செவிசாய்க்க மறுத்துவிட்டால் என்ன செய்வது? திருமணமானவராக இந்த சூழ்நிலையிலிருந்தால் அது பெரிய பிரச்சனைக்குரியதுதான். இந்தப் பிரச்சனையை எப்படித் தவிர்ப்பது என்றால் முதலாவது கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் அல்லாத ஒருவரை திருமணம் செய்யாமல் இருப்பதே.

ஒருவர் தான் திருமணம் செய்யப்போகிற ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில், வேலையில் தான் வசிக்கின்ற பகுதியில் உள்ளவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் செல்வாக்கு முக்கிய பங்கு வகிக்கும் என்பதை நன்றாக மனதில் கொள்ளவேண்டும்.

ஒரு பிரசங்கியார் தான் செய்யும் ஊழியத்தில் ஒரு பங்காயிருக்கும்படி அந்த ஸ்திரீ தன்னோடுகூட கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே விரும்புவார். தான் நேசித்து, மதித்து, தன்னுடையபிள்ளைகளுக்கு அவள் தாயாக இருப்பதை பெருமையாக எண்ணுமளவிற்கு அவள் இருக்க வேண்டும். குடும்பத்திலே கணவன் சம்பாதித்து மனைவியையும், பிள்ளைகளையும் காப்பாற்றுகிறவனாகிறான். ஆனால் மனைவியோ குடும்பத்தையும், பிள்ளைகளையும் கவனிக்கிறவளாகிறாள்.

வீட்டை சுத்தமாக வைப்பதிலும், ஆகாரம் கொடுப்பதிலும், பிள்ளைகள் சுகவீனப்படும்போது அவர்களைக் கவனிப்பதிலும், அவர்களுடைய குணாதிசயங்கள் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டுவதிலும் கவனம் செலுத்துகிறாள். ஆகவே பிரசங்கியார் அல்லது ஒரு மனிதன் சொந்த குணாதிசயங்களுக்கும், திறமைகளுக்கும், தியாகத்திற்கும் ஏற்றவாறு ஒரு மனைவியை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குடும்பம் என்பது அதனுடைய எல்லா அங்கத்தினருக்கும் வசிக்கின்ற இடமாக இருக்க வேண்டும். அது கிறிஸ்துவை கனம் பண்ணுகிற இடமாக இருக்க வேண்டும். அங்கே கணவனும், மனைவியும் மதிக்கப்பட்டும், நேசிக்கப்பட்டும், உதவிசெய்யப்பட்டும்,

உற்சாகப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும். வீடு என்பது தன்னுடைய பெலத்தையும் நோக்கங்களையும் மீண்டும் உறுதிசெய்வதற்கும் சந்தோஷமாகயிருப்பதற்காகவும் கூடுகின்ற இடமாகவும் இருக்க வேண்டும். அது சண்டையும், சச்சரவும் தொடர்ந்து நடக்கும் இடமாக இருக்கக் கூடாது. குடும்ப அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் அறியாமல் உண்பதற்கும் உறங்குவதற்கும் பயன்படுத்தும் இடமாக இருக்கக் கூடாது. மாறாக வேதத்தைப் படிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் ஐக்கியப்படுவதற்கும், சமாதனத்திற்கும், மனநிறைவுக்கும் உரிய இடமாக இருக்க வேண்டும்.

நிச்சயமாகவே வாழ்க்கையில் சில பிரச்சனைகள் இருக்கும். ஒருவன் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டுவானென்றால் அந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுவிடும். மனைவியானவள் வீட்டுக்கு வெளியேயும் நன்கு மதிக்கப்படவேண்டும். தன்னுடைய பிள்ளைகளுக்கும் பிராந்திய சபைகளிலுள்ள மற்ற பிள்ளைகளுக்கும் போதிக்கும்படியாக தன்னைத் தயார் செய்யும்படி பயிற்சியும், ஊக்கமும் அவர்களுக்கு அளிக்கப் படவேண்டும். அவள் தன்னுடைய கணவனோடு மற்ற அங்கத்தினர்களை சந்திக்கவும் மற்ற இடத்திற்கு, குறிப்பாக வீட்டில் கணவன் மார்கள் இல்லாத இடத்திற்கு அவர் போகும்போது மனைவியும் கணவரோடு சொல்லவேண்டும். மனைவியானவள் கணவனுக்கு உதவியாகவும், ஆதரவாகவும் இருந்து, உண்மையான கிறிஸ்தவ மனைவியாகவும், உபசரித்தல், வியாதியஸ்தர் மற்றும் தேவையுள்ளோருக்கு உதவுதல் மேலும் நற்கிரியைகள் செய்வதன் மூலமாகவும் தன்வீட்டை கட்டுகிறவளாக இருக்க வேண்டும்.

வேதத்தினுடைய போதனையின்படி பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும். தங்கள் பெற்றோர்களை மதிக்கிறவர்களாகவும், மற்ற பிள்ளைகளிடமும், வாலிபரிடமும் நல்ல செல்வாக்கு உடையவர்களாகவும் இருக்க வேண்டும் (எபே 6:1-4).

அவர்கள் வளர்ந்து வாலிபர்களாகும்போது, அவர்களும் கிறிஸ்தவர்களாக தக்கவிதத்தில் போதிக்கப்பட்டும் பயிற்றுவிக்கப்பட்டும் இருக்க வேண்டும்.

ஒரு பிரசங்கி தன்னுடைய குடும்பத்தில் மட்டமாக நடந்து கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட நிலை ஒருபோதும் வரக்கூடாது. அவருடைய நடத்தையாலோ அல்லது அவருடைய மனைவியின் நடத்தையாலோ பிரிவினை உண்டாகி விவாகரத்தாகிறது. இந்த விதமான சம்பவம் எப்போதாவது நடைபெறுமானால் அது பிரசங்கியாருடைய குற்றமோ அல்லவோ அப்படிப்பட்டவர் அவருடைய எதிர்மறையான மாதிரியின் விளைவாக பிரசங்கிப்பதை நிறுத்திவிடவேண்டும்.

# பாடம் - 12
# பிரசங்கியாரின் உதவி

பிரசங்கியாருக்கு உதவிசெய்வதைப் பற்றி வேதம் என்னசொல்கிறது. அவருக்கு சம்பளம் கொடுக்கப்படவேண்டுமா? இந்த முறைக்கு எதிராக எப்போதுமே ஜனங்கள் இருந்திருக்கிறார்கள். ஏன், சபையிலும் கூட சிலர் இந்தமுறையை எதிர்க்கிறார்கள். சில சபைகளில் சகோதரர்கள் ஒவ்வொரு சகோதரர்களை பிரசங்கம் செய்யச் சொல்லி இதைப்பார்த்துக் கொள்ளுகிறார்கள். சில வருஷங்கள் இப்படி செய்த பின்பு அங்கத்தினர்கள் பிரசங்கியாருக்கு ஒழுங்காக சம்பளம் கொடுப்பது தவறு என்று எண்ணத்தொடங்குகிறார்கள். வேதம் இதைக்குறித்து என்ன சொல்லுகிறது என்பதை பார்க்கும் முன்பாக என்னை இந்த கேள்விகேட்க அனுமதியுங்கள். பிரசங்கியாரும் ஜீவிக்க வேண்டாமா? அப்படியென்றால் அவர் எப்படி தன்னுடைய செலவுகளையும் தன் தேவைகளையும் சந்திக்க முடியும்? இளம் பிரசங்கியார்கள் தங்கள் பெற்றோர்களோடு வாழும்பட்சத்தில் அவர்ளுக்கு அதிக உதவி தேவைப்படாமலிருக்கலாம். ஒருவர் உதவிபெறுவது தேவையில்லை என்பதற்கு எந்த காரணத்தையும் சொல்லலாம். மறுபடியும் சொல்வதென்றால் சபையும் சகோதரர்களும் மட்டுமே உதவி செய்யக்கூடிய நிலையிலுள்ள ஒரு பிரசங்கியாரைப்பற்றி என்ன சொல்வது? அதைப்பற்றி என்ன?

இயேசு 70 பேரை இஸ்ரவேல் மக்களுக்கு பிரசங்கிக்க அனுப்பிய போது அவர் சொன்னது "புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள் (லூக் 10:3-7).

பவுல் சொல்லுகிறார்: தன்னுடைய முழுநேரத்தையையும் கர்த்தருக்கென்று கொடுக்கிற சபையின் மூப்பர் சபையிலிருந்து பண உதவி பெற தகுதியுள்ளவராகிறார். அவர் சொல்வதைக் கேளுங்கள். "நன்றாய்

விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறது"(1 தீமோ 5:17-18). உபா 25:4 -ல் சொல்லுகிறபடி போரடிக்கிற மாட்டுக்கே பிரதிபலன் கிடைக்கிறது. மறுபடியுமாக அவர் அந்த உண்மையின் அடிப்படையில் எந்த வேலையானாலும் அது மூப்பரோ? பிரசங்கியாரோ? தன் ஊதியத்திற்கு பாத்திரவானாயிருக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் சுவிசேஷத்தினால் பிழைக்க வேண்டுமென்று பவுல் விளக்கிச்சொல்கிறார் (1 கொரிந்தியர் 9:13-14).

அப்போஸ்தலனாகவும், பிரசங்கியாகவும் இருந்ததோடு பவுல் கூடாரத்தொழில் செய்கிறவராகவும் இருந்தார் என்பது நமக்குத் தெரியும் (அப் 18:1-3). அவர் கர்த்தருடைய ஊழியக்காரனாயிருந்து அனுபவித்த சிலகாரியங்களை கொரிந்து சபையாருக்கு விளக்கிச் சொல்லும்போது அவரும் தன் சொந்தக்கைகளினாலே வேலை செய்ததைச் சொல்கிறார் (1 கொரிந்தியர் 4:12). சபையானது தொடக்க நிலையில் இருந்த காரணத்தினால் அதன் மீது அவர் பாரம் சுமத்த விரும்பவில்லை. மறுபடியும் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அவர் சொல்லும்போது, "இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்; பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும். ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப் பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக் காக செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன். அப்படியாகட்டும்; நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை; ஆனாலும், உபாயமுள்ளவனாயிருந்து தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம். நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் எவன்மூலமாயாவது உங்களிடத்தில் பொழிவைத் தேடினதுண்டா? தீத்து உங்களிடத்தில் வரும்படி நான் அவனைக் கேட்டுக்கொண்டு, அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஏதாவது பொழிவைத் தேடினானா? நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?" (2 கொரிந்தியர் 12:14-18).

பவுல் தன்னுடைய சகோதரர்களிடமிருந்து பண உதவியை எதிர்ப்பார்த்தன்மூலம் பாரத்தை சுமத்தாமல் இருந்தபோது சில சகோதரர்கள் அவர் தேவைக்கு சில நேரங்களில் பணம் கொடுத்து உதவி இருக்கிறார்கள். சான்றாக பிலிப்பிய சபையில் உள்ள சகோதரர்கள் அவருக்கு உதவி செய்ததைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அதைக்குறித்து பவுல் பின்வருமாறு சொல்கிறார். "மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல் உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பட்டவைகளைச் சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படியே உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:15-19).

இப்பொழுது தேவனுடைய வார்த்தையிலிருந்து உதவி செய்வது அல்லது பிரசங்கியாருக்கு ஊதியம் கொடுப்பது பற்றி நாம் காணமுடியும் என்று நினைக்கிறேன். அல்லது தன்னுடைய முழுநேரத்தையும் கர்த்தருடைய வேலையில் பயன்படுத்துகிற மூப்பருக்கு கொடுப்பது அங்கே உறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே இந்த முறை தவறாக அல்லது முறைகேடாக பயன்படுத்தப்படலாம். இது மற்ற எல்லாக் கொள்கைகளையும் செயல்படுத்துவதில் கூட நடக்கிறது. ஆனால் கவனிக்க வேண்டிய குறிப்பு என்னவென்றால் இந்த விதமான முறை தேவனால் தடைச்செய்யப்படவில்லை என்பதே.

ஆனால் பிரசங்கியாருக்கு யார் ஊதியம் கொடுக்க வேண்டும்? வேத வாக்கியங்களின்படி சபையே, சபை தனிப்பட்ட அங்கத்தினர்களாலானது. பிரசங்கியாருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப் படவேண்டும்? அது அவர் எவ்வளவு வேலை செய்கிறார் என்பதையும் சபையினுடைய கொடுக்கும் சக்தியையும் பொறுத்தது. சபையார் கொடுக்க முடியவில்லை என்றால் அங்கே அந்தப் பிரச்சனை முடிந்து விடுகிறது. ஆனால் சபையானது பகுதி அல்லது முழு ஊதியம் கொடுக்க முடியும் என்றால் அது மூப்பர்களை பொறுத்தது அல்லது மூப்பர்கள் இல்லாவிட்டால்

சபையினுடைய சகோதரர்கள் கூடி தங்கள்தேவைகளை விவாதித்து தாங்கள் விரும்புகிற பிரசங்கியாரை தீர்மானித்து தங்களிடம் உள்ள பணத்திற்கு தக்க எவ்வளவு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கலாம். பிறகு பிரசங்கியாரை அழைத்து அவரிடத்தில் இந்த தீர்மானத்தைச் சொல்லலாம். அவர்கள் அந்த ஊதியத்திற்குச் சம்மதித்தால் இந்த பிரச்சனை முடிவு பெறும். இது எவ்வளவு எளிதான காரியம்! ஒரு வேளை அவர்கள் கொடுக்கிற ஊதியம் போதாதென்று பிரசங்கியார் நினைத்தால் அவர் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்கும். சபையாரும் அப்படியே.

ஒரு சபைக்கு போதுமான அளவு பணம் இருந்து நகரத்திலோ, மாநிலத்திலோ, அல்லது மற்ற தேசத்திலோ சில வேலைகளுக்கு உதவக்கூடும். சில சமயத்தில் தங்களைப்போன்ற வேறு சபையிலிருந்து தங்கள் பிரசங்கியாருக்கு பொருளாதார உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். அவர்கள் இதைச் செய்யும்படி தீர்மானிக்கலாம் அல்லது செய்ய முடியாத நிலையிலும் இருக்கலாம். பிரசங்கியாருக்கு உதவி செய்யும் விஷயத்தில் பல சூழ்நிலைகளும் கட்டங்களும் வரலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் தாங்கள் தீர்மானிக்கின்ற தேவைகளைப் பொறுத்து சீர்ப்படுத்தலாம். நிச்சயமாகவே தங்கள் பிரசங்கியாருக்கு பண உதவி செய்வது சபையினுடைய உரிமையாயிருந்த போதிலும் அவர்களால் முடிந்தால் அப்படி செய்யலாம்.

## பாடம் - 13
## பிரசங்கியார் பணத்தை எப்படி பயன்படுத்துவது

இந்தப் பாடங்களுடைய முதன்மையான நோக்கம் என்னவென்றால் உங்களில் தங்களை தலைவர்கள் அல்ல என்று எண்ணுபவர்களுக்கு கர்த்தருடைய சபையில் தலைவராயிருப்பது என்றால் அது என்ன என்று விளங்கச் செய்வதே. இரண்டாவது நோக்கம் முன்பே கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் தலைவராக வரத் தகுதியுள்ளவரிடம் கர்த்தர் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஒரு ஆவிக்குரிய தலைவன் பிறப்பதில்லை. ஆனால் அவன் படிப்பு மற்றும் சேவையின் மூலம் உருவாக்கப்படுகிறான். நாம் பிரசங்கியாரைப் பற்றிய பாடத்தைத் தொடர்வோம். அவருடைய தேவைகள் பிரச்சனைகள், மற்றும் வேலை. இப்பொழுது நாம் படிப்பதற்கு பிரசங்கியார் பணத்தை எப்படி பயன்படுத்துவது என்ற தலைப்பை எடுத்துக்கொள்வோம்.

பவுல் சொல்கிறார்:" உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" (1தீமோ.6:7-12).

பிரசங்கியார்களும் மற்ற அநேக மக்களை போன்றவர்கள் தான் அவர்கள் அடிக்கடி பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் பிரசங்கிக்க விரும்புகிறார்கள், ஆனால் அதைச் செய்யும்படிக்கு அவர்கள் ஒரு ஊதியத்தைப் பெற்றிருக்க வேண்டும். சபையானது அவர்களுக்கு உதவி செய்ய முடியாத பட்சத்தில் அவர்களாலும் வேறு உதவியை பெறமுடியாத பட்சத்தில் அவர்களுக்கு பணத்தை எப்படி பெற்றுக் கொள்வது என்பதற்கு பலதிட்டங்களை உருவாக்கலாம். அவர்கள் தங்களுக்கு ஒழுங்காக பண

உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு மாதமும் பலரை போய் சந்திக்கலாம் அப்படிக் கொடுப்பவர்கள் தேவனுக்கு முன்பாக தான் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்று நம்பலாம். பிரசங்கியார் தனக்கு உதவிசெய்பவர்கள் தான் நடத்தும் எந்த ஒரு தொழுகையிலும் கலந்துகொள்ளாத காரணத்தால் பிரசங்கமே செய்யாமல் இருக்கலாம். அப்படி என்றால் அது ஒரு ஏமாற்றத்தின் அமைப்பாகும்.

ஒரு பிரசங்கியார் தன்னுடைய சம்பளத்தை (ஊதியத்தை) நேர்மையாகவோ, நேர்மையற்ற வழியிலோ பெற்றுக் கொண்டாலும் அதில் இருக்கிற துக்கமான உண்மை என்னவென்றால் அநேகருக்கு அந்த பணத்தை எப்படி கையாளுவது என்பது தெரிவதில்லை. மேலும் விசேஷமாக அவர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக பெற்றுக் கொள்ளும்போது அப்படியாகிறது. சிலர் வெளிநாட்டிலிருந்து உதவி பெறுகிறார்கள். அவர்கள் மற்ற சகோதரர்களைவிட பொதுவாக அதிக பணத்தைப் பெறுகிறார்கள். உண்மையில்லாதவர்கள் இரண்டு மூன்று இடங்களிலிருந்து பணத்தைப் பெறுவதன்மூலம் அதிக பணத்தை உடையவர்களாவார்கள். அப்படிபட்டவர்கள் ஆடம்பரமாக செலவு செய்யும்போதும் வீடுகள், நிலங்கள், வாங்கும்போதும் ஸ்கூட்டர், கார் போன்றவற்றில் முதலீடு செய்யும் போதும் தங்கள் புதிய சொத்துக்களைப் பற்றி பெருமையாய் பேசும்போதும் அவர்கள் தவறான வழியிலே சம்பாதித்த உண்மை வெளிப்படும். மேலும் பணம், பண ஆசை அநேக பிரசங்கியார்களை பணம் பெற்றுக்கொள்ளுவதற்கு வேதத்திற்கு விரோதமான வழிகளை கையாளச் செய்கிறது. அவர்கள் ஏமாற்று வித்தைகளையும், பொய்யையும் பயன்படுத்தலாம். அப்படிப்பட்டவர்கள் பெற்றுக் கொண்ட பணத்தை தவறாக பயன்படுத்தி அப்படிப் பெற்றுக்கொண்டதைக் குறித்து பெருமையாய்ப் பேசுவார்கள். அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்? அவர்கள் முடிவிலே தங்களை தாங்களே அழித்துக்கொள்வார்கள். மேலும் அநேக சமயங்களில் முடிவு சீக்கிரம் வரும். ஏனென்றால் எவ்வளவு காலம் தான் பிடிக்கபடாமல் மக்களை ஏமாற்ற முடியும்? ஆனால் அவர்கள் ஏமாற்று வேலை செய்து கொண்டிருக்கும்பட்சத்தில் யார் அவர்களுடைய கூட்டங்களுக்குச் செல்வார்கள். மேலும் அவர்கள் பிரசங்கத்தை யார் நம்புவார்கள்? அவரைத் தெரிந்த அநேகர் ஏதோ தவறு நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

மறுபடியும் சொன்னால் பிரசங்கியார்களும் மற்ற மனிதர்களை போலவே தங்கள் கிறிஸ்தவ சகோதர-சகோதரிகளிடமிருந்து கடன் வாங்கும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். மிகவும் உண்மையாய் ஜீவித்து கர்த்தருக்கு

விசுவாசமாக ஊழியம் செய்பவர்கள் கூட இந்தத் தவறைச் செய்யலாம். அவர்கள் தங்கள் வருவாய்க்கு தகுந்தபடி வாழக்கற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இன்றைக்கு விருந்துண்டு நாளைக்கு வறுமையை சந்திக்கிறவர்கள். அவர்கள் தங்களுடைய விருப்பத்தையே அதிகமாக பார்க்கிறார்கள். அதிக செலவு செய்து பின்பு கடன் வாங்குவது என்பது பணத்தை திருப்பி கொடுப்பதில் கஷ்டத்தை உண்டாக்கும். இப்படிப்பட்ட நிலை சண்டையும், மோசமான உணர்வுகளையும், பிரசங்கியாரை அறிந்தவர்கள் மத்தியிலே நம்பிக்கை இழப்பையும் மரியாதை இழப்பையும், தங்களுக்கு கடன் கொடுத்தவர்கள் மனதிலே எழச்செய்யும். பிரசங்கியார்களே, நான் உங்களுக்கு சொல்லும் ஆலோசனை எல்லாம் கடினமாக உழைத்து இந்த குழியில் விழாதபடி ஜாக்கிரதையாய் இருங்கள். குறைந்த வசதிக்குள் வாழுங்கள் கூடுமானால் குறைவாகவே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு உள்ளவைகளில் மட்டுமே வாழுங்கள் இவை எல்லாவற்றிலும் உங்களுக்கு போதுமானதாக இல்லை என்றால் வாரத்தினுடைய இறுதி நாட்களில் பிரசங்கம் செய்து உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது இந்த வேலைக்கு உதவியாயிருங்கள். உங்கள் தேவைகளைச் சந்திக்க தனிப்பட்ட வேலை செய்து சம்பாதிக்கலாம்.

இச்சிப்பதை வேதம் கண்டனம் செய்கிறது. பண ஆசை, பணத்தை கையாளும்போது தவறாக உபயோகப்படுத்துவது, பணத்தை வீணாக்குவது மேலும் பணத்தை கையாளும்போது ஏற்படுகிற மற்ற பிரச்சனைகள் போன்றவற்றை வேதம் கண்டிக்கிறது. ஒவ்வொரு நாளும் தன்னுடைய நடத்தையில் உண்மையாயிருக்கிறவனையே கர்த்தர் தன்னுடைய பிரசங்கியாராக இருக்க விரும்புவார். பிரசங்கிப்பது என்பது மிகபெரிய காரியம் தான். ஆனால் நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பிரசங்கிக்கும் போது உண்மையாயிராவிட்டால் அது உங்களுக்கு விரோதமான பயங்கர பாவம், சபைக்கும் விசேஷமாக தேவனுக்கும் விரோதமானது. அநேக பிரசங்கியர்களுக்கு பணத்தினால் வரக்கூடியது மற்றொரு பிரச்சனையாகும் கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ உண்மையாகவும், நேர்மையாகவும் எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்கிறேன் என்று சொல்பவர்களைப் பற்றி நான் பேசுகிறேன் - அவர்கள் வேதம் போதிக்கிறபடி கர்த்தருக்கென்று தங்கள் வருமானத்திலிருந்து கொடுப்பதில்லை. சபைக்குக் கொடுப்பதை பற்றி அநேக பிரசங்கியார் பிரசங்கித்தால் கூட தாங்கள் பிரசங்கிக்கிறபடி செயல்படுவதில்லை. அநேக பிரசங்கியார்கள் இந்த சட்டத்திலிருந்து தங்களுக்கு விதிவிலக்கு உண்டென்று நினைக்கிறார்கள். அநேகர் தாங்கள்

உண்மையாக எவ்வளவு கொடுத்தார்களென எவருக்கும் சொல்ல வெட்கப்படுவார்கள். பொதுவாக இது ஒரு அடையாளமான கொடையே உண்மையைச் சொல்வதென்றால் அவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்கிறதில்லையென அவர்கள் அறிகிறபடியினால் அவர்கள் கொடுப்பதைப் பற்றி அதிகமாக பிரசங்கம் செய்வதில்லை.

அனனியா, சப்பீராளை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அவர்களுக்கு என்ன சம்பவித்தது? அந்த சமயம் தூரமான இடங்களிலிருந்து வந்து எருசலேமில் தங்கி வேதவார்த்தைகளைக் கற்று, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மற்றவர்களின் ஐக்கியத்தில் பெலப்படும்படியாக வந்த கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்யும்படியாக விசேஷித்த பணத்தேவையிருந்தது. அதன் விளைவாக அங்கிருந்த சீஷர்களில் சிலர் தங்கள் உடமைகளையெல்லாம்கூட விற்று தேவைப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி கொடுத்தார்கள். இது அவர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்பட்ட ஒன்றல்ல மாறாக அவர்களாகவே முன்வந்து செய்தது. அனனியாவும், சப்பீராளும் இதற்கு உடன்பட்டு தங்களுக்கு இருந்த நிலத்தில் ஒரு பகுதியை விற்று அதில் ஒரு பகுதியை தாங்களே வைத்துக் கொண்டு அப்போஸ்தலரிடம் எல்லாவற்றையும் கொடுப்பதாக பொய் சொன்னார்கள். அவர்களுடைய பொய்யின் விளைவாக அவர்கள் இருவரும் அப்போஸ்தலர் பாதத்திலே விழுந்து செத்தார்கள் (அப்5:1-11). கர்த்தர் இந்த முறையை இன்றைக்கு பயன்படுத்தினால் எத்தனை பிரசங்கியார்கள், சபை அங்கத்தினர்கள் முழுமையாகவுங்கூட காணிக்கை எடுக்கும் நேரத்தில் விழுந்து சாவார்கள்.

தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஏற்றவாறு பிரசங்கியார்கள் கொடுக்கவும் வேண்டும். தங்கள் சகோதரர்களுக்கு மாதிரியாய் இருக்க தக்கதாக தங்கள் மனதில் நியமிக்கப்பட்டபடியே உற்சாகமாய்க் கொடுக்க வேண்டும் (1கொரிந்தியர் 16: 2. 2கொரிந்தியர் 9:6-7). இதை அவர்கள் செய்வார்களானால் கொடுப்பதைப் பற்றி பிரசங்கிக்கும்போது சகோதரர்கள் அதற்கு செவிசாய்பார்கள்.

ஆம். பிரசங்கியார்களும் அவர்கள் குடும்பங்களும் பணத்தை எப்படிக் கையாளுவது என்பதைப் பற்றி பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இந்த விஷயத்தில் இயேசு அவர்களுக்கு உதவி செய்யும்படி அவர்கள் அனுமதித்தால், அவர்கள் மிகவும் நன்றாயிருப்பார்கள்.

## பாடம் - 14
## வாடகை பிரசங்கியார்

கடந்த இரண்டு மூன்று பாடங்களில் பிரசங்கியாரையும் பணத்தையும் பற்றி படித்தோம். இது மிகவும் முக்கியமானது அநேக பிரசங்கியாருக்கு பணத்தைக் குறித்த பிரச்சனை இருக்கிறது. இன்றைக்கு படிக்க போகிற பாடம் இதை இன்னும் நிரூபிக்கும் ஒரு பிரசங்கியார் சம்பளம் வாங்குவது நிச்சயமாகவே தவறல்ல. ஆனால் கொஞ்சம் பணத்திற்காக அவர்தன்னுடைய இருதயத்தையும் ஆத்துமாவையும் விற்பது தவறு. அப்படிச் செய்பவர் யாராவது என் நினைவுக்கு வந்தால் அது 30 வெள்ளி காசுக்காக இயேசுவைக்காட்டிக் கொடுத்த யூதாசையே நினைவூட்டும். அவன் தற்கொலையில் முடிந்தான். பிரசங்கத்திற்காக வாங்கப்படுகிற பிரசங்கியாரும் உண்மையாகவே ஆவிக்குரிய தற்கொலை செய்கின்றார். கொலை ஆனால் பிரசங்கிப்பதற்காக சம்பளம் வாங்கப்படுவதற்கும் வெறுமனே வேலைகள் செய்வதற்காக வாங்கப்படுவதற்கும் என்ன வித்தியாசம்? நிச்சயமாகவே இந்த கேள்விக்கு முன்னமே உங்களுக்குப் பதில் தெரியும் உண்மையாய் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு பிரசங்கிக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு பிரசங்கிப்பதற்கு கொடுக்கப்படும் சம்பளம் ஒருவகை ஆனால் பிழைப்புக்காக மட்டுமே பிரசங்கித்து பணம் வாங்குவதென்பது இன்னொரு வகை.

நான் அநேகம்தரம் அநேகரை 'கிறிஸ்துவின் சபைக்கு மாற்றுவதற்கென்று' தங்களை உண்மையாக ஒப்புக்கொடுத்து தங்களை பிரசங்கியார்கள் என்று சொல்லி முழுநேர உதவிகிடைத்தால் அப்படி செய்வேன் என்றும், அப்படி கிடைக்கும் பட்சத்தில் இரண்டு மூன்று சபைகளைக் கூட மாற்றுவதற்கு முடியும் என்றும், சொன்னவர்களை சந்தித்திருக்கிறேன். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர்கள் வேறு சபைகளில் ஊழியம் செய்கிறார்கள் என்றும். நான் அவர்களுக்கு சம்பளம் கொடுத்தால் அந்த சபைகளை அவர்களோடு கொண்டு வந்துவிட முடியும் என்றும் சொன்னார்கள். அதனுடைய அர்த்தம் என்ன வென்றால் முன்பு அவர்கள் இருந்த நிலையை விட்டு (சம்பளம் கிடைக்கும்) அந்த நேரத்திலிருந்து தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்று அழைத்துக் கொள்வார்கள். இப்படியிருக்கும் பட்சத்தில் அவர்கள் தண்ணீரில் முழ்க சம்மதித்து மற்ற தேவைகளுக்கேற்ப மாற்றங்களை செய்து கொள்வார்கள். இந்த விதமான காரியங்கள் அவர்கள் எப்படிபட்ட மனிதர்கள் என்று யோசிக்க வைக்கும். இந்த விதமான பேரத்திற்கு எந்த விதமான சபை சம்மதிக்கும்? இயல்பாகவே எனக்கு அவைகளில் ஆர்வமில்லை. இந்த

விதமாக இருக்கும் பட்சத்தில் அந்தப் பிரசங்கியாரையும் சபைகளையும் பற்றி ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு உண்மையான மனமாற்றமுமில்லை மனச்சாட்சியுமில்லை. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களையே பணத்திற்காக விற்றுப்போடுவார்கள். இந்த விதமான காரியங்கள் உங்கள் இருதயங்களை உடைக்கிறது. ஆனால் இது சம்பவிக்கிறது. இயேசு ஆட்டுத் தொழுவத்தைப் பற்றியும், தொழுவத்திற்கான வழியைப்பற்றியும் நல்லமேய்ப்பரைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். ஆட்டுத்தொழுவம் என்பது சபை, தொழுவத்திற்கான வாசல் ஒரே வாசல், நல்ல மேய்ப்பர் கிறிஸ்து சபைக்குள் செல்ல யார் வழி? (யோவான் 14:6). இப்பொழுது கிறிஸ்து சொல்வதைக் கேளுங்கள் "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவ னாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்"... (யோவான் (10:11-14) என்று கிறிஸ்து சொல்லுகிறார்.

தயவு செய்து கவனியுங்கள் அவர் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கவும் சித்தமுள்ளவராக இருக்கிறார். இங்கே ஆடுகள் சபை அல்லது கிறிஸ்தவர்களைக் குறிக்கும். பவுல் பின்வருமாறு (அப்போஸ்தலர் 20:28) எபேசு சபையில் உள்ள மூப்பர்களுக்கு சொல்கிறார். "ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" பவுல் இங்கே சபையை மந்தையாகவும், கிறிஸ்துவே மந்தையை அல்லது சபையை அவருடைய சொந்த இரத்தத்தினால் வாங்கியதாகவும்குறிப்பிடுகிறார். அந்த அர்த்தத்தில் தான் நல்ல மேய்ப்பர் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார் என்று சொல்கிறார்.

கிறிஸ்துவும் கூலிக்காரனைப்பற்றி பேசுகிறார். கூலிக்காரன் மேய்ப்பன் அல்ல என்று இயேசு சொல்கிறார். ஆடுகள் அவனுக்குச் சொந்தமல்ல ஆகவே கூலிக்காரன் ஓநாயோ அல்லது பகைவனோ வரும் போது ஆடுகளை பாதுகாப்பற்ற தனிமையில் விட்டு விட்டு போய்விடுகிறான். இந்த இடைவெளியில் ஓநாய் அல்லது பகைவன் ஆடுகளைப் பிடித்து

சிதறடிக்கிறான் என்றும் இயேசு சொல்கிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால் அவன் மக்களை வஞ்சித்து அவர்களைப் பிரித்து விடுகிறான். மேலும் கூலியாள் கூலிக்காரனாயிருக்கிறபடியினாலும் ஆடுகளைப்பற்றிய கவலை அவனுக்கு இல்லாதபடியினாலும் இப்படிச் சம்பவிக்கிறது என்று இயேசு மேலும் விளக்குகிறார். தீமையினின்று அவைகளை பாதுகாக்கும்படி அவன் காத்திருப்பதில்லை. இதுவே உண்மையாய் மனந்திரும்பாமல், சபை அங்கத்தினர் மீது கரிசனம் இல்லாத, கூலிக்காக அமர்த்தப்படும் பிரசங்கியார்கள் மற்றும் போதகர் விஷயத்தில் இதுவே உண்மை. எல்லாம் நன்றாகவே நடந்து அவர்கள் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டால் அவர்கள் வேலையிலிருப்பார்கள் ஆனால் ஒரு பிரச்சனை எழுந்தாலோ அல்லது கேள்வி கேட்கப்பட்டாலோ அந்த வாடகைப் பிரசங்கியார் சபையை பிரிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு தொலைந்து போகும்படியாக சபையைக் கள்ள போதகர் வசம் விட்டு விட்டு, மறைந்து விடுவார்கள். கிறிஸ்து சொல்கிறார்; நல்ல மேய்ப்பனுக்கு ஆடுகளையும் ஆடுகளுக்கு அவனையும் தெரியும். இன்றைய உலகில் கூட கர்த்தருக்கு அவருடைய ஜனங்களையும், ஜனங்களுக்கு அவரையும் தெரியும், ஆகவே அவர் அவைகளை விட்டு விலகவும்மாட்டார் கைவிடவும் மாட்டார்.

வாடகைப் பிரசங்கியாரைப் பற்றி வேறுவிதமாக பார்ப்போம். அவன் ஒரு வேளை கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை உள்ளவனாக வந்திருக்கலாம், ஆனால் அவனுக்கு அநேக சபைகள் உண்டு என்றும் ஒவ்வொன்றும் ஒன்றைவிட ஒன்று நல்லதென்றும் போதிக்கப்பட்டிருக்கலாம். வேலை தேவையாயிருப்பதாலும், தன்னை ஒரு முழுநேர ஊழியனாக நினைத்து அவன் தான் சந்திக்கிற அநேக சபைகளுக்கு தன்சேவையை அளிக்கலாம். இப்படிப்பட்ட மனிதன் விசேஷமாக வெளிநாட்டுக்காரர்களை எளிதாக ஏமாற்றலாம் என்ற நம்பிக்கையில் அவர்களிடமாக ஈர்க்கப்படலாம். அவர்கள் வித்தியாசமான சபையிலிருந்து வந்திருக்கும் பட்சத்தில் கிறிஸ்துவின் சபையில் கூட ஒரு வேளை அவர் மனமாற்றமடைந்து, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு பயிற்சி கூட பெற்றிருக்கலாம். ஆனால் அவன் குறிப்பிட்ட சபையில் பிரசங்கியாராக இருக்கும்படி பயிற்சியளிக்கப்பட்டிருப்பதால் அவன் தொடர்ந்து அந்த போதனைகளையே எந்த சபையிலிருந்தாலும் போதிக்கலாம். காரியங்கள் சரியாக ஒரு சபையில் நினைத்தப்படி நடக்காவிட்டால் விரைவாக வேறுசபைக்கு மாறிவிடலாம்.

இந்த விதமான காரியத்தை எவ்விதமான மனிதனால் செய்யமுடியும்? வாடகையாளாரால் மட்டுமே. ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு மக்கள் மாறுவது உண்மைதான் ஆனால் பொதுவாக தாங்கள் தவறான உபதேசத்திலிருப்பது உணர்த்தப்பட்டு மனந்திரும்பி சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கும் கிறிஸ்துவின் சபை அங்கமாவதற்கும் அப்படிச் செய்யலாம். ஆனால் அந்த மாற்றம் இருதயத்தை பொருத்ததே தவிர சம்பளம் கொடுப்பவரை பொருத்ததாக இருக்கக் கூடாது. பணத்துக்காக தன்னுடைய ஆவிக்குரிய ஐக்கியத்தை விற்பது உண்மையாகவே மிகவும் கீழானது ஆகும். ஆகவே கூலிக்காரன் கூலிக்காகவே இருக்கிறான் அவனுக்கு இதயம் இல்லை, உண்மையான மனமாற்றம் இல்லை, ஒப்புக்கொடுத்தல் இல்லை. அவன் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபையில் சற்று அதிக பணம்கிடைக்கும் என்றால் சிரமமின்றி தாவி விடுவான். அவன் எப்பொழுதும் அதிகமாக பணத்தையே நோக்கிக் கொண்டிருப்பான்.

சில சமயங்களில் அநேக பிரசங்கியார்கள் ஒரு சபையை விட்டு இன்னொரு சபைக்குப் போவதை நாம் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் தாங்கள் நாமகரண சபையிலிருந்து உபதேசத் தவறுகளை உணர்ந்து மனந்திரும்பி கிறிஸ்துவின்சபையின் அங்கமாகும்படி உண்மையாய் மனந்திரும்பியிருப்பார்கள் என்பது சந்தேகம். ஒரு பிரசங்கியார் அவ்வப்போது தன்னுடைய தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்வது கூடாத காரியமல்ல என்றாலும் பொதுவாக அதிக எண்ணிக்கையில் பிரசங்கியார்கள் தங்கள் மார்க்கத்தை மாற்றிக் கொள்ளும்போது அது அவர்கள் சார்ந்திருந்த மார்க்கத்தில் அவர்களுக்கு உள்ள கசப்பினாலும் அல்லது மற்ற இடத்தில் அதிக சம்பளமோ அல்லது வேறு வசதிகளோ கிடைக்கும் என்ற உள் நோக்கத்தோடும் மாறுவார்கள்.

என் நண்பனே நீ ஒரு கூலிக்காரன் அல்ல என்று நான் நம்புகிறேன். அப்படியிருந்தால் நீ மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்படி. நீ யாருக்குப் பிரசங்கிக்கவேண்டும் என்று திட்டமிடுகிறாயோ தேவனுடைய சித்தம் இன்னது என்று நன்றாகக் கற்று கீழ்ப்படிந்து நடைமுறையிலிருக்கிற ஒரே உண்மையாயிருக்கிற கிறிஸ்துவின் சபையில் அங்கமாகும்படி நான் உன்னை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போஸ்தலர் (2 -ம் அதிகாரம்).

## பாடம் - 15
## வெளிநாட்டு உதவி

வெளிநாடுகளில் உள்ள சபை இன்னும் முதிர்ச்சியடையாமல் இருப்பதால், அங்குள்ள எந்த ஒரு பிராந்திய சபையும் தன்னுடைய பிரசிங்கியாருக்கு உதவிசெய்ய முடியவில்லை. சில சபைகளிலே அங்கத்தினர்களே பிரசங்கம் செய்கிறார்கள் அல்லது அந்த சபையினுடைய பிரசங்கியார்கள் வேறு வேலைகள் செய்துக்கொண்டு ஊழியம் செய்கிறார்கள். ஒரு சபையானது தன்னால் ஒரு பிரசங்கியாருக்கு முழு உதவி செய்யக்கூடாமல் போனாலும் தனக்கென்று ஒரு பிரசிங்கியாரை அமர்த்திக் கொள்ள வேறு வழிகளும் உண்டு. உண்மையாகவே தேசத்தின் பல பாகங்களில் எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும், சக்தியிலும், சபைகள் வளர்ந்து வந்தாலும் ஒரு பிரசங்கியாருக்கு முழுமையான உதவிச்செய்வதற்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாமலிருக்கலாம்.

பிராந்திய சபையானது தன்னுடைய பிரசங்கியாருக்கு முழுஉதவி செய்ய முடியாமல் இருப்பதால் அநேக ஊழியர்கள் மேல் நாடுகளின் உதவியைத்தேடுகின்றனர். அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஜெர்மனி, ஆஸ்ரேலியா மேலும் மற்ற இடங்களிலிருந்து சகோதரர்கள் மிகுந்த உதாரத்துவமாக தாங்கியிருக்கிறார்கள். உண்மையாகவே அந்த நாடுகளிலுள்ள பிரசிங்கியார்கள் இங்கு வந்து தேவைகளை நேரடியாகக் கண்டிருக்கிறார்கள். பிரசிங்கிக்க வேண்டுமென்கிற வாஞ்சையுடைய சகோதரர்களை சந்தித்ததன் விளைவாக அநேகருக்கு உதவி அளிக்கப்பட்டது. இது ஒரு நற்காரியமாக தோன்றலாம் சந்தேகமில்லாமல் சில இடங்களில் சபைகள் வளர்வதற்கு இது உதவியானதுதான், ஆனால் இதனால் சில மோசமான விளைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

வேலையில்லாமலும் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையில்லாமலும் இருக்கிற இளைஞர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைத்ததனால் அநேகர் ஊழியம் செய்யும்படியாக கவரப்பட்டார்கள். மத சம்பந்தப் பட்ட குருக்களும், மதசம்பந்தப்பட்ட வேலைகளை செய்கிற பரிசுத்த மனிதர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் இருக்கின்ற ஒரு நாட்டில் இந்த விதமான வேலைகளுக்கு மிகுந்த மரியாதை உண்டு. இந்த விதமான மனிதர்கள் பேசுவதை எளிதான வேலையாக எண்ணி மேடை பயமின்றி பேசுவார்கள். அவர்களுடைய கலாச்சாரத்தின் காரணமாக சரீர வேலை செய்யும்படியான அவசியம் அவர்களுக்கு இல்லை. ஆகவே

காண்கிறபடி பிரசங்கியருக்கு சமூகத்தில் பரவலான மரியாதை உண்டு. இதோடு கூட மேல்நாட்டு உதவி வாங்கினோம் என்ற பெருமையும் அமெரிக்கா அல்லது மற்ற நாடுகள் சென்று வரக்கூடிய கூடுதல் அனுகூலங்களையும் அனுபவிப்பதில் பெருமை கொண்டிருக்கிறார்கள். மேலும் இதில் உள்ள அனுகூலம் என்னவென்றால் இப்படிப்பட்ட பிரசங்கியார்கள் தங்கள் பிராந்தியத்திலுள்ள சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாததாலும், உதவிசெய்கிற மேல்நாட்டு சகோதரர்கள் யாரும் இவர்களை நெருக்கமாக மேற்பார்வை செய்யாததாலும், இன்னும் அவர்களுக்கு இது அனுகூலமாகயிருக்கிறது. யாராகிலும் சில சந்தர்ப்பங்களிலே அவர்களிடம் அனுப்பப்பட்டாலும் வருகிறவர்களுக்கு அந்த இடத்திலுள்ள பாஷை தெரியாது, அவர்களுடைய சந்திப்பும் சுருக்கமாகவே இருக்கும்.

இதனுடைய சாராம்சம் மேல் நாட்டு உதவி வாங்குபவர்கள் எல்லோரும் சலுகை எடுத்துக்கொள்கிறார்கள் என்றோ இன்னும் மேல்நாட்டு உதவி பெறுகிற அநேகர் மேல் நாட்டு சகோதரர்களையும் அவர்கள் தருகின்ற உதவிகளையும் தவறாக பயன்படுத்தி பிரதிபலனாக ஒன்றும் செய்யாமலிருக்கிறார்கள் என்றோ அர்த்தமில்லை. நிச்சியமாகவே சில பிரசங்கியார்கள் நல்லவர்களும், உண்மையுள்ளவர்களும், நம்பிக்கைக்குரிய வேலை செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயத்தில் அநேகர் அப்படியில்லை, என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். மேல்நாட்டு உதவியைப் பற்றிய மோசமான பகுதி இது.

தங்களுக்கு உதவி செய்யும் மேல்நாட்டு சகோதரர் களிடமிருந்து அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் பெற்றுக்கொள்ள பலவிதமான திட்டங்களை வைத்து செயல்படுபவர்களும் உண்டு. அவர்கள் அறிவில்லாதவர்களல்ல. வெளிநாட்டு சகோதரர்களுக்கு எது மிகவும் பிடிக்கும் என்பதைக் கண்டு அதை செய்து அவர்கள் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள், பள்ளிகள், பிரசங்கியார் பயிற்சி திட்டங்கள் அநாதையில்லங்கள், மேலும் (100,1000) நூறு, ஆயிரக்கணக்கில் ஞானஸ்நானம் பண்ணக்கூடிய சுவிஷேசப்பிரயாணங்கள் அவர்களைக் கவரும்படியான சில அம்சங்கள். சிலர் சகோதரர்களுடைய இரக்க சுபாவத்தை அநாதை, தீ விபத்து, மேலும் வெள்ள சேதங்கன் என்று சொல்லி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். மேலும் அநேக பிரசிங்கியார்கள் அச்சடிக்கப்பட்ட கடிதங்களையும், தபால் உறைகளையும் மேல்நாட்டில் உள்ள சகோதரர்களுக்கு உதவி கோரி அனுப்புகிறார்கள். யாராகிலும் சிலர் அதற்கு நல்ல பதில் அளித்தால் கூட நல்ல உதவி பெற்றுக்கொள்கிறார்கள்.

சிலர் நிலங்களையும், வீடுகள், கார்கள், வீடியோக்கள், அநேகவற்றையும் தங்கள் பெயரில் வாங்குகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் சிலர் தங்களுக்கென்று ஒரு கூட்ட பிரசிங்கியார்களை சேர்த்துக்கொண்டு சாம்ராஜ்யங்கள் நடத்துகிறார்கள். உண்மைதான் முடிவில் சிலர் தங்களுடைய மாறுபாடான வழிகளோடு வெளியேறிவிடுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் பிடிக்கப்படுவார்கள். இது அவர்களுடைய மேல்நாட்டு சகோதரர்களை ஏமாற்றம் அடையச்செய்வதினாலே எதிர்காலத்தில் எந்த விதமான மேல்நாட்டு உதவி இல்லை என்று மறுக்கக் காரணமாகிவிடும்.

மேல்நாட்டு உதவி பெறுபவர்கள் சோம்பேறிகளாக இருக்க கூடும். அவர்களில் சிலர் வேதத்தின்படியான பிரசங்கம் செய்யுமளவுக்கூட சத்தியத்தை அறியாமலிருப்பார்கள். மற்ற பிரிவினை சபைகளிலிருந்து மாற்றப்படுகின்ற நூற்றுக்கணக்கானவர்களை சிந்தித்துப் பாருங்கள். ஏன் அவர்கள் அவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மாற வேண்டும். அவர்கள் சத்தியத்தைக்கேட்டு தங்கள் தவறுகளைக் கண்டு தேவனுக்கு கீழ்ப்படியவேண்டுமென்கிற விருப்பத்தோடு மாறினார்கள் என்றே நினைக்க விரும்புகிறோம். ஆனால் உண்மையாகவே அநேகர் மாற்றம் அடைந்ததற்கான காரணம் கிறிஸ்துவின் சபை வாடகைக்குப் பிரசிங்கியாரை எடுத்து அவர்கள் முன்பு பெற்றுக்கொண்டிருந்ததை விட அதிக ஊதியம் கொடுக்கிறதென்று கேள்விப்பட்டதினாலேயே மாற்றம் அடைகிறார்கள். இவர்களுக்கு உதவி அளித்தால் அவர்கள் எதைப்பிரசங்கிப் பார்களென்று நினைக்கிறீர்கள்? சுவிஷேசம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற் 16:15-16) வார்த்தை அறிவிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொன்னார் ( 1தீமோத்தேயு 4:2) ஆனால் பிரசங்கியார்களுக்கு சத்தியம் தெரியாவிட்டால் அவர்கள் உதவி பெற்றபோதிலும் எப்படி பிரசங்கிக்க முடியும் இந்த விதமான முறை நன்றாக கவனித்து பார்க்கிறவர்கள் கண்களுக்கு வாடகை பிரசங்கியார்கள் அதிகமாக கொண்டு வரப்படுகிறார்கள் என்றே நினைக்க தோன்றும்.

முன்பே சொன்னபடி வெளிநாட்டிலிருந்து உதவி வாங்குகிற பிரசங்கியார்கள் மற்ற சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இல்லாததும் சகோதரர்கள் அவர்களை எந்த வழியிலும் கட்டுப்படுத்தவோ, நடத்தவோ முடியாத ஒரு நிலையையும் பார்க்கிறோம். இது மோசமான சூழ்நிலையை உருவாக்குகிறது. அநேக பிரசங்கியார்கள் இளைஞர்களாய் இருப்பதால் அவர்களுக்கு நல்லவழி நடத்துதலும், மேற்பார்வையும் தேவைப்படுகிறது. ஆனால் இதற்கு அவர்கள் செவிசாய்க்காமல், அல்லது எல்லா நேரங்களிலும் நாட்டின் பல பாகங்களில் சுற்றிக்கொண்டிருந்தால் அவர்கள் எவ்வளவு நன்மைகளை சாதிக்கமுடியும்?

வெளிநாட்டு உதவியில் இன்னொரு மோசமான காரியமென்னவென்றால் அப்படிப்பட்ட பிரசங்கியார்கள் சுயஉதவி அளிக்கத்தக்கதாக வேலைகளைச் செய்வதில்லை. காரணம் என்ன வென்றால் தங்களுக்கு உதவி செய்யும் வெளிநாட்டு சகோதரர்கள் தங்கள் பிராந்திய சபையைவிட அதிக ஊதியம் கொடுக்கிறார்கள் என்ற காரணமே. ஆகவே அவர்கள் தங்கள் பிராந்திய சபையில் உதவி வாங்கிக் கொண்டு சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்கள் சுயஉதவி சபைகளை உருவாக்கி (மேல்நாட்டு சகோதரர்கள்) அவைகளை அந்த பிராந்திய சபையின் பிரசிங்கியாரிடம் ஒப்படைத்து மற்ற இடங்களிலும் இந்த வெற்றியை தொடர்வார்களானால் இந்த விதமான ஏற்பாட்டிற்கு நான் மிகவும் ஆதரவாக இருப்பேன். ஆனால் நடைமுறையில் சுயஉதவி சபைகள் ஏற்படுத்தப்படுவது என்பது அபூர்வமாகவே இருக்கிறது. இதனுடைய பொருள் என்னவென்றால் சபையானது வருஷங்கள் தோறும் மேல்நாட்டு உதவியையே நம்பியிருக்கும் அளவிற்கு பெலவீனப்பட்டுப் போகிறது. பிராந்திய சபையையும் இது பெலவீனப்படுத்துகிறது. எப்படியென்றால் கிறிஸ்தவர்கள் இது தங்களுடைய பொறுப்பு என்பதை புரிந்துகொள்ளாமல் ஏதோ இது வெளிநாட்டவர் வேலை என்று நினைத்து விடுகிறார்கள்.

இதில் உள்ள இன்னொரு மோசமான உண்மை என்னவென்றால் மேல்நாட்டு உதவி வாங்கும் சகோதரர்கள் தங்களுக்கு உதவி செய்பவர்களுக்கு பிரியமாக நடக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள ஏதுவாயிருக்கிறது. அவர்கள் வரும்போது எல்லா ஞானஸ்நானத்தையும் அவர்களே கொடுக்கும்படி செய்கிறார்கள், சில சமயங்களிலே அந்தவிதமான பிரசங்கியார்கள் அந்தந்த இடத்தில் உள்ள பிரசங்கியார்கள் மத்தியில் வருடக்கணக்கில் பிரிவினையை ஏற்படுத்திவிடுகிறார்கள். தங்களுக்கு உதவி செய்பவர்களை சார்ந்து குழுக்களாக பிரிந்து பல பிரசங்கியார்கள் ஐக்கியமாய் ஊழியம் செய்ய மறுப்பது என்பது எவ்வளவு துக்கமான காரியம். நான் சபைகளுக்குச் சொல்லுவது என்னவென்றால் சிலகாலம் மேல்நாட்டு உதவி இல்லாமல் இருப்பது கடினமாக இருக்கலாம் முடிவிலே, உங்கள் சொந்த வேலைக்கு தேவைப்படும் உதவியை நீங்களே சந்திக்கும்போது உங்களுக்கு மிகுந்த பெலனாக இருக்கும், நீங்கள் ஏன் முயற்சிக்ககூடாது?

## பாடம் 16
## சுயஉதவி சபையைக் கட்டுவது

பிரசங்கிக்க விரும்புகிற அநேக வாலிபர்களை நீங்கள் கேட்டால் உடனடியாக அவர்கள் சொல்வது தாங்கள் முழுநேர பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்பதே. அவர்கள் பகுதிநேர வேலைகளைச்செய்து கொண்டு தங்களுடைய ஜீவனத்துக்குத் தேவையானதை சம்பாதித்து வாரத்தின் கடைசி நாட்களில் அல்லது மற்ற நாட்களில் பிரசங்கிக்க விரும்புவதில்லை. நான் அநேகரிடத்தில் பேசி இந்த விதமான யோசனையைச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்கள் எல்லோரும் திரும்பவந்து சொல்லும் பதில் என்னவென்றால் நான் முழுநேரமும் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்பதே. இதன் பொருள் என்ன? தங்களுக்கு முழுநேர ஊதியம் வேண்டுமென்று அவர்கள் விரும்புவதே. ஆனால் அவர்கள் சார்ந்திருக்கிற சபை இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதும், அங்குள்ள கிறிஸ்தவர்கள் குறைந்த எண்ணிக்கையிலிருப்பதினால் அவர்கள் தங்கள் பிரசங்கியார்களுக்கு முழுநேர உதவி செய்ய முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனுடைய பொருள் என்னவென்றால் ஒரு மேல்நாட்டு உதவியை நாடிச்செல்ல வேண்டும் என்பதே. இந்த விதமான ஒரு தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட பிறகு அநேகர் என்ன செய்வார்கள்? அவர்கள் முழுநேர ஊதியம் வாங்குவார்கள் அவ்வளவுதான். இந்த விதமான ஏற்ப்பாட்டினால் பிரசங்கியாரோ சபையோ பயனடைவதில்லை.

நீங்கள் ஒரு இளம் பிரசங்கியாராக இருந்து உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும்படி அர்ப்பணித்திருந்தால் ஒவ்வொருபடியாக முன்னேறி செல்லுங்கள். பிரசங்கியாராக இருப்பது என்பது பிரசங்கிப்பது மட்டுமல்ல இதைவிட அதிகமானவைகளை முழுநேர பிரசங்கியாராகயிருப்பதற்குச் செய்ய வேண்டும். முதலாவதாக அதற்கான பயிற்சியைப்பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய கல்வித்தகுதியை வீட்டிலிருந்தோ, கூடுமானால் கல்லூரியிலிருந்தோ, பெற்றுக்கொள்ளுங்கள். இதை நீங்கள் செய்து கொண்டிருக்கும்போதே உங்கள் வேதாகமத்தை வாசித்துக் கற்றுக்கொள்ளுங்கள். மற்ற தொடர்புள்ள புத்தகங்களை உங்களுடைய படிப்பில் உதவியாய் இருக்கும்படி படிக்கலாம். நீங்கள் பிராந்திய சபையிலே அங்கத்தினராக இருந்தால் சபையின் எல்லா நடவடிக்கையிலும் பங்கெடுங்கள். உங்கள் பகுதியிலே பிரசங்கியார் பயிற்சி பள்ளி இருக்குமானால் ஒன்று இரண்டு வருடங்கள் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

நீங்கள் வீட்டிலிருக்கும்போது கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரசங்கியுங்கள். சபை உங்களுக்கு உதவ முடியாத பட்சத்திலும் நீங்கள் பிரசங்கிக்க விரும்பினால் திருமணம்செய்து கொண்டு ஒரு வேலையையும் தேடிக்கொண்டு பிரசங்கியுங்கள். உங்களுடைய ஜீவனத்துக்காக வேலை செய்யும் போதே பிரசங்கிக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் இதைச் செய்தார் (அப்.18:3). என்னுடைய சொந்தக் கைகளினாலே வேலை செய்தேன் (1கொரிந்தியர் 4:12). ஆனால் பிரசங்கிக்க அது அவருக்கு தடையாயிருந்ததில்லை உண்மையாய் தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்தால் உங்களுக்கும் அது தடையாய் இராது. மெய்யாகவே நீங்கள் பிரசங்கிக்க தீர்மானம் உள்ளவராகயிருந்தால் அதற்கு ஒரு வழியை கண்டுபிடித்துவிடுவீர்கள்.

மற்றவர்களோடு சேர்ந்து ஊழியம் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். மற்ற பிரசங்கியார்களை பகைவர்களாகவோ, போட்டியாளர்களாகவோ எண்ணாதீர்கள். அவர்கள் உங்களை நீங்கள் நினைக்கிறபடி நடத்தாவிட்டாலும், நீங்கள் அவர்களிடம் சரியான மனப்பான்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

நீங்கள் ஒரு பிராந்திய சபையில் ஊழியம் செய்பவராக இருக்கலாம் அல்லது இன்னொரு பகுதியில் சென்று ஊழியம் தொடங்கி அங்கேயே தங்கி காலப்போக்கிலே உங்களுக்கு முழு உதவியையும் செய்கின்ற அளவுக்கு அதை வளர்க்கலாம். இப்படிச் செய்யும்போது ஒரு எஜமானைப் போல பிரசங்கிப்பது , போதிப்பது, பாடுவது, ஜெபிப்பது போன்றவைகளை செய்யாமல் சபையிலுள்ள சகோதரர்களும் வளர்ச்சியடையும்படி இப்படிபட்டவைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த உதவியாயிருங்கள். நீங்கள் அவர்களை கனம் பண்ணி அவர்களிலே உங்கள் உண்மையும் நேர்மையும் ஊழியம் செய்வதற்கான ஆதாயத்தையும் நீங்கள் காண்பிப்பதினால் ஏற்படுத்தும் மரியாதை நிமித்தம் அவர்கள் உங்களுக்கு முழுஉதவியும் செய்யக் கூடிய அளவிற்கு வளர்ச்சியடைவார்கள். இதற்குபிறகு உங்களைக் குறித்து நீங்கள் முக்கியமானவராகவோ, பெருமைபாராட்டவோ செய்யாதீர்கள். மாறாக எப்பொழுதும் போல தாழ்மையாகவும், சகோதரர்கள் மேல் அன்புள்ள வராகவும், உங்களை சுற்றியிருக்கிற இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிஷேசத்தை கொண்டு செல்கிற வாஞ்சையுள்ளவர்களாகவும் இருங்கள்.

கர்த்தருக்கென்று எதையாகிலும் பெரிதாக செய்யவிரும்பினால் சுயஉதவி பெறக்கூடிய சபையைக் கட்டுங்கள். இது உங்களுக்கு முன்பாகயிருக்கிற உண்மையான பரீட்சையாக இருக்கும். மற்ற

பிரசங்கியார்களுக்கும் சபைகளுக்கும் இது ஒருபெரிய மாதிரியாயிருக்கும். இந்த உலகத்திலிருக்ககூடிய சபை செய்ய வேண்டியது என்ன வென்றால் அது சுயாதீனம் உள்ளதாக இருக்க வேண்டும். சுய உதவி செய்யக்கூடிய சபைகள் மூப்பர்கள், உதவிக்காரர்கள், தன்னுடைய பிரசங்கியார்களுக்கு உதவி செய்து அவர்களுடைய தேவைகளை சந்திக்கிறதாயும், தங்கள் சொந்த கால்களிலே நின்று வெளியிலிருந்து உதவியை எதிர்பாராமல் தங்கள் தேவைகளை சந்தித்துக்கொள்கிற நிலையிலும் இருக்க வேண்டும். இது எல்லோருக்கும் நம்மால் எது முடியுமோ அதை மீண்டும் உறுதி செய்வதாக அமையும்.

அநேக சகோதரர்கள் இந்நாள் வரைக்கும் மற்றவர்களிடம் உதவியை எதிர்ப்பார்க்கும் மன நிலையிலிருந்து கொண்டு தங்களின் சுய வளர்ச்சியைக் குறித்த விஷயத்தில் தோல்வியுற்றவர்களாகவே இருக்கிறார்கள். இன்னுங்கூட தங்களுடைய சொந்த தேவைகளை கவனிக்கிற நிலையில் கரங்களை நீட்டுகின்ற நிலையிலேயே இருக்கின்றார்கள். சபையிலே எத்தனை குடும்பங்கள் தங்கள் சுயதேவைகளைச் சந்திக்கின்ற நிலையிலிருக்கின்றன? அவர்கள் வசதியானவர்களாகவோ, அதிக ஊதியம் வாங்குகிறவர்களாகவோ அல்லது வாங்காமலோ இருக்கலாம். ஆனாலும் தங்களுடைய சொந்தத் தேவைகளைச் சந்திக்கிற அளவிற்கு அவர்கள் பொருள் ஈட்டுகிறார்கள். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் அந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் ஏன் சபையின் தேவைகளைக் குறித்து கவனிக்கக் கூடாது? இது ஒரு குடும்பத்தால் மட்டும் ஆக கூடியதல்ல. அநேக குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய வருமானத்தினால் 10 அல்லது 12 சதவீதத்தை தேவனுக்குக் கொடுத்தால் தங்கள் சொந்த பிரசங்கியாருக்கு உதவி அளிக்க முடியும். இந்த சுதந்திர நிலையை அவர்கள் எட்டிவிட்டால் பின்பு ஒருபோதும் மற்றவர் மீது சார்ந்திருக்க விரும்பமாட்டார்கள்.

இவ்வாறாக சுற்றிலுமுள்ள சில சுயஉதவி சபைகள் தங்கள் தேவைகளை சந்திக்கிற நிலையில் இருக்கும்போது மற்ற சபைகள் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்ற ஊக்கப்படுத்தப் படுகிறார்கள். மேலும் இந்த விதமான சபைகள் சுய தேவைகளை சந்திக்கிற அளவுக்கு வளர்ச்சியடைந்த பிறகு மற்ற காரியங்களைச் செய்யலாம். பல இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்யக்கூடிய ஊழியக்காரர்களை தங்களிடமிருந்து அனுப்பமுடியும். பிரசங்கியார் பயிற்சிபள்ளிகளுக்கு உதவமுடியும். ஒரு நாளிலே அவர்கள் பகுதியிலே ஒரு கிறிஸ்தவ கல்லூரி தொடங்குகிற அளவிற்கு அங்கே கிறிஸ்தவர்கள் நிரம்பியிருப்பார்கள்.

மேலும் அநாதை இல்லங்கள் போன்ற நல்ல வேலைகளையும் அவர்கள் செய்ய முடியும்.

மறுபடியுமாக ஒரு பிரசங்கியாராக நீங்கள் என்ன செய்ய முடியும்? சபையானது எண்ணிக்கையிலே வளர்வதனுடைய முக்கியத்துவத்தை உணர்த்துங்கள். அதே சமயம் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய தன்மையில் வளர்ந்து தாங்கள் கொடுப்பதிலும் ஒன்றாக கற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களில் வளர்வதிலும் ஊக்கப்படுத்துங்கள். அவர்களோடு உட்கார்ந்து அவர்களிடமுள்ள எல்லாவற்றையும் வடிகட்டிவிடாதீர்கள். எதிர்மறையாக, சோம்பலாக எந்தவிதமான இலக்கும், முயற்சியும், இல்லாமல் இருக்காதீர்கள்.

புறப்பட்டு போய், வேலைசெய்து உங்கள் சபை உங்களுடைய உள்ளூர் அங்கத்தினர்களால் முழுவதும் உங்களுக்கு உதவத்தீர் மானிக்கும்படி சுதந்திரமான சபையாக மாறுவதற்கு நீங்கள் சபைக்கு உதவுங்கள். இது நடைபெறும்போது அது தகுதி உள்ள இலக்காகவும், வேலை செய்ய அந்த நாள் கொண்டாடப்பட வேண்டிய நாளாகவும் இருக்கும். தேவனுடைய உதவியோடு இது மெய்யாகும்.

## பாடம் - 17
# பிரசங்கியாரின் தோற்றம்

தோற்றத்தைக்குறித்த ஒன்றை வேதாகம பாடமாக அல்லது நம்முடைய காலத்தில் தகுதியுள்ளதாக நீங்கள் எண்ணாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் பிரசங்கியாரைக் குறித்து அவர் யார்? எதற்கு பிரதிநிதி. அவருடைய செல்வாக்கு என்ன? என்பதை எல்லாம் நினைக்கும்போது அவரைக் குறித்த ஒவ்வொன்றுமே முக்கியமானது என்று உணர முடியும்.

வாலிபர்களையோ அல்லது வயதானவர்களையோ இந்த விஷயத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பிரசங்கியார்களாக இருக்கிறவர்கள் அழகாகவும் நன்கு உடுத்தியவர்களாகவும், வசதியான குடும்ப பின்னணியில் இருக்கிறவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதில்லை. நம்முடைய கர்த்தரைக் குறித்து சொல்லும்போது அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை அவரைப் பார்க்கும்போது நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்ததென்று சொல்லப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலரில் அநேகர் படிப்பறிவில்லாத ஏழ்மையான, கடினமான பின்னணியிலிருந்தே வந்தவர்களாயிருக்கிறார்கள். பவுல் கூட ஒரு பெரிய பேச்சாளராகக் கருதபடவில்லை. மேலும் கலாத்தியர் 4:15; 2கொரிந்தியர் 12:17-ன்படி அவர் பார்வை மங்கியவராக இருந்திருக்க கூடும். நான் தனிப்பட்ட முறையிலே ஊனமுற்ற மேலும் விரும்பத்தக்க தோற்றமில்லாத பிரசங்கியார்களைப் பார்த்திருக்கிறேன். அநேக பிரசங்கியார்கள் நிச்சயமாகவே செல்வந்தர்களல்ல அல்லது பணக்காரர்களல்ல அல்லது பரம ஏழைகளுமல்ல. ஆகவே பிரசங்கியாரைப் பொறுத்தவரையில் அவருடைய சரீர அழகை குறித்துக் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் தன்னை இந்த சமூதாயம் எப்படிப் பார்க்க வேண்டுமென்று தயாராகிறார். அவரது பொதுவான மனப்பான்மை அவருடைய ஒட்டுமொத்த தோற்றம் மற்றவர்கள் அவரை எப்படி பார்க்கிறார்கள் என்பதே முக்கியமானது.

தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிற வகையிலே அவர் தேவனுடைய தூதுவராக இருக்கிறார். முதலாவதாக அவர் ஆவிக்குரியவராக தோற்றமளிக்காமல் ஆவிக்குரியவராகவே இருக்க வேண்டும். அவர் தன்னுடைய சகலவிதமான அருவருப்புகளையும். அசுசிகளையும் உடைய பழைய மனுஷனைக் களைந்து போட்டு விட்டு நீதியான கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவராக இருக்க வேண்டும் (2கொரிந்தியர்5:17-21). அவர் பெருமையுள்ளவராகவோ,

மேன்மையுள்ளவராகவோ, தற்பெருமையினால் நிறைந்தவராகவோ. இல்லாமல் சாந்தமாயும், அன்பாயும், மென்மையாகவும் இருக்க வேண்டும். (1பேதுரு - 5:5; 2கொரிந்தியர் 10:15, 18;மத்தேயு 5:5; தீத்து 3:2; 1 யோவான் 4:21). பிரசங்கியாரைக் குறித்து பவுல் சொல்லுகிற வார்த்தைகள் மிக பொருத்தமாக இருக்கிறது: "ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;... வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலேசெயர் 3:12.17). ஆகவே ஒரு பிரசங்கியார் கிறிஸ்துவைப் போலவும் எப்போதும் நன்மையும், நீதியுமானவைகளில் தேவனை வெளிப்படுத்துகிற மாதிரியாகவும் இருக்க வேண்டும். சகோதரர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே உலகமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அவர் நேர்மையாயும், உண்மையாயும் இல்லாவிட்டால் அது எளிதில் தெரிந்துவிடும். அவர் மாய்மாலக்காரனாக இருந்தால் அதுவும் வெளிப்பட்டுவிடும். ஒருவர் பிரசங்கியாராக இருக்க வேண்டும் என்று மனதார விரும்பி தன்னைச் சுற்றியுள்ளவர்கள் மத்தியிலே செல்வாக்கு மிக்கவராயிருக்க வேண்டுமென்றால் அவர் பிரசங்கிப்பதை நடைமுறையில் காண்பிக்க வேண்டும்.

ஒரு மனிதன் தான் ஆவிக்குரிய வகையில் மிகச் சிறந்து காணப்பட்டு, சரீரப் பிரகாரமாகவும் மிகச்சிறப்பாக தோற்றமளிக்க வேண்டும். உண்மைதான் இன்றைக்கு அநேக மக்கள் உங்களுடைய புறம்பான தோற்றத்தைக் கண்டு தீர்ப்பளிப்பது முக்கியமல்ல, இருதயத்தில் என்ன இருக்கிறதோ அதுவே முக்கியமென்று சொல்வார்கள். மனிதர்கள் அடிக்கடி ஒரு மனிதனுடைய தோற்றம், செயல்களைப் பொறுத்த மட்டில் வெளித் தோற்றத்தையே பார்ப்பார்கள். அதேசமயம் கர்த்தர் நோக்கங்களையும் மனப்பான்மையை பொறுத்தவரையில் இருதயத்தையே பார்க்கிறார் என்பதும் அதே போல் உண்மையானது (1 சாமுவேல் 16:7). இருப்பினும் ஒருவருடைய புறத்தோற்றம் அவருடைய மனதின் உணர்வுகளையும் இருதயத்தில் உள்ளவைகளையும், அவருடைய மதிப்பீடுகளையும் அவருடைய நோக்கங்களையும் அவருடைய மனப்பான்மையையும் வெளிப்படுத்திவிடும். ஒரு மனிதனுக்கு முரட்டாட்டமுள்ள மனமிருக்குமானால் அவனுடைய உடைகள் பிரதிபலித்துவிடும். ஒரு

மனிதனுடைய தராதரம் தாழ்வாகவும் கவனக்குறைவாகவும் இருக்குமானால் அது அவனது தோற்றத்திலும் பிரதிபலிக்கும். தோற்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட தோற்றம் ஒரு மனுஷனுடைய மனம் நல்லதா, கெட்டதா என்று பெருமளவு காட்டிக் கொடுத்து விடும். ஆனால் அது எல்லாவற்றையும் சொல்வதில்லை. தோற்றம் ஏமாற்றத்தை கொடுக்கக்கூடியதாகக் கூட இருக்கலாம். ஆகவே தான் வேதம் கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார். அதன் பிறகே நியாயத் தீர்ப்பு நாளிலே நியாயம் தீர்ப்பார் என்று கூறப்படுகிறது. அந்த நாளிலே அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

பிரசங்கியாருடைய புறத் தோற்றத்தைக் குறித்து இன்னும் ஒன்று சொல்லுகிறேன். அவர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவராகவும் அந்த வகையிலே கர்த்தருடைய பிரதிநிதியாகவும் இருக்கிறார். ஆகவே அவர் தன்னை சுத்தமாகவும், தினமும் முகச்சவரம் செய்து மீசை, தாடி போன்றவற்றை ஒழுங்காகவும் வைத்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய தோற்றத்தில் குறைந்தபட்சம் வாலிப பெண்களை போல் இல்லாதபடிக்கு தங்கள் முடியை வெட்டி சீராக வைத்துக்கொள்ள வேண்டும். புருஷர்கள் நீண்ட முடி வைத்திருப்பது வெட்கமாக இருக்கிறது என்று பவுல் (1 கொரிந்தியர் - 11:14)ல் சொல்கிறார். சிலர் கேட்கலாம் நீளமென்றால் எவ்வளவு நீளமென்று. ஒருவர் நீளமான முடி வைத்திருக்கும் போது அது அவருக்கே எவ்வளவு நீளமான முடி என்று தெரியும். அது போலவே உங்களுக்கும் எனக்கும் தெரியும். அந்த மட்டில் இந்த பிரச்சினையை முடித்துக் கொள்ளலாம். தன்னுடைய தலைமுடியைக் குறித்த ஆட்சேபனையை விரும்பாத எல்லாரிலும் பிரசங்கியாரே அதைக் குறித்து அதிக கரிசனையுள்ளவராக இருப்பார். பிரசங்கியார் சுத்தமாக உடை உடுத்தவேண்டும். ஆனால் அது மற்றவர்களுடைய கவனத்தை விசேஷமாக ஈர்ப்பதாய் இல்லாத வகையில் இருக்கவேண்டும். தொழுகையின் போதும், பிரசங்கம்பண்ணும் போதும், உடை நேர்த்தியாக அணிந்துக்கொள்ள வேண்டும். ஒரு திருமணத்திற்கோ, சவ அடக்கத்துக்கோ அல்லது ஜனாதிபதியாலோ பிரதமராலோ அழைக்கப்பட்டால் எந்த உடை உடுத்த வேண்டும்? ஒருவருக்கு சூட், ஷூஸ், போன்ற நேர்த்தியான உடைகள் இல்லாத பட்சத்தில் தன்னிடத்தில் உள்ளவைகளிலிருந்து ஒழுங்காகவும், தூய்மையாகவும் அணிந்து செல்ல வேண்டும்.

நாம் வாழ்கின்ற காலம் ஜனங்கள் தங்கள் உடைகளையும் தோற்றத்தையும் குறித்து கவலையற்ற கேலிக்குரிய காலமாக இருக்கிறது.

உதாரணமாக ஒரு பிரசங்கியார் தன்னைக் குறித்தும் தன் உடைகளைக்குறித்தும் சீராக இருப்பதைக் குறித்தும் கவலைப்படாமல் நாடோடியைப் போல தனக்கும், தன்மீதும் மற்றவர் மீதும். அறிவில்லாமலும் தேவனைப் பற்றி அறிவிக்காமலும் இருந்தால் அவர் உங்களுக்கு எப்படி தோன்றுவார் அல்லது அவரை பற்றி என்ன நினைப்பீர்கள்? அவரிடத்திலே ஆவிக்குரிய இடத்தை நாடி யார் வருவார்? உங்களை நீங்களே குழந்தைத் தனமாக ஆக்கிக்கொள்ளாதிருங்கள், இந்த விதமான காரியங்கள் ஒரு மாற்றத்தைக் கொடுக்கின்றன. இதைக் குறித்து மிக அதிகமாகப் பேச முடியும். ஆனால் இதைக் குறித்து எதிர்மறையாகவே பேசுகிறார்கள். ஒரு மனிதன் தன்னை மதிக்கிறவனாக இருந்தால் அதை அவன் உடுத்தும் உடையிலே வெளிப்படுத்துவான்.

ஒரு பிரசங்கியார் தன்னுடைய தோற்றத்தில் சரியாக காணப்படுவரானால் அது பார்க்கிறவர்களுடைய கண்களிலே அவர் தங்களுடைய நிலையிலிருந்து பின்னோக்கிபோகிறவராக இருக்க வேண்டும். இதைக்குறித்து நீங்கள் யோசிக்கிறீர்களா? மக்கள் தாங்கள் விரும்புகிற ஒருவர் ஆவிக்குரிய மற்றும் சரீர வாழ்க்கையில் நன்றாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்கள் காண்பதெல்லாம் ஒரு தாழ்வான நிலையிலிருந்தால் எதிர் நிலைக்கு சென்று விடக்கூடும். நீங்கள் வியாபாரம் செய்கிற மக்களையோ அல்லது எந்தவொரு துறையிலும் வெற்றிகரமாக உள்ளவர்களையோ அவர்கள் எப்படி உடுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். மறுபடியும் சொல்லுகிறேன் நல்ல தோற்றமுடையவராகவும், மக்களால் மதிக்கப்படுவராகவும் இருப்பதற்கு பணக்காரர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர் தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு சொல்லுகிற செய்தியைப் பற்றியும், கவனமாக இருக்க வேண்டும்.

பிரசங்கியார்களே இந்தக் காரியங்களை குறித்து சிந்தித்து உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் மற்றவர்களுக்கு நீங்கள் எப்படித் தோற்றமளிக்கிறீர்கள் என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள். இது நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும்.

## பாடம் - 18
## யார் பிரசங்கியார்?

பிரசங்கியார் யார்? பிசரங்கியார் என்பவர் யார் என்பதையும், அவர் யார் அல்ல என்பதையும் உங்களுக்கு சொல்ல முயற்சிக்கிறேன். இந்தப் பாடத்தில் கற்றுக் கொள்ளப் போகிற சில உண்மைகளைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். முதலாவது பிரசங்கியார் யார் என்பதையும், அவர் எப்படி அழைக்கப்படுகிறார் என்பதையும் அவருடைய பணிகளில் சிலவற்றையும் பார்ப்போம்.

பிரசங்கியார் பணிவிடைக்காரன் அல்லது சேவகன் என்று அழைக்கப்படுகிறார். அநேகர் பிரசங்கியாரை சபையில் ஒரு பிரத்தியேகமான ஊழியர் என்று நினைத்தாலும், உண்மையாகவே எல்லாக் கிறிஸ்தவர்களும் ஊழியர்களே. அதாவது பிரசங்கியாரும் சபையின் அனைத்து அங்கத்தினருக்கும் தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். அவர்கள் தேவைப்படுகிற யாவருக்கும் தங்கள் சக மனிதர்களுக்கும் கரிசனையோடு உதவி செய்ய வேண்டும். முதலாவது கிறிஸ்தவர்களுக்கும் பின்பு மற்றவர்களுக்கும் உதவவேண்டும். பவுல் தன்னை புறஜாதியருக்கு ஊழியக்காரரென்று சொல்லுகிறார் (ரோமர்15-16). வேறொரு தருணத்தில் பரிசுத்தவான்களுக்கு உதவும் பொருட்டு எருசலேமுக்கு செல்கிறேனென்று சொல்லுகிறார் (ரோமர்15-25). நாம் எல்லாரும் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்கள் (2கொரி 3-6). பவுல் தன்னை சுவிசேஷத்திற்கு ஊழியக்காரர் என்று கொலோசெயர் 1-23-ல் சொல்லுகிறார்.

பிரசங்கியார் ஒரு சுவிசேஷகராக இருக்கலாம். சுவிசேஷகனாக விவரிக்கப்படும் ஊழியர் தான் ஒவ்வொரு இடமாகச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார் (அப் 21-8, எபே.4.11,2தீமோ 4-5). பிரசங்கியார் பல இடங்களுக்குச் சென்று வேதத்தைக் குறித்து போதிக்கிறவராயிருக்கலாம். மத போதகர் என்கிற வார்த்தை வேதத்திலே காணப்படாவிட்டாலும் அவருடைய வேலையைப் பற்றி விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தை போதிக்கிறவர் யார் என்றால் கர்த்தருக்காக மிகவும் வைராக்கியம் கொண்டவராகவும் பல தூரமான இடங்களுக்குச் சென்று அநேக நாட்கள் தங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கிறிஸ்துவினுடைய நோக்கத்தை நிறுவுகிறதாகவும் இருப்பார். பவுலும் புதிய ஏற்பாட்டில் மற்ற அநேகரும் இப்படிப்பட்டவர்களல்லவா?

பிரசங்கியார் ஒரு சேவகன். பவுல், பேதுரு, யாக்கோபு, மேலும் புதிய ஏற்பாட்டு காலத்தில் மற்ற எல்லா பிரசங்கியார்களும் தங்களை சேவகர்கள் என்றே அழைத்தனர் (ரோமர் 1:1, யாக்கோபு 1:1, 2பேதுரு 1:1). அதாவது அவர்கள் தங்களை கிறிஸ்துவுக்கும் சக மனிதர்களுக்கும் தங்கள் வாழ்கையையும் சக்திகளையும் அர்ப்பணித்து அவர்களுக்கு ஊழியகாரர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்களை அப்படிக் குறிப்பிடுகிறதுக்கு வெட்கப்படவில்லை.

பிரசங்கியார் என்பவர் இதற்கும் மேலானவர். வேறு விதமாகச் சொன்னால் அநேகக் காரியங்களை குறித்து குற்றஞ் சாட்டுகிறபடி அல்ல. இந்த சமயத்தில் அவர் எப்படிப்பட்டவராக இல்லை என்பதை குறித்து பார்ப்போம். பிரசங்கியார் சபையின் போப் அல்ல. கிறிஸ்துவே சபையினுடைய ஒரே தலைவராயிருக்கிறார் (எபே. 1-22, 23; கொலோ 1-18). பிரசங்கியார் பிராந்திய சபையினுடைய தலைவனும் அல்ல .அது பிரசங்கியினுடைய வேலையுமல்ல. நாம் பார்த்தபடி மக்களை அதிகாரம் செய்வதற்கு மாறாக அவர்களுக்கு சேவை செய்கிறவராக இருக்கிறார். பிரசங்கியினுடைய வேலையையும் சேர்த்து சபையினுடைய அனைத்து வேலைகளையும் மேற்பார்வை செய்யவேண்டியது மூப்பர்களுடைய பணி.

பிரசங்கி ஒரு அப்போஸ்தலன் அல்ல. இன்றைக்கு ஒருவரும் அப்போஸ்தலன் அல்ல. ஒருவன் அப்போஸ்தலனாக இருக்க வேண்டுமென்றால் அவன் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் தொடங்கி கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்து கொள்ளப்பட்ட நாள் வரையும் சீஷர்களோடே இருந்திருக்க வேண்டும். உண்மையாக கர்த்தருடைய உயிர்தெழுதலைக் கண்ணால் கண்ட சாட்சியாக இருக்க வேண்டும் (அப்:1-22,23). உலகத்திலே இன்றைக்கு அநேகர் ஏன் பிரசங்கியார்கள் கூட தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் போலிகளும் ஏமாற்றுகிறவர்களும் ஆவார். குரு அல்லது பாஸ்டர், பிஷப், எல்டர் (மூன்று வார்தைகளும் ஒரே வேலையை குறிப்பவை) அல்லது (உதவிக்காரர்) டீக்கன் என்று அநேகர் சொல்லுகிறபடி அல்ல. 1 தீமோத்தேயு:3, மற்றும் தீத்து - 1 ல் சொல்லப்பட்டுள்ள தகுதிகளை உடையவராகயிருந்தால் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவராக இருக்கலாம். இன்று பாதிரியார் (பாஸ்டர், பிஷப்) மதகுரு மேலும் உதவிக்காரர் (டிக்கன்) என்ற பட்டங்கள் பொதுவாக பிரிவினை சபை பிரசங்கியார்களுக்கு கொடுக்கப்படுபவைகளாகும். அவர்கள் கர்த்தருடைய சபையின் அங்கங்களோ அல்லது வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள (மூப்பர்களுக்கான) தகுதி உடையவர்களோ அல்ல.

பிரசங்கியார் அற்புத சுகமளிப்பவரோ அல்லது அற்புதங்களை செய்பவரோ அல்ல. அப்போஸ்தலர்கள் மற்றும் அற்புதங்கள் செய்யும் படியாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களுக்கு மட்டுமே அற்புதம் செய்யக் கூடிய வரம் இருந்தது. இன்றைக்கு ஒருவேளை அற்புதங்கள் செய்வதாக இருந்தாலும் நிச்சயமாகவே மனிதர்களால் உருவாக்கப்பட்ட சபைகளிலும் நிறுவனங்களிலும் உள்ள பிரசங்கியாலோ மற்றவர்களாலோ பிரிவினை சபையின் நாமம் தரித்தவர்களாலோ இந்த விதமான அற்புதங்களைச் செய்யமுடியாது.

1 கொரிந்தியர் 13ஆம் ஆதிகாரத்திலே பவுல் நமக்கு சொல்லுகிறபடி கர்த்தருடைய நிறைவான சித்தம் அல்லது சட்டம் வந்த பின்பு அற்புதங்கள் தேவைப்படாது. இதற்கு பின்பும் நீங்கள் அந்த விதமான பிரசங்கியார்கள் அற்புதங்கள் செய்ய முடியுமென்று நினைத்தால் அப்படிப்பட்டவர்கள் மக்கள்மேல் புதிய கால்களையோ, கைகளையோ, உண்டாக்கும்படி செய்து கண்களையோ கொடுத்து அல்லது மரித்தோரை எழுப்பவோ, மேலும் இதுபோன்றவைகளைச் செய்கிறார்களா என்று சோதித்துப் பாருங்கள். கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் இந்த விதமான அதிசயங்களைச் செய்தார்கள். தலைவலியையோ அல்லது கண்ணுக்குதெரியாத புண்ணையோ அவர்கள் குணப்படுத்தவில்லை.

பிரசங்கியார் "கனம் பொருந்திய" "மகாகனம் பொருந்திய" "மகா மகா கனம் பொருந்திய" மேலும் பல பட்டங்களால் அழைக்கப்படுவர் அல்ல, அவர் ஒரு ஆவிக்குரிய தந்தையோ அல்லது மத வைத்தியரோ அல்ல. மனிதர் இந்த விதமான பட்டங்களை விரும்பி அதனால் தன்னை உயர்த்திக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆனால் கர்த்தர் அவர்களைக் கண்டனம் செய்கிறார். இயேசு சொன்னார். "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு : 23:9-12). சங்கீதக்காரன் தாவீது தேவனை குறித்து சொல்லும் போது அவர் நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது என்று சொல்கிறார் (சங். 111:9).

வேதத்திலே காணப்படுகிற பிரசங்கி சாதாரண மனிதனே அவர் சபையிலுள்ள மக்கள் மீதோ அல்லது அது தொடர்பான அலுவல்கள் மீதோ

அதிகாரம் செலுத்துபவர் அல்ல. கர்த்தருடைய சபையை பொருத்த வரை அந்த சபையில் தகுதியுள்ள மூப்பர்கள் இருந்தால் அவர்களுடைய மேற்பார்வையில் தேவனுடைய வார்த்தையையும் பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கியார். தகுதியுள்ள மனிதர்கள் யாரும் இல்லாத பட்சத்தில் சபையிலுள்ள சகோதரர்கள் வேதத்தின்படி தீர்மானித்து ஊழியஞ்செய்யலாம். அவர் அந்த சபையினுடைய தலைவர் அல்ல. அவருக்கு மிக உயர்ந்த அல்லது மதிக்கப்பட்ட மனிதர்களுக்குரிய பட்டங்களைக் கொடுக்கக் கூடாது. மாறாக அவர் தேவனுடைய வார்தையை மதித்து ஊழியம் செய்து பிராந்திய சபையின் மக்களுக்கு தேவைகளுக்கேற்ப சேவை செய்ய வேண்டும்.

எந்த இடத்திலும் வேதாகமம் உலக ரீதியாகவோ அல்லது பிராந்தியரீதியாகவோ ஒருவன் சபையினுடைய தலைவனாக இருந்தாகச் சொல்லவில்லை. கொரிந்துவிலோ எபேசுவிலோ, எருசலேமிலோ அல்லது வேறு இடங்களிலோ சபையின் போதகராக அல்லது மேய்ப்பராக ஒருவரே இருந்ததில்லை, கர்த்தரும் அந்த விதமான பதவியில் இருக்கும் யாரையும் அங்கீகரிக்கவில்லை. இந்த விதமான சூழ்நிலை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக அரசியல் தன்மையையும் அதிகாரத்தையும் உண்டாக்குகிறது.

1 கொரிந்தியர் 9-16 -யின் படி இதைக்குறித்த மனப்பான்மை பின்வருமாறு "சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது சுவிசேஷத்தைபிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ".

நீங்கள் ஒரு பிரசங்கியாரா? பிரசங்கியாராக இருக்க நீங்கள் விரும்புகிறீரா? எந்த விதமான பிரசங்கியாக இருப்பீர்கள்? நீங்கள் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் விவரித்துள்ள பிரசங்கியாராக இருக்க விரும்புகிறோம்.

# பாடம் - 19
# பிரசங்கியாரின் நூலகம்

ஒருவர் வாலிபராகவோ அல்லது முதிர்ந்தவராகவோ இருக்கலாம், அவர் வேதாகமத்தை வாசிக்கவும் கற்றுக்கொள்ளவும் வாசிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இது விஷேசமாக அதிக நேரம் தேவனுடைய வார்த்தையை பிறருக்கு போதிப்பதினால் பிரசங்கியார்களுக்குப் பொருந்தும்.

இல்லை, தேவன் வேதத்தின் மூலமாக அல்லாமல் வேறுவழியில் பிரசங்கியாருக்கு தேவையான செய்தியைக் கொடுப்பதில்லை. தேவன் நேரடியான வெளிப்பாட்டையோ...தனியாகவோ அல்லது வேதத்திற்கு அப்பாற்பட்டோ...அவர் பிரசங்கிக்க வேண்டியதைச் சொல்லவில்லை. பிரசங்கியார் பிரசங்கிக்க வேண்டியதெல்லாம் அவர் தேவனுடைய வார்தையை முன்பே படித்து புரிந்து கொண்டதன் அடிப்படையிலோ அல்லது முன்பு தான் கேட்டு கற்றுக்கொண்டதையோ ஒரு உண்மை பிரசங்கியார் பிரசங்கிக்க வேண்டும். வேதப்புத்தகத்தைப்பற்றிய அறிவில்லாமலோ அல்லது வேறொருவரிடமிருந்து அத்தகைய அறிவைப் பெறாமலோ பல புத்தகங்களைக் கற்காமலோ தேவனுடைய வார்த்தைக்கு ஒத்த பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முடியாது. வெறுமையிலிருந்து ஏதாகிலும் வரமுடியாது. உண்மையாகவே அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும் போதும் எழுதும்போதும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டார்கள் .ஆனால் இன்று நாம் அவ்வாறு நடத்தப்படுவதில்லை, ஏனென்றால் நாம் அற்புதங்கள் மற்றும் வெளிப்பாடுகள் மூலம் தேவனிடமிருந்து செய்திகளைப் பெறும் துவக்க காலத்திலே இல்லை, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (யோவான 5:39). வேதத்தைப் படித்து (2 தீமோத்தேயு 2:15) நாம் பிரசங்கிக்க வேண்டும் (2தீமோத்தேயு 4:2). சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று கிறிஸ்து சொன்னார் அது எப்படியாகும்? சொல்லப்பட்டபடி வாசித்து, கற்று கீழ்ப்படிவதன் மூலமே அவ்வாறாகும் (எபிரேயர் 5:8,9). மனிதன் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாக ஆக்க வேதம் அவனுக்கு போதுமானதாயிருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார் (2தீமோத்தேயு 3:16,17). இந்த வாழ்க்கைக்கும் தேவனுக்கேற்ற ஜீவியத்துக்கும் தேவையான எல்லாவற்றையும் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார் ( 2 பேதுரு 1:3).

மேற்சொன்ன எல்லாம் ஒருவர் வல்லமையான பிரசங்கியாக இருக்க வேண்டுமென்றால் அவர் நன்கு வேதத்தைப் படித்து தயார் செய்ய

வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துவதாக உள்ளது. யார் வேண்டுமானாலும் எதையாகிலும் பேசி நேரத்தைக் கடத்தலாம் ஆனால் ஒருவர் பிரசங்கிக்கவும் அந்த பிரசங்கத்தைக் கேட்பவர்கள் பயனடையவும் வேண்டுமென்ற நோக்கமுடையவராக இருந்தால் பயன்படத் தக்கவைகளைச் சொல்லும்படியாக தன்னைத் தயார் செய்யும் அவசியமுண்டு. தேவனுடைய வார்த்தையை ஒருவர் கையாளுவதாலும், நித்தியத்தை அவர்கள் ஆத்துமா எங்கே கழிக்கும் என்கின்ற தகவல்களைச் சொல்வதாலும், பிரசங்கியாக இருப்பது என்பது மிகவும் கவனத்துக்குரிய ஒன்று. இதைவிட வேறு எந்தவேலையும் ஜாக்கிரதைக்குரியதாக இருக்க முடியாது.

ஒவ்வொரு பிரசங்கியும் தன்னுடைய சொந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறேன். ஒரு பிரசங்கி தன்னுடைய தாய் மொழியில் அச்சிடப்பட்ட நல்ல வேதப்புத்தகத்தை வாங்க வேண்டும். இரண்டு மொழிகள் தெரிந்தவராக இருந்தால் அவ்விரு மொழிகளிலும் நன்கு தயாரிக்கப்பட்ட வேதபுத்தகங்களை வாங்கவேண்டும். மூல மொழியிலிருந்து மிகச்சிறந்த முறையில் மொழியாக்கம் செய்யப்பட்ட வேதபுத்தகங்களையே வாங்கவேண்டும். நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் ஆங்கிலத்தில் மட்டும் பல வகையான நடைகளில் மொழி பெயர்ப்புகள் வந்துவிட்டன. மற்ற மொழிகளிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வந்துவிட்டன ஜேம்ஸ் அரசன் மொழி பெயர்ப்பே இன்றும் ஆங்கிலத்தில் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொண்ட ஒன்றாக இருக்கிறது. இந்தக் காலத்தில் ஜேம்ஸ் அரசரின் புதிய மொழி பெயர்ப்பில்,அதிலுள்ள அநேக வார்த்தைகள் 1660-ல் உள்ளது போலில்லாமல் இப்போது உள்ள நடைமுறையில் உள்ளது போல் இருப்பதாக நம்புகிறார்கள்.நியூ அமெரிக்கன் ஸ்டேன்டர்டு வேர்சன் இன்னுமொரு நல்ல மொழிபெயர்ப்பாகும் (New American Standard Version) இதுபோல இன்னும் பல இருக்கின்றன. ஆனால் அவைகளில் வரும் சுருக்க விளக்கங்கள், தனிப்பட்ட கருத்துக்கள் போன்றவற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவைகளையும் உங்கள் தனிப்பட்ட ஆய்வுகளையும் மற்ற மொழி பெயர்ப்புகளோடு ஒப்பிட்டுபடிப்பதற்காகவும் பயன்படுத்தலாம்.

ஆனால் நீங்கள் பிரசங்கம் செய்வதற்கு சரியான நிலையைப் பின்பற்றும்படி ஒரு குறிப்பிட்ட மொழி பெயர்ப்பைப் பயன்படுத்துங்கள். நீங்கள் பிரசங்கிக்கிற மக்களில் அநேகருக்குத் தெரிந்த ஒரு மொழி பெயர்ப்பிலிருந்து வசனங்களை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் பயன்படுத்தாத மொழி பெயர்ப்புகளின் மீது மிகுந்த வெறுப்பைக் காட்டி அவைகளை வைத்திருக்க கூடாது என்று தடை செய்யாதீர்கள். அவ்வகை மொழி பெயர்ப்புகளைப் பற்றி மக்களுக்கு எச்சரிப்போடு அறிவிக்கவேண்டும், ஆனால் அவைகளை பயன்படுத்தவே கூடாதென்று தடைசெய்ய யாருக்கும் அதிகாரமில்லை.

மேலும் ஒரு குறிப்பிட்ட வார்த்தையோ அல்லது பாடத்தையோ குறித்து நன்கு அறிந்து சொன்ன ஒத்தவாக்கிய அகராதி (Concordance) ஒன்று உங்களுக்கு வேண்டும். நீங்கள் போதிக்கின்ற பாடம் தொடர்பான அநேக வேத வாக்கியங்களை போதிக்கும் போது அது சிறப்பாக அமையும்.

நீங்கள் வேதத்தைக் கற்க வெப்ஸ்டர்அகராதி அல்லது ஆங்கில அகராதியோடு வேறு நல்ல ஒன்று மிகவும் உதவியாக இருக்கும். ஒரு வார்த்தையினுடைய பொருள் மற்றும் உச்சரிப்பு சரியான எழுத்துக்களை வார்த்தைகளுக்கு பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு அகராதி மிகவும் பயனுள்ளதாகயிருக்கும்.

மேலும் உங்கள் வேத அகராதியானது பல வேத வார்த்தைகளையும் அர்த்தங்களையும் அதற்கொத்த வார்த்தைகளையும் தெரிந்து கொள்ள உதவும். இந்த வகையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு நல்ல புத்தகம் W.E.வைன் எழுதிய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் அகராதியாகும்.

உங்கள் நூலகத்தில் சேர்க்கப்பட வேண்டிய இன்னொரு நல்ல புத்தகம், வேதத்திலுள்ள இடங்கள் வரையப்பட்ட வேதாகம பூகோள புத்தகமாகும். இன்னும் ஆழ்ந்து படிக்க விரும்புகிறவர்களுக்கு கிரேக்க மற்றும் எபிரெய சொல்லகராதிகளை வாங்கி அதில் வேதத்தின் பாஷைகளில் உள்ள வார்த்தைகளின் பொருளை நன்கறிந்துகொள்ளலாம். கிரேக்க மொழியில் தேயர் எழுதிய சொல்லகராதி பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

மேலும் வேத விளக்கவுரைகள் தலைப்புகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் மேலும் அநேக புத்தகங்கள் உண்டு. இவைகளில் அநேகம் நம் சகோதரர்களாலேயே எழுதப்பட்டவை.

நீங்கள் வாசிக்கவும் படிக்கவும் வாங்குகின்ற புத்தகங்களைப் பற்றி எச்சரிக்க விரும்புகிறேன். புத்தகக்கடைகளில் கிடைக்கின்ற புத்தகங்கள், குறிப்பாக மதசம்பத்தப்பட்ட புத்தகங்களை விற்பனை செய்யும் கடைகளில் அதிகம் பிரிவினை சபையைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டவையாகும். அவைகளில் அதிக உபதேசப்பிழைகள் இருக்கும். அப்படி பிழையுள்ள புத்தகங்களைப் படித்து ஒப்பிட்டு சரியானதை

அவர்களுக்கு பதிலளிக்க விரும்பினால் அவைகளை வேதத்தோடு சரியாக ஒப்பிட்டுப் பார்த்து குறிப்பிட்ட பாடத்தை உறுதிப்படுத்துங்கள்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நீங்கள் நம் சகோதரர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை வாங்கிப்படிக்க விரும்பினால் அவைகளை நம் சகோதரர்களால் நடத்தப்படும் புத்தகக்கடைகளில் வாங்கலாம் அல்லது சபையில் அவ்வித புத்தகங்களை வேறு எங்கே வாங்கலாம் என்று கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் மாதப்பத்திரிக்கைகள் அல்லது மற்ற பத்திரிக்கைகள் இருக்குமானால் அவர்களுடைய வாடிக்கையாளர் பட்டியலில் நீங்களும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் உலகெங்கிலும் நடக்கும் கர்த்தருடைய பணிகளோடு தொடர்பு கொள்ளும்படி வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளையும் வரப்பெறலாம். இந்தவிதமான பத்திரிகைகளும் புத்தகங்களும் உங்களுக்குப் பயனுள்ளதாயும் உதவியாயிருந்தாலும் அவைகளும் மனிதர்களால் எழுதப்பட்டவை என்பதை மறந்து விடாதீர்கள். எல்லாவற்றிக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையை கேட்கவும், அவைகளைக் கற்பதிலும், வாசிப்பதிலும், பிரசங்கிப்பதிலும் எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையை முதன்மையாக பின்பற்றவும் மறந்துவிடாதீர்கள். பிறரை விசேஷமாக பிரசங்கியார்களையும் சபையில் எழுதும் பணி செய்பவர்களையும் கனம் பண்ணுங்கள் ஆனால் கிறிஸ்துவையே பின்பற்றுங்கள்.

உங்கள் ஜீவியகாலத்தில் நூலகத்தில் புத்தகங்களைச் சேருங்கள், உங்கள் புத்தகங்களை மேலான உபகரணங்களாகக் கருதி பராமரியுங்கள். நீங்கள் ஊழியத்திலும் அறிவிலும் திறமையிலும் சேவையிலும் வளரும் போது தேவன் ஆசீர்வதிப்பார்.

# பாடம் - 20
# பிரசங்கிக்கும் வழி முறைகள்

பிரசங்கியாருடைய வேலை தேவனுடைய வார்த்தையின்படி பிரசங்கிப்பதும், அறிவிப்பதும், சுவிஷேசத்தை இழந்துபோன, மரித்துக்கொண்டு இருக்கிற உலகத்திற்கு எடுத்துச்சொல்லுவதுமே என்பது நமக்கு தெரியும் (மத்தேயு 16:15-16). முன்பு அப்போஸ்தலருடைய காலங்களிலே சுவிஷேசத்தை தங்கள் வாய்வழியாக கூடியிருந்த மக்களுக்கு அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கிறபடி பிரசங்கித்தார்கள், இன்னொருவகை தனிப்பட்ட முறையிலே போதிப்பது. அப்.8ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து கர்த்தருக்குள் கீழ்ப்படிவதன் அவசியத்தை போதித்தது.

அந்தக் காலங்களிலே வேத வசனங்களை பிரதிகள் எடுத்து மற்றவர்கள் வாசிப்பதற்கு ஏதுவாக மக்களுக்கு கொடுப்பது வேதபாரகரின் வேலையாயிருந்தது. பவுலும் மற்றவர்களும் தங்கள் சகோதரர்களுக்கு கடிதங்கள் வாயிலாக ஆலோசனை சொல்லி கர்த்தருக்கு விசுவாசமாயிருக்கும்படியும் கள்ள போதகரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும்படியும் தைரியப்படுத்தினார்கள் (2கொரிந்தியர் 7:8).

ஆனால் அந்த நாட்களிலிருந்து காரியங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக பல வகைகளில் மாறிவிட்டன. அநேக சாதனங்கள் வேலையில் பயன்படுத்துவதற்கு இப்போது உள்ளன. ஒரு செய்தியை இன்னொருவருக்கோ, அல்லது அநேகருக்கோ அல்லது உலகம் முழுவதற்கும் அனுப்பவோ இன்றைக்கு அநேக வகைகளும், வழிகளும் உள்ளன. மருத்துவத்துறையில் இன்றைக்கு உள்ள முன்னேற்றங்களை நாம் சிந்திக்கிறோம். இன்றைக்கு பல வகையான மருந்துகளும், பயிற்சி செய்வதற்கு பலவகையான கருவிகளும் ஒரு மருத்துவர் எல்லாவற்றையும் கைக்கொள்ள முடியாத அளவிற்கு குணமாக்கும் வழிகள் அநேகம் உள்ளதால், அவர் மருந்துகளை கொடுப்பதற்கும் பயிற்சிக்கும் குறிப்பிட்ட ஒரு துறையை தேர்ந்தெடுத்து பயிற்சி பெறுகிறார். பிரசங்கியாரைப் பற்றியும் கூட இந்த வகைப்பொருத்தமானதே. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கவும், போதிக்கவும், அநேக வழிகளும் வகைகளும் உள்ளன. ஒருவரே இவை எல்லா வழிவகைகளையும் சிறப்பாகச் செய்ய முடியாது. ஆகவே ஒருவர் தன்னுடைய திறமையை எந்தெந்த வழிகளில் வளர்த்துக்கொள்ள முடியுமோ அவைகளை தெர்ந்தெடுத்து பயிற்சி செய்வது அவசியம். தேவனுடைய வார்த்தையோடு முரண்படாத வகையில் எல்லா

வழிவகைகளும் நல்லதாகவும் வல்லமையுள்ளதாகவும் இருக்க முடியும் அவைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

உண்மையாகவே தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதில் இன்றும் பாரம்பரிய வழிமுறைகள் வல்லமையுள்ளதாயிருக்கிறது. பிரசங்கமேடையிலிருந்து பிரசங்கிப்பதும், தனிப்பட்ட முறையில் சென்று ஊழியம் செய்வதையும் இங்கு நான் குறிப்பிடுகிறேன். ஒரு கூட்டத்தில் முகமுகமாக பார்த்து அல்லது ஒவ்வொருவரிடமும் தனியாக சந்தித்து பிரசங்கிப்பதைப்போல வல்லமையான வழி ஒன்றுமில்லை. இந்த வழிகள் வல்லமையாயிருப்பதற்குக் காரணம் இரட்சிப்புக்கு ஏதுவான தேவ பலமாயிருக்கின்ற சுவிசேஷத்தை அறிவிப்பதுதான். (ரோமர் 1:16)

பிரசங்கிக்கிற வகையில் சுவிசேஷக் கூட்டங்கள் ஒன்று சிலர் அதை மாபெரும் சுவிஷேசக் கூட்டங்கள் என்று அழைக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வீட்டிலோ, விசாலமான அறையிலோ அல்லது அதுபோன்ற இடங்களிலோ ஒரு பிரசங்கியாரை அழைத்து பல இரவுகள் தொடர்ச்சியாக குறிப்பிட்ட நாட்களுக்கு பிரசங்கம் செய்யச் சொல்வார்கள் இந்த சமயத்திலே அதிகமான ஜனக்கூட்டம் கவரப்பட்டு அதிலே பலர் கர்த்தருக்குள் கீழ்ப்படியக் கூடும், கர்த்தருடைய சபையை தொடங்கும் பட்சத்தில் இந்த விதமான கூட்டங்கள் புது இடங்களில் நடத்தப்படும். இந்தத் தருணத்திலே உங்களை நான் மிகவும் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அமெரிக்க சகோதரரைப்போல இந்த விதமான கூட்டங்களை இரண்டு மூன்று இரவோடு நிறுத்தாமல் ஒருவாரம், பத்து நாட்கள் அல்லது இரண்டு வாரம் தொடர்ச்சியாக நடத்துங்கள். போதுமான நேரம் சந்திப்பதிலும் மக்களுக்கு ஆர்வத்தை உருவாக்குவதிலும் செலவிடுங்கள்.

ஒன்றை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அமெரிக்க சகோதரர்கள் இந்த விதமான கூட்டங்களுக்கு அந்த நாட்களில் முயற்சி எடுத்துக்கொண்டனர் அதன் பயனாக சபை வேகமாக வளர்ந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள மக்களுக்கும் உலகம் முழுமைக்கும் சுவிஷேசத்தைக் கொண்டு செல்ல புத்தகங்கள் ஒரு சிறந்த வழி கைப்பிரதிகள், அஞ்சல்வழி வேதாகம வகுப்புகள், பத்திரிக்கைகள், விளம்பரங்கள், புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக போதிப்பது எண்ணற்ற மக்களுக்கு கர்த்தரை அறிமுகப்படுத்தியதோடு சபையை பெலப்படுத்துவதிலும், அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும் போதிக்க தக்க எழுத்துப்பிரதிகளும் வழங்கியிருக்கிறது. கிறிஸ்தவ இலக்கியம் இன்றைக்கும் ஒரு சக்தி வாய்ந்த ஊடகம்.

ஆனால் பெரும் திரளான மக்களை சென்றடைவதிலும் தங்கள் கதவுகளை சுவிசேஷசத்திற்கு அடைத்துக்கொள்கிற மக்களைச் சென்றடைவதிலும் வானொலி பிரசங்கத்தை மிஞ்சமுடியாது. மேலும் இந்த வழியாக அஞ்சல் வழி வேதாகம பயிற்சி, மற்றும் பல வகையான எழுத்துப் பிரதிகளும் கொடுக்கப்படமுடியும்.

வானொலியோடு கூட இப்பொழுது இன்னும் சக்தி வாய்ந்த தொலைக்காட்சியும் உள்ளது. முன்னமே தொலைக்காட்சி சில நாடுகளில் வல்லமையாகப் பயன்படுத்தப்படுகின்றன, வரப்போகிற வருஷங்களில் தொலைக்காட்சி மூலமாக உலகம் முழுவதும் ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்க முடியும்.

இந்த சந்தர்ப்பத்தில் தேச முழுவதும் பயன்படுகின்ற வானொலி, தொலைக்காட்சியோடு ஒலி, ஒளி நாடாக்கள் வீடியோக்கள் (கேபிள்) கம்பி வழி ஒளி பரப்பு மற்றும் செயற்க்கைகோள் இவைகளையும் பிரசங்கம் செய்ய நன்கு பயன்படுத்தலாம்.

பாடங்களை போதிப்பதில் பார்த்து படிக்ககூடிய சாதனங்களை பயன்படுத்தலாம், படச்சுருள்கள், அவைகளை காட்ட பயன்படும் கருவிகள் மேலும் அட்டவணைகள், கரும்பலகைகள் போன்றவற்றை பயன்படுத்தலாம். இந்த விதமான பார்த்து படிக்கின்ற வழிகள் மூலமாக மக்கள் சுவிஷேசத்தைக் கேட்பதோடு தங்கள் வாழ்க்கையில் அந்த செய்திகள் நேரடியாக கொண்டுவரப்படுவதை காண முடியும்.

வேதாகம பள்ளிகள், வேதாகம முகாம்கள் பல சிறப்புக் கூட்டங்கள், கருத்தரங்குகள் வேத விரிவுரைகள் நிகழ்த்துவது போன்ற கூட்டங்களுக்கு சபையார் தங்கள் நண்பர்கள் வாலிபர்களையும் மேலும் பலதரப்பட்ட வயதினரையும் ஐக்கியத்திற்காகவும், வேதத்தை ஆய்ந்து படிப்பதற்காகவும் அழைத்து வரலாம்.

இவைகளில் சில வழிகள் ஒன்றைவிட மற்றொன்று போதிப்பதற்கு சிறந்ததாகக் காணப்படும். ஆனால் காலங்கள் மாறுகிறது ஆகவே வழி வகைகளுடைய சக்தியும் மாறுகிறது. ஜனங்களுக்கு எந்த விதமான வழிகள் பிடிக்கிறது என்பதை நாம் கண்டறிந்து எப்படி அவர்களைச் சிறந்த முறையில் சென்றடையும் என்பதைக் கண்டு, அந்த வழிகளை பயன்படுத்தி அவர்களை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்த வேண்டும். சபையானது அதனுடைய வேலைகளைச் செய்யும் முறைகளில் மென்மையாக இருக்க வேண்டும். சுவிஷேசமானது அதனுடைய தூய்மையோடு பிரசங்கிக்கப்படுவதே காரியம். அதுவே கேட்கிறவர்களை மனமாற்றமடையச் செய்யும். மாம்சத்திற்குப் பிரியமான

கவர்ச்சிகரமான காட்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், உணவு, மற்றும் சிற்றுண்டிகள் முதலியவற்றைப் பயன்படுத்துவது சரியல்ல. ஞானமுமல்ல. இந்த விதமான உலகக் காரியங்கள் மூலம் மக்களை ஆதாயப்படுத்தினால் அவர்கள் மாற்றமடைந்தாலும் அதன்பலன் என்ன?

ஆகவே இளம்பிரசங்கியார் இந்த உலகத்திற்கு சுவிஷேசத்தை கொண்டு செல்வதற்கு எல்லா விதமான சாத்தியங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. தன்னுடைய திறமைக்கும் கேட்கின்ற மக்களின் நலனுக்கும் எது சிறந்ததோ அந்த வழியை அவர் மேற்கொள்ள வேண்டும். அவர் முறையான பயிற்சி பெற்று பின்பு தான் கற்றுக்கொண்டவைகளையும் கிறிஸ்துவின் சுவிஷேசத்தையும் மக்கள் மத்தியில் பிரசங்கித்து அவர்களை கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்த வேண்டும்.

வாலிபனே பேச்சாளராக, போதகனாக, சுவிசேஷனாக, பல இடங்களுக்குச் சென்று சத்தியத்தை அறிவிப்பவனாக, வானொலி பேச்சாளனாக, எழுத்தாளனாக, புத்தக வெளியீட்டாளராக, ஏதாகிலும் கர்த்தருக்கென்று நீ செய். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நமக்குள்ள வித்தியாசமான தாலந்துகளையும், சக்திகளையும் நமக்கு கிடைக்கும் வழிவகைகளையும் பயன்படுத்தி சுவிசேஷத்தை இந்த உலகுக்கு அறிவித்து அதை கிறிஸ்துவுக்கென்று மாற்ற முடியும். அப்படியே செய்யும்படியாக கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

## பாடம் - 21
# பிரசங்கியாரின் பேச்சு

இந்தப் பாடத்தில் பிரசங்கியார் எப்படிப் பேசவேண்டும் அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் அல்லது சொற்கள் ஆகியவற்றைப் பற்றி பார்ப்போம். வேறு வார்த்தையில் சொல்வதென்றால் ஒரு சராசரி பிரசங்கியார் மக்களிடம் பேசும் போது குறிப்பிட்ட சில சொற்றொடர்களையும் வார்த்தைகளையும் பயன்படுத்துவதைப் பற்றிப் பார்ப்போம். மற்ற எல்லோரையும் போலவே பிரசங்கியாரும் மற்ற மக்களாலும் மத சம்பந்தப்பட்ட நண்பர்களாலும் அயலகத்தார்களாலும் பாதிக்கப்படுகிறார். உண்மையாகவே இப்படிப்பட்டவர்கள் சொல்கிறயாவும் தவறல்ல, மேலும் பிரிவினை கூட்டத்தார் பயன்படுத்துகின்ற வழிமுறைகள், குறிப்பிட்ட சில வார்த்தைகள் நம்முடைய பேச்சிலும் பயன்படுத்தப்படுவது தவறல்ல. ஆனால் அவர்கள் பயன்படுத்துகின்ற சிலமுறைகளிலிருந்து நம்மை காத்துக்கொள்ள வேண்டும். அவைகளிலிருந்து நாம் விடுபடவேண்டும்.

பிரசங்கியார் தான் பேசுவதைக் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அவரை கவனிக்கின்றவர்கள் அவர் என்ன சொல்கிறாரோ அதை சீக்கிரமாக பின்பற்றக் கூடும். அவர் எப்போதும் தன்னை ஒரு நல்ல மாதிரியாகக் காண்பிக்கும்படி பிரயாசப்பட வேண்டும்.

கவனக்குறைவாலோ அல்லது தவறுகளைப் பற்றி தெரியாததாலோ பிரசங்கியார்களும் சபை அங்கத்தினர்களும் பின்வரும் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். “இது சபைக்கு போகும் நேரம்” “நாம் சபைக்கு போகிறோம்” “நீ சபைக்கு போகிறாயா” மேலும் இதுபோன்ற பல வார்த்தைகளை பயன்படுத்துகிறார்கள். நான் வளர்ந்த விதமானது சபைக்குப் போகிறோம் என்று போதிக்கபடவில்லை ஆனால் சபை கூடுமிடத்திற்குப் போகிறோம். அல்லது தொழுது கொள்ளப் போகிறோம் என்பது தான். இப்போதும் இந்த விதமான வழிகளில் நாம் செய்யப் போவதை சொல்வதே சரியென்று நம்புகிறேன். ஆனால் அனுமானங்கள் நம்முடைய பேச்சிலும் வாழ்க்கையிலும் தவறான போதனைகள் கலக்க காரணமாகின்றன. சபை கூடுமிடத்தை சபை என்று பிரிவினை கூட்டத்தார் சொல்லுகிறார்கள். ஆகையினால்தான் அவர்கள் சபைக்குப் போகிறேன் என்று சொல்கிறார்கள். சபை என்பது கூடுமிடமல்ல மாறாக சபை என்பது ஆவிக்குரிய சரீரம் அழைக்கப்பட்டவர்கள் அல்லது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது, அவைகள் சபை என்பதற்கு பின்வரும் வசனங்கள் சான்று (மத் 16:18-19; எபே 5:23-27; கொலே 1:18; எபே 1:22-23; 1கொரி. 12:20)

ஆகவே நாம் இதை சரியாக்குவோம். சபைக்குப் போகிறோம் என்று சொல்வதை விட்டு, சபை கூடுமிடத்திற்கு போகிறோம். அல்லது தொழுகைக்கு செல்கிறோம் என்று சொல்வோமாக.

மேலும் சில பிரசங்கியார்களும், பிரசங்கியாரல்லாதவர்களும் "என்னுடைய சபை" "என்னுடைய அங்கத்தினர்கள்" "நம்முடைய சபை" மற்றபெயர்களைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிபட்டப் வார்த்தைகளை நாம் எங்கிருந்து கற்றுக்கொண்டோம்? நிச்சயமாகவே அவைகளை வேதத்திலிருந்து கற்றுக்கொள்ளவில்லை. நாம் அவைகளை வேதத்திலிருந்து கற்றுக்கொள்ளாத பட்சத்தில் அவைகளை நாம் கர்த்தருடைய சபையைச்சேராத, மதம்சார்ந்த நண்பர்களிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் "நம்முடைய சபை" மேலும் இது போன்ற பல வார்த்தைகளை உண்மையான மனதோடு பயன்படுத்தலாம். ஆனால் நாம் அப்படி செய்யக்கூடாது. சபை என்பது நமக்கு சொந்தமானதல்ல. அது கிறிஸ்துவுக்கு சொந்தமானது. அவர் சொன்னார் "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று. அப்படியே செய்தார், ஆனால் அது நம்முடையது என்று அர்த்தமல்ல (மத்16:18). அதனுடைய அங்கங்களாயிருக்கும்படி நாம் கௌரவிக்கப்படுகிறோம். ஆனால் சபை நம்முடையது அல்ல. நாம் அதைக் கட்டவில்லை. நாம் அதற்காக இரத்தம் சிந்தவில்லை. நாம் அதன் இரட்சகரல்ல ஆனால் அவரே அவருடைய சபைக்கு இவை எல்லாமுமாக இருக்கிறார் ( அப் 20:28, எபே 5:23,). நீங்கள் ஒரு வேளை முக்கியமல்லாத ஒன்றை பெரிதாக நான் பேசுவதாக நினைக்கலாம் தவறாக பயன்படுத்தப்படுகிற சில வார்த்தைகள் குற்ற மற்றதாக தோன்றலாம். ஆனால் உண்மை என்னவென்றால் இந்த விதமாகத்தான் கர்த்தரிடமிருந்தும் அவருடைய வழிகளிலிருந்தும் மக்கள் விலகிச்சென்றார்கள் உங்களுடைய வார்த்தைகளை குறித்து நீங்கள் கவனமாயிருங்களென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளோடும் மற்றபிரிவினை கூட்டத்தார் பயன்படுத்துகிற வார்த்தையோடும், உலகத்திலுள்ள பிரசங்கியார்கள் பொய்யுக்கும், சத்தியத்திற்கும் தவறாக சொல்வதற்கும், மிகைபடுத்துவதற்கும் வேறு பாட்டை கண்டுபிடிக்க சிரமப்படுகிறார்கள். உண்மையாகவே லஞ்சம் மலிந்திருக்கின்ற இடத்தில் பல இடங்களிலிருந்தும், திசைகளிலிருந்தும் எதையாகிலும் நாடி மக்கள் உங்களிடத்தில் வரும்போது அதை மறுப்பதும் பொய்யான விளக்கமளிப்பதும் மேலும் சாதாரணமாக உண்டு இல்லை என்று சொல்வதும் ஒரு வகையான வாழ்க்கை முறையாகிறது. உலகம் அது சரிதான் என்று சொல்கிறது. ஆனால் கிறிஸ்தவன் உண்மையும்,

நேர்மையுமாக இருக்க வேண்டியது அவசியம். பவுல் நாம் ஒருவரோடு ஒருவர் பொய் சொல்லக் கூடாதென்று சொல்கிறார் வெளி21:8. மேலும் எல்லாவற்றிலும் நாம் உண்மையாகவே இருக்க வேண்டுமென்று வேதம் போதிக்கிறது (ரோமர் 12:17). வேறு வகையாக சொல்வதென்றால் ஒருவரோடொருவர் உண்மையாயிருப்பது மட்டுமல்லாமல் உலக மக்களிடமும் உண்மையாக இருக்க வேண்டும்.

மக்கள் நம்முடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்கு நாம் உண்மையைத்தான் பேசுகிறோம் என்ற நம்பிக்கை வராவிட்டால் அவர்கள் யாரைத் தான் நம்புவார்கள்? உண்மையாகவே கிறிஸ்தவர்களாகிய நம்மைத்தான் சத்தியத்தை சொல்லும்படியாக மக்கள் நம்பியிருக்க வேண்டும்.

பிரசங்கியார்களுக்கு இருக்கக்கூடிய தீயபழக்கம் என்னவென்றால் மற்ற பிரசங்கியாரைப் பற்றி தாழ்வாகப் பேசுவது. பிரசங்கியார்களைக் குறித்து பகையும், பொறாமைகொள்வதும் அவர்களிடம் குற்றங் கண்டுபிடிப்பதும் அவர்களை வேறுபடுத்துவதும் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சொல்வதும் அவர்களை குறித்து புறம் பேசுவதும் போன்ற தீய பழக்கங்கள் பிரசங்கியாரிடமிருக்கிறது. இவையெல்லாம் மிக மோசமானவைகள். எல்லா மக்களிலும் மற்றவர்களைப்பற்றி மேன்மையாக பேசுபவர் பிரசங்கியாராகவல்லவராயிருக்க வேண்டும். உங்களுடைய சக பிரசங்கியாரைக் குறித்து ஏதாகிலும் நல்ல விஷயங்கள் பேசத் துவங்குங்கள்.

இன்னும் பிரசங்கியார்களுக்கு தங்கள் நாவோடும் தங்கள் வார்த்தைகளோடும் உள்ள கடினமான நேரம் எதுவென்றால் அவர்கள் தங்களை குறித்தே பெருமை பேசி தம்பட்டம் அடிப்பதாகும். அவர்கள், தான் இன்றைக்குள்ள எல்லாரிலும் பெரியவர் என்று பெருமை பேசுவதை கொஞ்சமாவது குறைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அப்படி பெரியவராயிருந்தால் உங்களுடைய சகோதரர்கள் அதை அறிந்து கொள்வார்கள் நீங்கள் பெருமை கொள்ளத் தேவையில்லை. நீங்கள் அப்படியில்லாவிட்டால் தற்பெருமை கொள்வது உங்களை மோசமாக்கும் யாகோபு 3:5-ல் காண்கிறபடி நாவு சிறிய அவயவமாயிருந்தும் பெரிய காரியங்கள் குறித்து பெருமை பேசுகிறது என்று சொல்கிறார். நம்மைப்பற்றியே நாம் மேன்மையாக பேசுவதை விட்டு ஆவியிலும் வாழ்க்கையிலும் சாந்தமாகவும் இருக்க வேண்டும். கிறிஸ்து சொன்னார் : "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்" (மத் 5:5).

நீங்கள் காண்கிறபடி பிரசங்கியார்கள் பரிபூரணமானவரல்ல அவர்களுக்கும் பிரச்சனைகள் உண்டு. அவர்களுக்கு பிரச்சனைகள் இருப்பதினாலே அந்த பிரச்சனைகளை தொடர்ந்து பாவம் செய்வதற்கோ அல்லது சபையைவிட்டு போவதற்கோ பயன்படுத்த கூடாது. மற்றவர்களைப் போலவே தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு தன்பெயரில் நம்பிக்கை வரும் அளவிற்கு கடினமாக உழைக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு அவர் எப்பொழுதும் தன்னுடைய நாவை உண்மையாகவும், பொறுப்புள்ள வழிகளிலும் பயன்படுத்த வேண்டும்.

பிரசங்கியார் ஒரு தனித்தன்மையுள்ள நிலையிலிருக்கிறார். அவர் பிரசங்கியாராயிருப்பதினால் அவருடைய சகோதரர்களும் மற்றவர்களும் தங்களுடைய பிரதிநிதியாக அவர் பேசவேண்டுமென்று எதிர்ப்பார்ப்பார்கள், ஆனால் அவர் மிகுந்த ஜாக்கிரதையோடு தான் சொல்வதிலும், பேசுவதிலும் கிறிஸ்துவுக்கு மகிமையாயிருப்பதிலும் நிந்தைவராது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

சொல்லப்பட்டவைகளைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக சிந்திக்கும்படி உங்களை அழைக்கிறேன். உங்களுடைய பேச்சை மேம்படுத்த முயற்சியுங்கள், எப்போதும் "தேவனுடைய வாங்கியங்களின்படியே" பேசுங்கள் ஏனென்றால் இருதயத்திலிருந்தே வார்த்தைகள் புறப்படும்.

## பாடம் - 22
# பிரசங்கியாரின் பணி

நாம் வலியுறுத்தியபடி சுவிஷேசப்பிரங்கியாராக இருந்து மக்களுடைய மனங்களிலே நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டு மென்றால் அவருக்கு பிரசங்கம்செய்ய வேண்டும் என்ற ஆசை, சரியான நோக்கங்கள், அதோடு கூட சற்று திறமையும் இருக்க வேண்டும். சிலருக்கு இயற்கையாகவே பேச்சுத் திறன் இருக்கும் ஆனால் பிரசங்கியாராயிருப்பதற்கு இன்னும் அதிகம் தேவை. தேவனிடமும் மனிதனிடமும் உண்மையுள்ளவராகவும் தியாக மனப்பான்மையோடு சேவை செய்பவராகவும் தன்னுடைய வேலையில் பயிற்சி எடுத்து நன்கு படிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். பொது இடங்களில் பேசுவதற்கு இன்னும் ஞானம் தேவை. நாம் தொழில் ரீதியான பாடங்களை மட்டுமே கற்றுக்கொடுக்கிற மக்களை உருவாக்க முயற்சிக்கவில்லை, ஆனால் பிரசங்கியார் என்பவர் தேவனுடைய வார்த்தையையும் ஆத்துமாக் களையும் கையாளுகிறவர் ஆகவே அவர் தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்வது அவசியம்.

நம்முடைய கர்த்தருடைய சபையிலே அற்புதமான அழைப்போ அல்லது சபையின் எழுத்துப்பூர்வமான அனுமதியோ பிரசங்கிப்பதற்குத் தேவையில்லை, ஒருவர் கேட்கலாம் "பிரசங்கிக்க விரும்புகிறவர் யார் வேண்டுமானாலும் பிரசங்கிக்கலாம் என்று நீங்கள் சொல்லுவீர்களா? ஒரு வகையிலே பார்த்தால் அது உண்மைதான். அவர் ஆணாகவும் சபை அங்க்த்தினராகவும் விசுவாசமுள்ளவராகவும் பிரசங்கிக்கிற வாஞ்சையுள்ளவராகவும், சகோதரர்களால் பிரசங்கியாராக ஏற்றுக்கொள்ளப்படுகிறவராகவும் இருக்க வேண்டும். ஒரு சபையிலே அவர் சேவையை பயன்படுத்த விருப்பப்படாவிட்டாலும் வேறு இடத்திலே சென்று வேறு யாருக்காவதுகூட பிரசங்கிக்கலாம். ஆகவே அனுமதிக்கப்படுவது என்பது பிரச்சனையல்ல ஆனால் பிரசங்கிக்க போதுமான அளவு தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதே அவசியம்.

ஆனால் ஏன் இந்த விதமான வேலைக்கு பிரசங்கியார் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும்? ஏனென்றால் இது மிகவும் ஜாக்கிரதையான ஆவிக்குரிய பணி. அதிக நேரம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. தான் செய்ய வேண்டிய பணியை உண்மையாக செய்ய வேண்டுமென்றால் இவைகளையெல்லாம் செய்யவேண்டும். பிரசங்கிப்பது என்பது ஏதோ மகிமைக்காகவோ அல்லது ஒன்றும் செய்யாமல்

படுத்துக்கிடப்பதோ அல்ல. நல்ல உணவு, யாருக்கும் பதில் சொல்லத்தேவையில்லை என்கிற நிலை, இவைகளோடு எல்லாம் கொடுக்கப்பட்டு ஆங்காங்கே பிரயாணம் பண்ணுகிற வேலையும் அல்ல. பிரசங்கிப்பது என்பது ஒருவர் உண்மையாக உழைத்து தொடர்ந்து பிரசங்கிக்கும் வாய்ப்புகளைக் கண்டு செயல்படுவதாகும். அவர் மக்களை சந்தித்து பிணியாளிகளைத் தேற்றி அவர்களுக்காக ஜெபித்து, பிரச்சனை உள்ளவர்களுக்கு உதவி செய்து ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் திருப்பி வாலிபர்களை பிரசங்கிக்க போதித்து, பயிற்றுவிப்பது போன்றவையாகும். மற்றவர்களோடு (பிரச்சனைகளை) பகிர்ந்து கொள்ளும்படியாக அழைக்கப்படலாம். அவர் சிலரால் நிராகரிக்கப்படலாம். மேலும் அவருடைய விசுவாசத்தினிமித்தமும், ஊழியத்தினிமித்தமும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கலாம்.

பிரசங்கிப்பது என்ன வென்று நன்றாக தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதையும் நன்றாக படித்துப்பாருங்கள். பேதுருவையும், யோவானையும் பற்றி அப் 3,4 அதிகாரங்களில் படித்துப் பாருங்கள். அவர்கள் ஒரு மனிதனை குணமாக்கியபிறகு பிரதான ஆசாரியரால் அழைக்கப்பட்டு கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கிக்கக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டார்கள். பின்பு அவர்கள் அடிக்கப்பட்டு சிறையிலிடப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து பிரசங்கித்தார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பதிவேடுகள் நமக்குப் பின்வருமாறு சொல்கின்றன. "பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்" (அப் 4:19-20). பின்னும் நாம் வாசிக்கிறோம்." கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து;" (அப் 5:19). தொடர்ந்து எழுத்தாளர் சொல்லுவது. "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப் 5:41-42). பவுல் கர்த்தருடைய ஜனங்களை எவ்வளவாய் துன்பப்படுத்தினார் என்று கவனியுங்கள் ஆனால் பின்பு அவர் மாற்றப்பட்டார். அவருடைய பெயரும் பவுல் என்று மாற்றப்பட்டது. அவர்

அப்போஸ்தலராக்கப்பட்டார். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை வாசிக்கும் போது கிறிஸ்துவுக்காக எவ்வளவாய்ப் பாடுபட்டார் என்பதைக் காணலாம் (அப்போஸ்தலர் 8-9 அதிகாரங்கள்).

அப்போஸ்தலர் மட்டுமல்லாமல் கிறிஸ்துவை பிரசங்கித்த அநேகம் பேர் துன்பப்பட்டார்கள். நீங்கள் சொல்லலாம் ஆம், அன்றைக்கு அநீதியும் அடக்கு முறையும் இருந்தது இப்பொழுது சூழ்நிலை அப்படியில்லை யென்று,உண்மைதான் இன்றைக்கு சில காரியங்கள் வித்தியாசமாக இருக்கலாம். கர்த்தருடைய ஜனங்களுக்கு விரோதமாக இழைக்கப்பட்டக் கொடுமைகள் முதல் நூற்றாண்டு காலத்திலும் சரித்திரத்தில் மற்ற அநேக சமயங்களிலும் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் இப்போதில்லை. ஆனால் நீங்கள் எப்போது கிறிஸ்துவை பிரசங்கிக்கும் படியும் நீதிக்காகவும் இயன்றதை செய்ய முயற்சிக்கும் போதும் அதை விரும்பாத யாராவது ஒருவர் உங்களை எதிர்ப்பார்கள். பவுல் சொன்னார் "மேலும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ 3:12). அப்போதும் இது உண்மையாயிருந்தது இப்போதும் இது உண்மையாயிருக்கிறது. அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் முதல் நூற்றாண்டிலிருந்த அப்போஸ்தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு வந்த துன்பங்களினாலே சோதிக்கப்பட்டது. அவர்களுக்கு அந்தப் பாடுகளெல்லாம் சகிப்பதற்கு பலமான விசுவாசம் தேவைப்பட்டது. அதுபோலவே இன்றும் நாம் யாருக்கு சேவை செய்கிறோம். ஏன் அவருக்கு சேவை செய்கிறோம். என்பதை அறிந்து அந்த சேவையிலே நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும், அப்படி செய்யும்போது அந்த காலங்களிலே நடந்த பயங்கரமான காரியங்களை அனுபவிக்க வேண்டியிராது என்று நாம் நம்பலாம். ஆனால் அப்படி செய்யும்படி நாம் அழைக்கப்பட்டால் அந்தப் பரீட்சையை நாம் வென்று நம்முடைய கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருப்போம் என்று நம்புவோமாக.

சுவிஷேசப் பிரசங்கியாராயிருப்பதில் அநேக காரியங்கள் அடங்கியுள்ளது என்பதைக் காணலாம். உழைக்கவும், சேவை செய்யவுமே பிரசங்கியார் இருக்கிறார். சோம்பலாக தன்னைச் சுற்றியுள்ளவர்களின் தேவைக்கு செவிசாய்க்காமல் இருபதற்காக அல்ல. தாம் பெற்றுக் கொள்ளும் உதவிக்காக எத்தனை மணிநேரம் வேலை செய்கிறோம் என்று கணக்கிட்டு செயல்படாதவராக இருக்க வேண்டும். அவர் எங்கே குறைவாகச் செய்யலாம் என்று பார்க்காமல் அதிக செய்பவராயிருக்க வேண்டும்.

பிரசங்கிப்பதோடு கூட, கூட்டங்கள் நடத்துவது, தனிப்பட்ட வேலைசெய்வது ஆத்மாக்களை மனமாற்றுவது, கர்த்தருக்கு கீழ்ப்படியவிரும்புவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது, திருமணங்களை நடத்திவைப்பது, ஈமக்கிரியை நடத்திவைப்பது போன்றவற்றிற்கு அழைக்கப்படலாம். திருமணங்களை நடத்த அரசாங்கத்தின் தேவைகள் இன்னதென்று அறிந்து அதன்படி அங்கீகரிக்கப்பட்டால் சட்டப்படி சேவைசெய்யலாம். திருமணங்களை நடத்தும் போது மணமக்கள் வேதவாக்கியங்களின்படி இணைக்கப்படுகிறார்களா என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது அவர்களில் யாரும் வேத வசனங்களுக்குப் புறம்பாக விவாகரத்தானவர்களாகவோ அல்லது பலமுறை திருமணம் செய்தவர்களாகவோ இருக்க கூடாது. ஒருநபர் கிறிஸ்தவராக இருக்கும் பட்சத்தில் அவனையோ, அவளையோ கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்குத் திருமணம் செய்து வைக்காதீர்கள்.

ஈமக்கடமைகளை நிறைவேற்றும் போது மரித்தவர்களை குறித்து தீர்ப்புச் சொல்லாதீர்கள், மரித்தோரை பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ நீங்கள் அனுப்பாதீர்கள். அது உங்களுடைய வேலையில்லை. உங்களுடைய செய்தி அங்கே இருக்கின்ற உயிரோடிருக்கும் மக்களுக்கு, அவர்களை முடிந்தவரை தேற்றி மரணத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும் தங்களை ஆயத்தம் செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

ஞானஸ்நானத்தைப் பொருத்தமட்டில் (சிலர் விவரித்தபடி) ஆத்துமாக்களை வெளிநாட்டிலிருந்து ஒருவர் வரும்போது அதைச் செய்யலாம் என்று சேர்த்து வைக்காதீர்கள். உங்களுக்கு உதவி செய்பவர்கள் வருவதாயிருந்தால் கூட அப்படி செய்யாதீர்கள். அந்த மக்களுக்கு நீங்கள் போதித்து மனமாற்றிருந்தால் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிய விரும்பினால் அந்த கீழ்ப்படிதலை நிறைவேற்றும்படி அவர்களுக்கு உதவியாயிருங்கள். உங்கள் பிரசங்கங்களைச் செய்யும்படியாக போதுமான நேரம் வேதத்தைப் படித்து தயார் செய்ய வேண்டும். உங்களுக்கு ஒரு அலுவலகம் இருந்தால் நேரத்தை அங்கேயே செலவு செய்யாதீர்கள். மாறாக மக்கள் மத்தியில் சென்று கர்த்தருக்கென்று வேலைசெய்து பிரசங்கித்து போதித்து சுவிசேஷமயமாக்குங்கள் பிரசங்கியாராகிய உங்களுக்கு இதுவே வேலை.

## பாடம் - 23
## உபதேசத்தில் உறுதி

இந்தப் பாடத்தை படிக்கும்போது என்னோடு கூட நீங்கள் பிரசங்கியாரைப்பற்றியும், அவருடைய உறுதியான தெளிவான அறிவைப்பற்றியும் சிந்தியுங்கள். நாம் கிறிஸ்துவின் உபதேசத்தைப் பற்றியும், அதற்கு ஒருவர் தன்னை அர்பணிப்பதைப் பற்றியும் பேசுகிறோம்.

மெய்யாகவே வித்தியாசப்பட்ட உபதேசங்களோடும் நடைமுறைகளோடும் அநேக சபைகள் இருக்கின்றன அவர்கள் தங்களுக்கென்று சொந்த பிரசங்கியாரையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் அல்லது இவைகளை குறைவாகவும் கொண்டிருப்பார்கள். மேலும் அநேக மத சம்பந்தப்பட்ட கூட்டங்களுமுண்டு. ஆனால் அவைகளில் ... ஒன்றிலாகிலும் நமக்கு ஆர்வமில்லை. ஆனால் நாம் வேதம் என்ன போதிக்கிறதோ அந்தப் போதனைபடி விசுவாசத்தில் நடப்பதிலும் அதைப் பிறருக்கு அறிவிப்பதிலும் ஆர்வமாக இருக்கிறோம்.

ஒரு பிரசங்கியார் உபதேசத்தில் உறுதியுள்ளவராயிருக்க வேண்டுமானால், அதாவது அவருடைய நம்பிக்கையிலும் வேதம் என்ன போதிக்கிறது என்பதைப் பிரசங்கிப்பதிலும்... இயல்பாகவே இரட்சிக்கப்படும்படியாக கர்த்தருக்கு அவர் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சபையிலே கிறிஸ்துவானவராலே சேர்க்கப்பட்டவராகிறார் என்பதை விசுவாசிக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தனக்கு தானே செய்துக்கொள்ளாத ஒன்றை அவர் எப்படி மற்றவர்கள் செய்யும்படி பிரசங்கிக்க முடியும், ஒரு வாடகைப் பிரசங்கியாரே அப்படிச்செய்ய முடியும் ஆனால் வாடகை பிரசங்கியார் வேதத்தின் பார்வையிலே குற்றவாளியாக யிருக்கிறபடியால் கர்த்தருடைய ஜனங்களால் நிராகரிக்கபடவேண்டும்.

அப்படியானால் ஒருபிரசங்கியார் சுவிஷேசத்தைக் கேட்டு அதை விசுவாசித்து தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அல்லது பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டவராயிருக்கிறார் (மாற்கு 15:15-16; லூக் 13:3; மத் 10:32; அப்2:38). இவைகளைச் செய்த பின்பு வேதத்திலே சொல்லப் பட்டுள்ள கிறிஸ்துவின் ஒரே சபையிலே கர்த்தரே அவரை சேர்க்கிறார் (அப் 2:47; எபே 4:1-6; கொலோ 1:18). இப்பொழுது அவர் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சபையில் அங்கத்தினராகிவிட்டார். அவர் கிறிஸ்தவராக வாரத்தின் முதல் நாளிலே தேவனைத் தொழுது கொள்ளும்படி ஆயத்தமாக இருந்து கிறிஸ்தவராக ஜீவிக்கிறார்.

ஒரு கிறிஸ்தவராக இந்த மனிதன் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க தீர்மானிக்கிறார் இந்த வேலைக்கு தேவைப்படுவது என்ன? இதன் அர்த்தம் என்ன வென்றால் அவர் வேதத்தை போதுமான அளவிற்கு கற்று தன்னைத் தானே ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தையை அறிந்து அவர் சித்தத்தைப் புரிந்து அதோடு எதையும் கூட்டாமலும் அதிலிருந்து எதையும் குறைக்காமலும் அல்லது அதற்கு மாறாக எதையும் சொல்லாமலும் மற்றவர்களுக்கு போதிக்கதக்கதாக புரிந்து செயல்படுபவராக இருக்க வேண்டும் (வெளி 22:18-19; கலா 1:6). கிறிஸ்துவினுடைய உபதேசங்களின்படியும், போதனைகளின்படியும் நடக்க வேண்டும் என்பதன் ஜாக்கிரதையை அவர் உணர்ந்தவராயிருக்க வேண்டும். துவக்க காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றி பின் வருமாறு வாசிக்கிறோம். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப் 2:42). அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்த அப்போஸ்தல உபதேசங்கள் கிறிஸ்துவின் போதனைகளே. அப்போஸ்தலனாகிய யோவான் பின்வருமாறு சொல்கிறார். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிறஎவனும் தேவனை உடையவனல்ல: கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2யோவான் 9). யாக்கோபு சொல்கிறார். "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்" (யாக் 1:25). இந்த வேத வாக்கியங்களை நாம் படிக்கும்போது எளிதாகக் காண்பது என்ன வென்றால் ஒரு பிரசங்கியாரோ அல்லது கிறிஸ்தவனோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் உபதேசத்திலும் போதனையிலும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே. மேலும் வேத வாக்கியங்களை போதிப்பதில் ஒருவன் இந்த விதமாக செய்யாவிட்டால் தேவன் அவனோடிருந்து அவனை ஆசீர்வதிக்க மாட்டார் என்பதே.

தீமோத்தேயு, மற்றும் தீத்துவோடு பவுல் பேசும்போது ஆரோக்கியமான உபதேசத்தைக் குறித்தும் ஆரோக்கியமாகப் பேசுவதைக் குறித்தும் மற்றும் பிறவற்றையும் குறிப்பிடுகின்றார். 1 தீமோ1:10-ல் பவுல் கொலை, ஒழுக்கக்கேடு, பொய்ச்சொல்லுதல் ஆகியவற்றை ஆரோக்கியமான உபதேசத்திற்கும் போதனைக்கும் எதிரானது என்று பட்டியலிடுகின்றார் 2தீமோ 1:13-ல் அவர் வலியுறுத்திச் சொல்வது "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு".

மறுபடியும் ஆரோக்கியமான போதனை என்றால் அது தேவனிடத்திலிருந்து வரும் போதனையே. தீத்துவுக்கு அவர் போதகனுடையவேலையைச் செய்வது பற்றி பவுல் பின்வருமாறு சொல்கிறார். "அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள். அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமா யிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான். இந்த சாட்சி உண்மையாயிருக்கிறது; இது முகாந்தரமாக, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல். விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய் கடித்துகொள். சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர் களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களு மாயிருக்கிறார்கள்" (தீத்து 1:10-16). பவுல் தொடர்ந்து சொல்வது "ஆரோக்கியமான உபதேசத்துக்கு ஏற்றவைகளைப் பேசு" (தீத்து 2:1). முதிர்வயதுள்ள புருஷர்களுக்கும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கும் வாலிப ஸ்தீரீகளுக்கும், இளைஞனுக்கும் அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி எப்படி போதிக்க வேண்டுமென்று தீத்துவுக்கு ஆலோசனை சொன்னபின்பு அதைப் பின்வருமாறு சொல்லி நிறைவு செய்கிறார்...(தீத்து 2:8). மேலும் அவர் சொல்லுகிற புத்திமதி பின்வருமாறு "தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு, ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்

எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர் களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப் பாயாக"(தீத்து 2:10-16).

மேலும் 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து மற்றும் அது போன்ற நிருபங்களில் நாம் தொடர்ந்து ஆரோக்கியமான உபதேசத்தில் விசுவாசமாயிருப்பதிலும் வார்த்தையிலும் நன்னடைத்தையிலும், மற்றவர்களோடு பழகுவதிலும், மேலும் போதிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து வாசிக்கலாம்.

ஆகவே பிரசங்கியார்கள் மற்றவர்களுக்கு போதிக்கும் படியான நல்ல வேலையை செய்யும்படியாக வேதத்தை நன்கு படித்து அது என்ன போதிக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டிலும், யூதர்களுடைய சரித்திரத்திலும் பிரமாணங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசங்கள், பழைய ஏற்பாட்டு சட்டம் ஏன் நடைமுறையில் இல்லை மேலும் புதிய ஏற்பாட்டு சட்டம் இன்றைக்கு மனிதர்களை கட்டுப்படுத்துவதாக ஏன் இருக்கிறது என்பதிலும் ஒருவர் நன்கு கற்று தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் (எபி 9-10 அதிகாரம்). பிரசங்கியார் சுவிசேஷத்தைக் குறித்தும், இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்தும் அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள மன மாற்றங்களைக் குறித்தும் மேலும் கர்த்தருடைய சபை மற்றும் அதனுடைய அமைப்பு ஆகியவற்றைக் குறித்தும் நன்கு புரிந்தவராக இருக்க வேண்டும் (1கொரிந் 15:1-4;மாற்கு 16:15-16; எபே 5 அதிகாரம்).

மேலும் ஒரு பிரசங்கியார் வேதத்தினுடைய உண்மையையும் போதிக்கும்படியாக வேதத்திலே கண்டிப்பாகக் கற்று தேர்ச்சி பெற வேண்டிய அநேகமுண்டு. அதே சமயத்தில் அவர் கள்ள போதனையைக் குறித்து எச்சரிக்கையுள்ளவராக அதை அன்போடும் உறுதியோடும் கண்டிப்பாக எதிர்க்க வேண்டும்.

பாடம் - 24

# தேவைப்படாத பிரசங்கியார்கள்

சபையில் தலைமைத்துவப் பொறுப்பில் உள்ள எல்லோருமே கர்த்தருடைய சரீரத்துக்கும் அதனுடைய பணிகளுக்கும் அவசியம் என்பதை நாம் புரிந்து கொண்டபோதிலும், இந்தப் பாடத்தில் நன்கு கற்றறிந்து தேர்ச்சிப்பெற்ற பிரசங்கியார்கள் இந்த பணிக்கு மிகவும் தேவைப்படுவதால் பிரசங்கியாரைப் பற்றி அதிக முக்கியத்துவம் கொடுத்து படிப்போம். இருந்த போதிலும் இந்த நேரத்தில் தேவைப்படாத சில பிரசங்கியார்களைப் பற்றி விவாதிக்கலாம்.

சமுதாயத்தினுடைய ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வேலையிலும் எப்போதும் தகுதியற்ற சிலர் இருப்பார்கள். அவர்கள் நன்மையைவிட அதிக தீமைச்செய்கிறவர்கள். அவர்களில் சிலர் சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்களுடைய சுயநலத்திற்கு ஏற்றவைகளை வளர்த்துக் கொள்வார்கள். இதே விதமான சூழ்நிலை கர்த்தருடைய சபையிலும் உண்மையாகவே இருக்கிறது. சபையில் தேவைப்படாத விரும்பப்படாதவர்கள் சிலர் பிரசங்கிக்கும்படியாக கவரப்படுகிறார்கள். அவர்களுடைய நோக்கங்களாலும் வாழும் விதத்தாலும் தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்படுகிறவைகளோடு ஒத்துப்போக மனமில்லாத காரணத்தினாலும் அப்படியாகிறது.

அவர்கள் மனமாற்றம் அடையாமல் அல்லது கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாயிராமல் இருந்தால் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க தகுதியற்றவர்கள் என்பதை சொல்லத் தேவையில்லை. மேலும் தேவைப்படாத அநேகரைப் பற்றி நாம் பார்ப்போம்.

1. பெண்கள் வளர்ச்சியுற்ற எல்லாதரப்பினர் மத்தியிலும் பிரசங்கியாராக இருக்க முடியாது. புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு இடத்திலும் பெண்கள் பிரசங்கிக்கும் பொறுப்பில் இருந்ததாக நீங்கள் படிக்கிறீர்களா? சில சந்தர்பங்களிலே ஸ்தீரிகள் வளர்ந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனியாகவோ, தனிப்பட்ட முறையிலோ போதித்து இருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கலந்த கூட்டத்தாருக்கு பொது இடங்களில் பிரசங்கித்தது எப்போதும் ஆண்கள் மட்டுமே. கிறிஸ்து உலகமெங்கும் சுவிஷேசத்தை எடுத்துச் செல்லும்படி அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டார் (எல்லோரும் ஆண்களே) (மாற் 16:15-16). பெண்களை சேர்க்காததால் கர்த்தர் அநீதி உள்ளவரா? இல்லை ஆண்களுக்கு செய்யும் படியான

வேலைகள் கொடுக்கப்பட்டது போல பெண்களுக்கும் செய்யும்படியான வேலையும் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருக்கு மனுஷனையும் மனுஷியையும் நன்றாகத் தெரியும் அவர்களுக்கு எது மிகவும் நல்லதென்று தெரியும். ஆகவே அதுவே அவருடைய தீர்மானமாகும். ஆண்களும், பெண்களும் பிரசங்கிப்பது என்பது போட்டிபோடுவது அழிவுக்குரியதாகும் உலகத்தில் ஆண்களும், பெண்களும் பலவிதமான வேலைக்கு போட்டி போடுவதினால் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிவோம். உண்மையாகவே அவர்கள் ஒருவரோடொருவர் பகைவர்களாகிறார்கள். இந்த விதமான நிலை கர்த்தருடைய சபையிலே இருக்கமுடியாது. ஏனென்றால் கர்த்தருடைய போதனைகளை அலட்சியம் செய்பவர்கள் நிராகரிக்கப்படுவார்கள். இந்த விதமான சூழ்நிலையில் என்னத்தை நாம் சாதிக்கமுடியும்?

2. ஓரினச்சேர்கையில் உள்ளவர்கள் பிரசங்கியாராக முடியாது. உண்மையாகவே சில மத குழுக்களில் நிர்பந்தம் காரணமாக இப்படிப்பட்டவர்களை பிரசங்கியாராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள் சாதித்தது என்ன? ஓரினச் சேர்க்கை ஒரு ஒழுக்கக்கேடான செயல். வேதம் அதை கண்டனம்பண்ணுகிறது. அது இயல்பானதோ அல்லது இயற்கையானதோ கிடையாது. ரோமருக்கு எழுதும் போது பவுல் இந்த விதமான மக்களைக் குறித்து பின்வருமாறு விவரிக்கிறார் " இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்தில் உள்ள இச்சையினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்ததக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவராகிய சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேல்லொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலச்சனமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவைப்பற்றிக் கொண்டிருக்க மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகல வித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும்,

பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமை யினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளையோசித்து பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்கு கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக் கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திராயிருக் கிறார்கள் என்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளை தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்" (ரோமர் 1:24-32). இப்படிப்பட்ட பின்னணியுள்ளவர்கள் எப்படி பிரசங்கியாராக வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை கற்பனை செய்யமுடியும்? முதலாவது அவர்கள் எதை பிரசங்கிக்கக்கூடும்? அவர்கள் மனந்திரும்ப வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது அந்த நாட்களில் சோதோமில் இந்த விதமான மக்கள் வாழ்ந்தார்கள் அவர்கள் பொல்லாங்கினிமித்தமும் சோதோமின் பாவத்தினாலும் ஓரினச்சேர்க்கை மற்றும் ஒழுக்க கேட்டினாலும் தேவன் அவர்களை அழித்தார். இந்த விதமான பாவங்கள் அந்த காலகட்டத்திலிருந்து இப்போதும் இருக்கிறது (ஆதி. 18 -19 அதிகாரம்). பெண் தன்மையுள்ளவர்களும், மற்ற மனிதர்களோடு தங்களை கெடுத்துக்கொள்கிறவரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று பவுல் (ரோமர் 6:9-10). வசனங்களில் குறிப்பிடுகிறார். இங்கே அவர் யாரைக் குறித்து பேசுகிறார் என்பதில் சந்தேகம் இருக்க முடியுமா? ஆண் புணர்ச்சிகாரன் எதை பிரசங்கிப்பான் என்பதைக்குறித்து நீங்கள் எப்போதாவது ஆச்சரியப்பட்டது உண்டா?

3. ஒழுக்கக்கேடுடையவர்கள் பிரசங்கியாராக முடியாது. ஓரினச்சேர்கையாரைப்போலவே வேசித்தனம் விபசாரம் போன்ற மற்ற பாலியல் சீர்கேடுகளை வேத வசனம் கண்டனம் செய்கிறது. அவைகளெல்லாம் மாம்சத்தின் கிரியைகள் என்றும் அவைகளிலிருந்து உடனடியாக மனந்திரும்ப வேண்டும் என்றும் வேதம் கட்டளையிடுகின்றது (கலா 5:19-21). விவாகரத்தாகி மறுமணம் செய்தவர்கள் பிரசங்கியாராக கூடாது. ஒருவர் பிரசங்கியான பின்பு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்

அவர்கள் தொடர்ந்து பிரசங்கம் செய்யாதிருப்பது நல்லது. ஒரு வேளை அவர் குற்றமில்லாதவராக இருந்தாலும் அல்லது வேதவசனத்தின்படி தங்கள் ஜீவியத்தை திருத்தியிருந்தாலும்கூட அவர்கள் தொடர்ந்து பிரசங் கியாதிருப்பது நல்லது. ஏனென்றால் நடந்தயாவும் ஊழியப்பாதையிலே தடைக்கற்களாக நிற்கும். அப்படியென்றால் வேறு என்ன செய்வது? ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவராக தொடர்ந்து ஜீவியுங்கள்.

4. உண்மையற்ற கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கக் கூடாது. சபையிலிருந்து வேத வசனங்களின்படி விலக்கப்பட்டியிருந்தாலும் அவர்கள் பிரசங்கிக்கக் கூடாது. பிரசங்கிப்பது என்பது ஒருவர் கர்த்தருக்கு உண்மையாய் இருந்து அவர் போதிக்கிறபடி நடக்கிறவராக இருக்க வேண்டும். அவன் தன்னுடைய சொந்த ஜீவியத்தை திருத்திக்கொள்ளா விட்டால் மற்றவர்களுக்கு எப்படி உதவி செய்ய முடியும்.

5. கள்ளப்போதகர்கள் தேவைப்படாதவர்கள். சில காலம் உண்மையுள்ள பிரசங்கியாராக இருந்து பின்பு வஞ்சிக்கப்பட்டு தவறான போதனைகளை பிரசங்கிக்க ஆரம்பித்தால் அவர்கள் பிரசங்கிக்க கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் சத்தியத்தைத் தொடர்ந்து போதிக்காத காரணத்தால் சீர்ப்படுத்தபடவேண்டும். தவறுகளை போதிப்பதன் மூலம் அவர்களை வஞ்சித்து இரட்சிக்கப்படாத நிலையிலேயே இருக்கச் செய்வார்கள் (2யோவான் 9-11; ரோமர் 16:17-18).

6. வாடகைப்பிரசங்கியார் தேவைப்படாதவர்கள். அவர்கள் கர்த்தருக்கு என்று ஊழியம் செய்யாமல் தங்களுக்காகவே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் எதைப்பிரசங்கிக்க வேண்டுமென்று பணம் கொடுக்கிறீர்களோ அதையெல்லாம் பிரசங்கிப்பார்கள் கர்த்தர் தாமே இதைக்கண்டனம் செய்கிறார் (யோவான் 10:11-13).

7. இந்த உலகத்தையும் பணத்தையும் நேசிக்கிறவர்கள் பிரசங்கியாராகத்தேவைப்படாதவர்கள். உலகத்திலே மிகவும் ஈடுபாடு உள்ள சிலர் உண்மையற்றவர்களாகி கேள்விக்குரியவைகளைச் செய்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து அதிக பணத்தைப் பெறும்படியும் வாழ்க்கையின் சரீரத் தேவைகளை அதிகமதிகமாகப் பெறும்படியும் பிரயாசப்படுகிறார்கள். உலகத்தையும் அதில் உள்ளவைகளையும் நேசித்து அவைகளுக்கு வாழ்வில் முதலிடம் கொடுக்கக் கூடாது என்று (1யோவான் 2:15-16) காண்கிறோம். பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் 1 தீமோத் 6:10-ல் கூறுகிறார். கர்த்தரையும் அவருடைய ராஜ்யத்தையும் முதலாவது தேடவேண்டும் என்று மத் 6:33-ல் சொல்லப்படுகிறது.

நமக்கு பிரசங்கியார்கள் தேவை அதிகம் தேவை ஆனால் அவர்கள் உண்மையாய் மனமாற்றப்பட்டு தங்களை அர்பணித்தவர்களாய் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் கர்த்தருக்கும் அவருடைய வேலைகளை செய்வதற்கும் பிரியமுள்ளவராக இருந்து. அப்படியாக கிறிஸ்துவுக்காக கடினமாக உழைத்து பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் பிரசங்கியாராக விரும்புகிறீர்களா? அப்படியென்றால் அதற்குரிய விலையைக் (தியாகம்செய்ய) கொடுக்க தயாரா?

## பாடம் -25
# கள்ளப் போதனைகளை சமாளிப்பது

குறிப்பாக பிரசங்கியாரும் அதே சமயத்தில் சபையிலுள்ள மற்ற நடத்துனர்களும், எல்லா விசுவாசிகளும் தங்கள் வாழ்க்கையில் சில கள்ளப்போதனைகளை எதிர்கொண்டு சமாளிக்க நேரிடும். நான் பிரசங்கியாரை குறிப்பிட்டுச் சொன்னதன் காரணம் என்ன வென்றால் அவர் தொடர்ந்து பிரசங்கிக்கின்றார், பல சமயங்களில் தான் வசிக்கும் பகுதிகளிலும் பொதுவான இடங்களிலும் சென்று போதிக்க வேண்டியிருப்பதால் அவர் எல்லாவிதமான போதனைகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறதோடு பலவிதமான உபதேசங்களைக் குறித்தும் வினவப்படுகிறார். இந்த விதமானசூழ்நிலைகளில் அவர் என்ன செய்வார்? பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம், ஒத்துப்போகலாம் அல்லது பதில் அளிக்கலாம்.

முதலாவது நாம் கள்ள போதனை என்றால் என்னவென்று விளக்க வேண்டும். எந்த ஒரு போதனையும் வேதத்தின் போதனையோடு முரண்படுமானால் அதுவே கள்ளபோதனை. அது விசாலமான எல்லைகளை உள்ளடக்கியது. இயற்கையாகவே பல வித்தியாசப்பட்ட மதங்கள் இருப்பதனால் அப்படியாகும். ஆனால் ஒரு சராசரி பிரசங்கியார் கிறிஸ்தவ எல்லைக்குட்பட்டு அதிகமாக கள்ளப்போதனைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். ஏனென்றால் பொதுவாக அவர் கிறிஸ்துவை விசுவாசிக்கிற மக்கள் மத்தியிலே அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கும். ஆகவே அவர்களுடைய போதனைகளும் வேதத்தின் அடிப்படையிலே இருப்பதால் கிறிஸ்தவ சமுதாயம் என்று அழைக்கப்படுகிறவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல போதனைகளிலிருந்து அவருடைய போதனைகள் மாறுபட்டிருக்கும். அப்படி மாறுபட்ட போதனைகளை நம்புகிறவர்களும் பல கேள்விகளைக் கேட்பார்கள். இவையெல்லாவற்றிற்கும் சொல்ல வேண்டியது என்ன வென்றால் கர்த்தருக்கு ஒரு சபை உண்டு. ஒரே சபை அவராலே ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காகவே அவர் மரித்தார், அவரே அதன் தலைவர், இரட்சகர், கிறிஸ்துவே அதன் அஸ்திபாரம், அந்த சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து கொண்டாதாயிருக்கிறது (மத் 16:18; அப் 20:28; கொலே 1:18; எபே 5:23; 1கொரி. 3:11; ரோமர் 16:16). கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறார்களென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன (மாற் 16-16; அப் 2:38,47).

இப்போது அந்த ஒரே சபையோடு கூட அநேக வேறு சபைகளும் இருக்கின்றன. அவைகளெல்லாம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு மனிதர்களுடைய பெயர்களைத் தாங்கி மனிதர்களுடைய போதனையின் படியே நடத்தப்படுகின்றன. மேலும் அநேக காரியங்கள் தவறான போதனை அடிப்படையிலேயே இருக்கிறது. இந்த சபைகள் இரட்சிக்கப்படுவதற்கு அநேக வழிகள் உண்டென்று போதிக்கின்றன. நீங்கள் நினைக்கின்ற எல்லாவற்றைப் பற்றியும் அங்கே போதிக்கப்படுகின்றன். பொதுவாக மக்கள் இவைகளை குறித்து எப்படி தெரிந்துவைத்திருக்க முடியும். இந்தத் தவறான போதனைகளைக்குறித்து அவைகள் தேவனுடைய வார்த்தைகளோடு ஒப்பிடப்பட்டு சத்தியம் தவறானவைகளுக்கு மேலானது என்பதை போதித்தாலொழிய. இந்த கள்ள போதனைகளுக்காக எந்த நேரமும் செலவிடவேண்டியுள்ளது என்ற உண்மை வருந்தத்தக்கது. ஆனாலும் அதிலிருந்து தப்ப வழியில்லை. நீங்கள் தப்பித்துக் கொள்ளாவிட்டால் மக்கள் தொடர்ந்து பொய்யானவர்களை நம்பிக்கொண்டிருப்பார்கள். எப்படியிருப்பினும் அநேகர் தொடர்ந்து நம்புவார்கள். ஆனாலும் சத்தியம் போதிக்கப்பட்டு பொய்யான போதனையைக் கண்டனம் பண்ணும் போது உண்மையைத் தேடுவோர் இரட்சிக்கப்படுவார்கள்.

ஆகவே பிரசங்கியார் வேதாகமத்தினுடைய எல்லாப் போதனைகளையும் கற்று நன்கு அறிந்துகொள்ளும்படி படிக்க வேண்டும். குறிப்பாக அவர் சுவிசேஷத்தைக்குறித்தும் சபையைக் குறித்தும் தொழுகையைக் குறித்தும் இரட்சிப்புக்கேற்ற எல்லாவிதமான அடிப்படைபோதனைகள் குறித்தும் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அப்போது மதசம்பந்தப்பட்ட பிரிவினை உள்ளவர்கள் போதிக்கின்ற பொய்யானபோதனைகளுக்கு வேதத்தின் அடிப்படையிலே பதிலளிக்க முடியும் அவருக்கு சத்தியத்திலே முழு நம்பிக்கையிருக்க வேண்டும். கள்ளபோதனைகளை எதிர்த்து சமாளிக்கின்ற சக்தி இருக்க வேண்டும். மேலும் மக்கள் சத்தியம் எது. தவறு எது, என்பதை குறித்து எந்த விதமான சந்தேகங்களை எழுப்பினாலும் அதற்குத் தெளிவான பதிலளிக்க வேண்டும்.

கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் கூட கள்ள போதனைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. தங்களை கிறிஸ்து என்று சொல்லிக் கொண்டவர்கள் கூட இருந்தார்கள். கர்த்தர் எச்சரித்தார். "அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத் 24:23-24). பவுல் எழுதுகிறார். "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர் 16:17-18). கொரிந்துவிலுள்ள சபையை பவுல் பின்வருமாறு வேண்டிக் கொள்கிறார். "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 கொரிந் 1:10). பவுல் கொலோசெயருக்கு சொல்லும்போது ."நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே" என்கிறார்(கொலே 2:20-22). யோவான் பின்வருமாறு சொல்கின்றார்." பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்"(1 யோவான் 4:1). கிறிஸ்துதாமே சொல்லுவதைக் கேளுங்கள், "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத்.15:9). மேலும் அவர் சொன்னது. " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர்என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும்

உங்களைஅறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத் 7:21-23).

ஆகவே கர்த்தரும் அப்போஸ்தலரும் பொய்யான போதனைகளுக்கு எதிராக நம்மை எச்சரிக்கின்றார்கள். ஏனென்றால் சத்தியத்திற்கு பதிலாக கள்ளபோதனைகளை ஏற்றுக்கொள்கிறவர்கள் தங்களை இழந்து விடுகிறார்கள் ஆகவே நாம் ஜெபத்தோடு கூட அப்படிப்பட்ட மக்களை தவறுகளுக்கு எதிராக எச்சரித்து, அவர்கள் அதை நிராகரித்து தேவனுடைய வார்த்தைகளை நம்பி இரட்சிக்கும்படியாக போதிக்க வேண்டும்.

இதற்கான பதில் கள்ள போதனைகளை வெறுத்து மக்களை அதைக்குறித்த அறிவும் அந்த ஆபத்துகளை குறித்த எச்சரிப்பும் இல்லாதபடி விலக்கிவைப்பதல்ல. அதே சமயத்தில் உண்மையையும் பொய்யையும் கலந்து அதோடு ஒத்துப்போவதும் யாருக்கும் எந்த வகையிலும் பயன் தராது. பொய்யோடு கலக்கப்படுகின்ற சத்தியம் சத்தியமாகாது. அது யாரையும் இரட்சிக்க முடியாது.

கள்ள போதனைகளை சமாளிக்கையில் எப்பொழுதுமே அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதென பொருள்படுகிறதில்லை. அந்த தவறுகளை நாம் கையாளும் போது அந்த தவறில் இருப்பவர்களை மிக அசிங்கமான முறையிலோ அல்லது அவர்களை துணிந்து அழித்து விடவேண்டுமென்றோ, செயல்படுவது அல்ல. அவர்களை நாம்நேசித்து அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக தவறுகளை உணர்த்த வேண்டும். நாம் நினைப்பதே சரி என்ற கொள்கையில் உறுதியாயிருந்து தவறான போதனையிலிருப்பவர்கள், சொல்வதை கவனிக்கவே மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்ககூடாது. யாரையும் வேண்டாம் என்று தள்ளிவிடாதீர்கள். அதே சமயம் தேவனுடைய சத்தியத்தோடு அவர்கள் இரட்சிக்கப்பட என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள். ஆனால் சத்தியம் மட்டும் ஒருவரை இரட்சிக்கவோ விடுதலை செய்யவோ முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## பாடம் - 26
# பிரசங்கியார்களுக்குப் பயிற்சி

பிரசங்கியார்களுக்கு பயிற்சி அளிப்பதின் அவசியத்தை பற்றி சிந்திப்போம். நாம் முன்னமே சொன்னபடி பிரசங்கியார்கள் தானாகவே வருவதில்லை. கர்த்தரும் அவர்களுடைய மனங்களைத் திறந்து அந்தத்த வாரம்செய்ய வேண்டிய பிரசங்கத்தை ஊற்றுவதில்லை. நல்ல பிரசங்கியார்கள் அநேக வருஷ கடின உழைப்பினால் உருவாகிறார்கள். இளம் பிரசங்கிகள் தங்களுடைய வேதத்தை வாசித்து கற்று தாங்கள் சார்ந்திருக்கும் பிராந்திய சபையில் அநேக வழிகளில் உதவியாய் இருக்கலாம். பிரசங்கியார் பயிற்சி பள்ளி அங்கே இருக்குமானால் சென்று இரண்டு மூன்று ஆண்டு படிக்கலாம்.

ஆனால் பொதுவாக் பிரசங்கியார்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சியைப்பற்றி எப்படி? நாடெங்கிலும் உள்ள பிரசங்கியார்கள் தேவையான பயிற்சி பெற்றுக்கொள்ளும்படி எப்படி அவர்களுக்கு உதவலாம்.

பிராந்திய சபையே ஒருசிறந்த பிரசங்கியார் பயிற்சிபள்ளி. அங்கே கொடுக்கப்படுகின்ற பயிற்சி எப்போதும் கிடைக்கும். ஒருவருக்கோ அல்லது எத்தனைப்பேருக்கு வேண்டுமானாலும் பயிற்சி அளிக்கலாம். பிராந்திய சபையார் தங்களிடமுள்ள வாலிபர்களை பிரசங்கிக்கும்படி உற்சாகப்படுத்தலாம். ஆம் அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மருத்துவராக, ஆசிரியர்களாக, வழக்கறிஞர்களாக, வியாபாரிகளாக அல்லது மற்ற பெரிய வேலைகளில் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட வேலைகளில் நல்ல வருவாயும் சமூக அங்கீகாரமும் இருப்பதே அதற்குக் காரணம். ஆனால் வாழ்க்கையில் அதிக பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் நிறைய உண்டு. நீங்கள் ஏன் உங்கள் வாலிபர்களையும் உங்கள் வாலிப ஸ்திரீகளையும் பிரசங்கியார்களுடைய மனைவிமார்களையும் உற்சாகப்படுத்தக் கூடாது. போதிப்பதும் கர்த்தருடைய பணியைச் செய்வதுமே இந்த உலகத்தில் மிகப்பெரிய வேலை. பிரசங்கியாராக இருப்பதென்பது கனத்துக்குரிய ஏற்புடைய வேலை. இதிலே அதிகமான சம்பளம் கிடைக்காமலிருக்கலாம் அநேக தியாகம் செய்ய வேண்டியிருக்கலாம் அந்த சூழ்நிலையிலும் இது தகுதியான வேலை. சபையில் உள்ளவர்கள் தங்கள் வாலிபர்களையும் வாலிப பெண்களையும் இந்த திசையில்ஊக்கப்படுத்தினால் அபாரமான மாற்றத்தைக்காணலாம்.

சபையிலே ஒன்று இரண்டு வாலிபர் பிரசங்கியாராகும் பட்சத்தில் முழுசபையும் இதை ஊக்கப்படுத்தலாம். பலவிதமான கூட்டங்களில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம். அவர்களுக்கென்று ஒரு பயிற்சி வகுப்பு இருந்தால் அங்கே அவர்கள் படித்து வேதவகுப்புகள் எடுத்து போதகர் அவைகளைக் கவனித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லலாம். சபையினுடைய தலைவர்கள் அவர்களுக்கு அவ்வப்போது பிரசங்கிக்கும்படியான வாய்ப்பளிக்கலாம். அவர்கள் பிராந்திய சபையின் பிரசங்கியாரோடு வீடுகளைச் சந்திக்கச் செய்யலாம். வேத வினாப்போட்டிகளில் கலந்து கொண்டு வாலிபர்களை உற்சாகப்படுத்தலாம் மேலும் பல நற்காரியங்களைச் செய்யலாம். நாம் பிரசங்கிக்க விரும்புகிறவர்களுக்கு ஒரு பரிபூரணமான பயிற்சி கூடமாக பிராந்திய சபை இருக்க முடியும். நாடெங்கிலும் உள்ள கிறிஸ்துவின் சபைகள் இந்த விதமான பயிற்சியின் திட்டங்களை விருத்தி செய்யுமென்றால் தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்தது போக வெளியேயும் சென்று ஊழியம் செய்யும்படி அனுப்பலாம். பல வருஷங்களில் மிக அதிகமான பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகளை நான் அறிவேன். அதே சமயத்தில் ஒரு பிரசங்கியாரைக்கூட உருவாக்காத சபையையும் நான் அறிவேன். இந்த சபைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் என்ன? வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால் பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகள் தங்கள் வாலிபர்களை பிரசங்கிக்கவும், அவர்கள் பிரசங்கியாராகவும் உதவிய சபைகளே. பிரசங்கியார்களை உருவாக்காமலும் உருவாக்குவதற்கான பணிகளைச் செய்யாமலும் இருந்த சபைகள் தங்களிடமிருந்து பிரசங்கியார்களை அனுப்பாதவர்கள்.

வாலிபர்கள் பிரசங்கிக்கும்படியாக விஷேசித்த பயிற்சி அளிக்கக் கூடிய பள்ளிகளுக்குச்சென்று பயிற்சி பெறலாம். சக வாலிபர்களோடு சேர்ந்து விடுதியில் தங்கி வேத வகுப்புகளுக்குச் சென்று இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படிக்கக்கூடிய இடமாக அது இருக்கும். அவர்களுடைய ஆசிரியர்கள் பிரசங்கியார்களாக இருப்பார்கள். அங்கே இருக்கும்போது தங்கள் ஆசிரியர்களோடும் மற்ற பிரசங்கியாரோடும் பிரசங்கிக்கிற வாய்ப்புகளைப் பெறலாம். இந்த விதமான பள்ளிகளில் படிப்பதினால் ஒருவர் திறமையான பிரசங்கியாராக வரமுடியாது. ஒவ்வொரு மாணவன் மீதும் அநேக பொறுப்புகள் சார்ந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் வெற்றிபெறும்படியாக மிகவும் கடினமாக தாங்கள் கற்றவைகளின்படி உழைக்க வேண்டும். மிகவும் சிறப்பாக செயல்படும்படி கற்று அவைகளை பயன்படுத்த வேண்டியது அவர்களைப் பொருத்ததே.

சபையானது வளர்ச்சியடையாத நிலையில் தேவைப்பட்டபடி தங்கள் பிரசங்கியார்களுக்கு பொருளாதாரரீதியில் உதவி செய்ய முடியாத நிலையில் தங்களிடமிருந்து பயிற்சி பெற்று வரும் இளம் பிரசங்கியார்களுக்கு அவர்கள் பொருளாதாரரீதியில் உதவி செய்யமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்யலாம்? ஒரே மாற்றுவழி மேல் நாடுகளிலிருந்து உதவியைப்பெறுவது. இதிலும் அநேக பிரச்சனைகள் இருப்பதால் இதுவே ஒரு சரியான தீர்வாகாது. கர்த்தரை நேசித்து அவருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்துக் கொண்டு அதே சமயத்தில் உதவியும் பெறுவதற்கு அநேக வழிகள் உண்டு. அப்படிப்பட்ட இளைஞர்கள் உலக சம்பந்தமான வேலைகளில் இருந்து கொண்டு சபையானது அவர்களுக்கு முழுமையாக உதவியளிக்கும்வரை பிரசங்கம் செய்யலாம். பின்பு சபையின் முழுஉதவியோடு முழுநேர ஊழியத்தைச் செய்யலாம்.

சபையானது வளர்ச்சியடையும்போது அதனுடைய அநேக அங்கத்தினர்களோடு ஒரு கிறிஸ்தவ கல்லூரியை நிறுவி குறிப்பிட்ட காலத்தில் இந்த விதமான அநேக கல்லூரிகள் வாலிப ஸ்திரீகளுக்கும் பயிற்சியும் கல்வியும் அளிக்கலாம். இடைப்பட்ட காலத்திலே ஒவ்வொரு பிரசங்கியாரும், சபையும் சுவிஷேசத்தை பிரசங்கிக்கும்படி, இந்த விதமான பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கும்படியான அவசியத்தை உணர்ந்து தங்கள் வாலிபர்களை இதற்காக தங்களால் ஆனதை செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

வாலிபபிரசங்கியார்களாகி தீமோத்தேயு, தீத்து மற்றும் அநேகரோடு பவுல் எப்படி பணிசெய்தார் என்பதை கவனித்துப் பாருங்கள் 1,2 தீமோத்தேயு, தீத்து ஆகிய புஸ்தகங்களில் நன்றாக படித்துப் பாருங்கள்.

## பாடம் -27

# பிரச்சனைகளை சமாளிப்பது

பிரசங்கியார் சபையினுடைய தலைவரோ அல்லது மூப்பரோ அல்ல என்றாலும் அநேக மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுள்ள படியால் பலர் தங்கள் பிரச்சினைகளை அவரிடத்தில் சொல்லுவார்கள். அவர் எல்லாப்பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கவோ சீர் செய்யவோ முடியாது. அவரும் மனிதன் தானே அவருக்கும் பிரச்சனைகள் உண்டு. இருப்பினும் அவர் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் ஆலோசனைகளைச் சொல்லி அதன் மூலமாக மக்கள் தங்கள் பிரச்சனைகளை சீர்படுத்த உதவ முடியும்.

முதலாவதாக ஊழியர்களுக்கு தங்கள் சக பிரசங்கியார்களோடு பல சமயங்களில் பிரச்சனைகள் இருக்கும். ஒருவர் அல்லது மற்றவர் மீது நிறைய பகையும் பொறாமையும் அடிக்கடி ஏற்படும். இது ஒருவர் மற்ற வரைக்காட்டிலும் அதிமான ஆத்துமாக்களை உடையவராக இருப்பதின் மூலமோ, அதிகமான பணம் வைத்திருப்பதனாலோ, வெளிநாட்டுத் தொடர்புகளாலோ, இன்னும் இது போன்ற பல காரணங்களாலோ பிரச்சனை ஏற்படலாம். சில சமயங்களில் ஒருவர் மேல் நாட்டுக்குச் சென்று வரலாம். மற்றவருக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமற்போகலாம். போட்டி, ஒற்றுமையற்ற தன்மை, தற்பெருமை கொண்டு தன்னைப்பற்றியே பேசலாம் இன்னும் இதுபோன்ற பல காரணங்கள் போராட உண்டு. என் பிரசங்கி நண்பனே, இவைகளில் எதையாகிலும்குறித்து நீ குற்ற முள்ளவனாக இருந்தால் உடனே அதிலிருந்து மனம் திரும்பவேண்டும். உன்னுடைய சக பிரசங்கி நண்பன் எதிலாகிலும் குற்றமுள்ளவராக இருந்தால் அவரும் மனம் திருந்தவேண்டும். இந்த விதமான குற்றங்கள் இருந்து கொண்டேயிருந்தால் நீங்கள் எப்படி உங்கள் சொந்த சகோதரர்களோடு வாழப்போகிறீர்கள்? இப்படிப்பட்ட சின்ன சின்ன காரியங்களை விட்டுவிட்டு உங்கள் வேலைகளில் கவனம் செலுத்தி சரியானதைச் செய்ய வேண்டும். நீங்கள் எப்பொழுதும் சரியானதையே செய்யும்படி முயற்சித்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் தாமாகவே மறைந்துவிடும். பிரசங்கியார்கள் சிலவற்றில் ஒத்துப்போகாமலிருப்பது உண்மைதான் யூதர்கள், புறஜாதியார் மத்தியில் பேதுரு சமமாக நடந்துகொள்ளாததைப் பற்றி பவுல் ஒருமுறை அவரைச் சீர்படுத்த வேண்டியிருந்தது (கலாத்தியர் 2:11,12). மேலும் யோவான், மாற்கு தங்களுடைய இரண்டாவது சுவிசேஷப்பிரயாணத்தில் உடன் வருவதா

இல்லை என்பதைப்பற்றி பவுலும், பர்ணபாவும் ஒத்துப்போகவில்லை. பவுலும் சீலாவும் இணைந்து செல்வதென்றும் பர்னபாவும், மாற்கும் சீப்புருதீவுக்குத் திரும்பிச் செல்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 15:36-45).

அவர்கள் எல்லோரும் சகோதரர்களாகவே தாங்கள் தீர்மானித்தபடி தங்கள் ஊழியங்களைச் செய்தார்கள். ஆகவே நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் நீங்கள் சரியானதைச் செய்து உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுங்கள். இன்னுங்கூட எங்கே ஐக்கியமாக ஊழியத்தில் கூட்டுசேர்ந்து செய்யமுடியும் என்று பாருங்கள். அப்படிச் செய்வீர்களென்றால் அதனால் ஏற்படும் வளர்ச்சியைப் பார்த்து ஆச்சரியப்படுவீர்கள்.

இரண்டாவதாக சபை அங்கத்தினர்கள் உங்களுக்குப் பிரச்சனைகளைக் கொண்டு வருவார்கள். அதாவது திருமணத்தைப்பற்றி அதில் ஏற்படும் விவாகரத்தைப்பற்றி நீங்கள் மத்தேயு 19:9, ரோமர் 7 மேலும் திருமண வாழ்க்கையைக் குறித்து வேதத்தில் உள்ள மற்ற வசனங்களையும் படித்து, ஒரு கணவனுக்கு ஒரு மனைவி மட்டுமே இருக்க வேண்டும், யாராவது துரோகம் செய்து உண்மையற்றவர்களானால் துரோகம் செய்யாதவர்தான் மறுபடியும் மணம் செய்து கொள்ளலாம் என்பதை தேவன் வலியுறுத்தினார் என தெளிவாக போதிக்க வேண்டும். ஆனால் திருமணம் தொடர்பாக அநேக பிரச்சனைகளை நீங்கள் கேள்விப்பட நேரிடலாம். எல்லாவற்றையும் கேட்டுவிட்டோம் என்று நீங்கள் நினைக்கும் போது இன்னொன்று வந்துவிடும்.

வேதாகமம் இதைக்குறித்து என்ன போதிக்கிறது என்பதில் நீங்கள் தெளிவாயிருந்து அதன்படி மட்டுமே அவர்களுக்கு ஆலாசனை சொல்லுங்கள்.

சட்டப்படி திருமணங்களை நடத்திவைப்பதைப் பற்றி எப்படி? திருமணத்திற்கான சட்டப்பூர்வமான தேவைகள் என்ன என்பதைப் பார்த்து அதன்படி திருமணங்களை நடத்தவேண்டும். மரித்தோரை அடக்கம்பண்ண ஒரு இடம்கேட்பார்கள். சாதாரணமாக கல்லறைப் பொறுப்பாளரைச் சந்தித்து அதற்குரிய பணத்தைச் செலுத்தி சபையில் மரித்தோரை அடக்கம் பண்ண ஏற்பாடு செய்யலாம்.

அநேக அங்கத்தினர்கள் சபைக்கு முன்பாகவும் தேவனுக்கு முன்பாகவும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மீட்டமைக்கப்பட மிகவும் சிரமப்படுகிறார்கள் (யாக்கோபு 5:16). பொது இடங்களில் ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தால் என்ன செய்யவேண்டும் என்று வேதம் சொல்லுகிறதோ

அதன்படிச் செய்ய வேண்டுமென்று நீங்கள் போதிக்க வேண்டும்.அப்படி அவர் சீர்பட மறுத்தால் என்ன செய்வது? அவருடைய வாழ்க்கையை சீர்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.கடைசி கட்டமாகத்தான் ஒருவரை விலக்க வேண்டும் (மத்தேயு 18:15-17).

சட்டத்தைமீறி செயல்படும்படி ஒருவருக்கு லஞ்சம் கொடுப்பதைப் பற்றி என்ன? அது குற்றம். ஒருதேசத்தின் சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமென்று வேதம் போதிக்கிறது (ரோமர் 13:17). அநேக கையூட்டுகள், செய்யப்படுகின்ற சேவைகளுக்காகவே கொடுக்கப்படுகின்றன. அவைகள் அப்படியே தொடர்ந்து பாரம்பரியமாகிவிட்டன.

ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள் வரதட்சனை கொடுப்பதைப்பற்றி எப்படி கையாள்வீர்கள்? ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்கள் இந்த நாட்டில் நூற்றுக் கணக்கான வருடங்களாக கடைபிடிக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதில் சந்தேகமில்லை. வரதட்சனையைப் பொறுத்தமட்டில் அது சட்டவிரோத மாக்கப்பட்ட ஒன்று. இருந்தாலும் அநேகர் அதைச் செய்கிறார்கள். தவறாகவும் பயன்படுத்துகிறார்கள். அது கொடியது, மிகவும் கீழ்த்தரமானது அதை கடைப்பிடிக்கக்கூடாது.

பொய்சொல்வது எப்போதாவது நியாயமா? இல்லை. நாம் எல்லாவற்றிலும் உண்மையாக இருக்க வேண்டுமென்று வேதவார்த்தை சொல்கிறது (ரோமர் 12:7, கொலோசேயர் 3:9).

ஒருவர் உங்களுக்கு எதையாகிலும் செய்தாலோ அல்லது கொடுத்தாலோ அவர்களுக்கு எப்படி நன்றி சொல்லுவீர்கள். அநேகர் யாருக்காவது நாம் நன்றி சொன்னால் அவர்களுக்கு கடமைப்பட்ட வர்களாகிவிடுவோம் என்று கருதுகின்றனர். நன்றியுள்ளவராயிருப்பது என்பது கிறிஸ்தவக்கடமை (கொலொசேயர் 3:15-17; 1 தீமோத்தேயு 2:1). ஏதாவது ஒன்றுக்கு நன்றி சொல்வது என்பது ஏதோ மேல் நாட்டுப்பழக்கமல்ல. அது எல்லோராலும் கற்று செயல்படுத்தப்பட வேண்டியதே. நீங்கள் ஒருவருக்கு நன்றிசொல்ல முடியாதென்றால் அவரிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ளக்கூடாது.

கடன் வாங்குவதைப்பற்றி என்ன? நாம் யாருக்கும் எதிலும் கடன்படக்கூடாதென்று பவுல் சொல்லுகிறார். அப்படியென்றால் நாம் யாரிடமிருந்து கடனே வாங்கக்கூடாது என்றல்ல. நாம் அதைத் திரும்பிக் கொடுக்க வேண்டுமென்பதை நன்றாகப்புரிந்து கொண்டு, வாங்கியபின் அதை அப்படியே கொடுக்க வேண்டும். நாம் கடன் வாங்கி அதை திருப்பிக்கொடுக்க மறுக்கக்கூடாது. அநேகர் தங்கள் நண்பர்களிடம் பண விஷயத்தில் சிக்கிக்கொள்கிறார்கள். இது தவறு. தவிர்க்கப்படவேண்டும்.

ஒருவர் கர்த்தருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்? அவனவன் திராணிக்குத் தக்கதாகக் கொடுக்க வேண்டுமென்று பவுல் 1 கொரிந்தியர் 16:2ல் சொல்கிறார். நாம் மேலான பிரமாணத்தின் கீழ் வாழ்வதால் யூதர்கள் கொடுத்ததைப்போல பத்தில் ஒரு பங்கு அதற்கு மேலும் கொடுக்க வேண்டுமென்று ஒருவர் சொல்கிறார். நாம் எப்படி அதைச்செய்ய முடியும். கர்த்தருக்கு எல்லாவற்றிலும் முதலிடம் கொடுப்பதாலேயே எல்லோரும் அப்படிச் செய்வார்களென்றால், தன்னுடைய எல்லா வேலைகளையும் செய்வதற்கு சபையில் அதிக பணமிருக்கும். நீங்கள் காண்கிறபடி எல்லா விதமான பிரச்சனைகளும் கேள்விகளும் வருகிறது. ஒருவர் தேவன் என்ன சொல்லியிருக்கிறார், எங்கே வேதாகமம் சில காரியத்தைக் குறித்து ஆம் அல்லது இல்லை என கட்டாயப்படுத்தவில்லை என்பதை வேதாகமத்திற்குச் சென்று அறியவேண்டும். அதன்பின் அவர் தன்னையும் மற்றவர்களையும் நினைத்து நல்ல தீர்மானத்தை பயன்படுத்தவும், தன்னை மாதிரியாக நிறுத்தும்படியும் முயற்சி செய்யவேண்டும்.

## பாடம் - 28

# ஆத்தும ஆதாயம் செய்தல்

பிரசங்கியாரும், சபையின் எல்லா அங்கத்தினர்களும் உலகமெங்கம் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளையாயிருக்கிறது (மாற்கு 16:15). இந்தப் பணி போதிப்பதின் மூலமாகவும் கிறிஸ்துவினுடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலைப் பற்றி அறிவித்து (ரோமர் 10:17) அதை மக்கள் விசுவாசிக்கும்போது அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக கர்த்தர் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்படியும்படி ஊக்கப்படுத்த வேண்டும் (அப்போ 2:38) இதை வேறு விதமாகச் சொல்வதென்றால் கர்த்தருடைய கட்டளை உள்ளிட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின்மூலம் ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடமாக மாற்றி அவர்களுடைய சிந்தனை, அவர்களுடைய செயல்கள், மேலும் அவர்கள் பாவியாய் இருந்த நிலையிலிருந்து இரட்சிக்கப்படும்படி உதவுகிறோம் (அப்போஸ் 3:19).

உலகம் மிகப்பெரிய இடம் ஆகவே ஒரு சராசரி கிறிஸ்தவனோ அல்லது பிரசங்கியாரோ கூட எப்படி உலகமெங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும்? உண்மையாகவே அவர்கள் தாங்கள் இருக்கின்ற இடத்திலேயே தொடங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் போதிக்கவும் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள் குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள் மேலும் நகரங்கள் கிராமங்கள் மற்றும் அவர்களைச் சுற்றி இருக்கின்ற யாவருக்கும் போதிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து செய்யும் பொழுது அவர்கள் எண்ணிக்கையிலும் பெலத்திலும் வளர்ந்து அதிகமதிகமான மக்களை சென்றடையும் படி சென்று கொண்டே இருக்கின்றார்கள். இப்படித்தான் சுவிசேஷம் இறுதியாக பூமியனைத்தையும் சென்றடைகிறது.

பிரசங்கியார் சபையினுடைய மற்ற அங்கத்தினர்களைக் காட்டிலும் தன்னுடைய முழு நேரத்தையும் கர்த்தருடைய பணிக்குக் கொடுப்பதால் அவருடைய பணி ஆத்துமாக்களை முழுமையாக மாற்றுவதில் எப்படி இருக்கின்றது என்பதைப் பற்றிப் பார்போம். இயற்கையாகவே முதலாவது அவர் முழுமையாக மனமாற்றம் அடைந்து தான் போதிப்பதிலே முழு நம்பிக்கை கொண்டிருந்தால்தான் சுவிசேஷத்தை கேட்கிற யாரையாகிலும் கிறிஸ்துவினிடமாக மனமாற்ற மடையும்படி ஊக்கப்படுத்தமுடியும்.

முதலாவது ஒருவர் மற்றவர்கள் இரட்சிக்கப்படும்படியான சத்தியத்தை நன்றாக புரிந்து கொண்டிருக்க வேண்டும். முதலாவது ஒருவர் சத்தியத்தைக் கேட்க வேண்டும் ஏனென்றால் விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதனாலே வரும் (ரோமர் 10:17). ஒருவர் தேவனையும் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதையும் கண்டிப்பாக விசுவாசிக்கவேண்டும் என்பதை பிரசங்கியார் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால் விசுவாசமில்லாமல் தேனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரே 11:6; யோவான் 14:1). ஒருவர் தன்னுடைய எல்லா பாவங்களையும் விட்டு முற்றிலும் மனந்திருந்தியிருக்க வேண்டுமென்பதை அறிந்திருக்க வேண்டும். மனந்திரும்புதல் இல்லாவிட்டால் ஒருவர் அழிந்து போவார் (லுக்கா 13:3). மேலும் தேவன் எங்குமுள்ள மனிதர்யாவரும் மனந்திரும்பவேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்போஸ் 17:30). பரலோகத்திருக்கிற பிதாவுக்கு முன்பாக கிறிஸ்து ஒருவனை அறிக்கை செய்யவேண்டுமென்றால் அவன் இந்த பூமியிலே மற்றவர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும் (மத்தே 10:32). மேலும் ஒருவர் கண்டிப்பாக ஞானஸ்நானம் பெறவேண்டும். அதாவது பாவ மன்னிப்பு அல்லது ரட்சிப்புக்கென்று தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்படவேண்டும்.

ஒருவர் இந்த உண்மைகளையெல்லாம் வேத வாக்கியங்களின் படியும் அப்போஸ்தலர்களின் நடபடிக்கையில் காணப்படுகின்ற இரட்சிக்கப்பட்ட மாதிரிகளிலே சம்பந்தப்பட்ட மக்கள் மீட்கப்படும்படி தேவனுக்கு எப்படி கீழ்ப்படிந்தார்கள் என்பதையெல்லாம் அறிந்து வைத்திருப்பதோடு இந்த சத்தியத்தை யாருக்குப் போதிக்கின்றாரோ அல்லது யாருக்கு பிரசங்கிக்கின்றாரோ அவர்களுடைய மனங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் விதத்தில் போதிக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமானால் அவர் முயற்சி எடுத்துப் பல இடங்களுக்கச் சென்று பலரை சந்தித்து வேதத்தை அவர்களுக்குப் போதிக்கும்படியான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். பிரசங்கம் செய்வதிலும் கூட இதே முறையே சரியாகும். அவர் சபையிலே கூடிவருகின்ற மக்களுக்கு பிரசங்கிக்கும் படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அதுபோலவே பல கூட்டங்களிலும் பிரசங்கிக்கும்படி ஒழுங்கு செய்யவேண்டும். இவைகளை செய்யும்படியான வாய்ப்புகள் பிரசங்கியார் எவ்வளவு பேருக்கு பிரசங்கிக்க முடியுமோ, அது அவருடைய வாஞ்சையோடு எடுக்கும் முயற்சிகளைப் பொறுத்தது.

ஆனால் பிரசங்கியார் கர்த்தருடைய சபையைப்பற்றியும் அது எங்கே துவங்கியது என்பதைப் பற்றியும் எப்பொழுது துவங்கியது என்பதைப்

பற்றியும் யார் அதைக்கட்டியது என்பதைப் பற்றியும் எத்தனை சபைகள் இருக்கின்றன அவற்றின் பெயர், அஸ்திபாரம், அதன் தலைவர் யார்? அதனுடைய இரட்சகர் யார்? என்பன போன்ற உண்மைகளைப் பற்றியும் பிரசங்கியார் மிகத்தெளிவாக புரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துவோமாக. கிறிஸ்து சபையை (மத்தேயு 16:18) எருசலேமிலே கட்டினார். சுமார் கி.பி.33ம் வருடத்திலே கட்டினார் என்பது உண்மை (அப்போ 2) . அவர் ஒரே சபையைக் கட்டினார் (எபேசியா 4:1-6). அது கிறிஸ்துவின் பெயரையே தரித்ததாயிருக்கிறது (ரோமர் 16:16). அதின் அஸ்திபாரம் கிறிஸ்துவே (1கொரி 3:11). கிறிஸ்துவே அதன் தலைவராய் இருக்கிறார் (கொலோசேய் 1:18). மேலும் கிறிஸ்துவே அதன் ரட்சகராய் இருக்கிறார் (எபேசியர் 5:23). ஒருவர் பிரிவினை சபையாரின் போதனைகளும் அவர்களுடைய சபைகளும் தேவவசனங்களின் படி எப்படி தவறு என்பதையும் பரலோகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் கிறிஸ்துவின் சபையிலே அங்கங்களாக இருந்து இரட்சிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதையும் தேவனுடைய வார்த்தைகளின் படி நிருபிக்க வேண்டும். கிறிஸ்து அவருடைய சபையிலே இரட்சிக்கப்பட்டவர்களைச் சேர்த்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். (அப்போஸ் 2:47). சபை இரட்சிப்பதில்லை ஆனால் கிறிஸ்து இரட்சிக்கிறார். ஆகவே அவர் சபையை இரட்சிக்கிறார் அதனுடைய பொருள் என்னவென்றால் ஒருவர் இரட்சிக்கப்படவேண்டுமானால் கிறிஸ்துவின் சபையிலே இருக்க வேண்டுமென்பதே.

மேலும் தொடர்ந்து பார்ப்போமானால் தொழுகையை குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதையும் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய திருவிருந்தில் பங்குகெடுக்கும்படி கர்த்தருடைய மக்கள் கூடிவரவேண்டும் என்பதையும் (அப்போஸ் 20:7), அவர்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும்படியாகவும் (2 தீமோத் 2:15), அவர்கள் தங்கள் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளும்படியாகவும் (அப்போஸ் 2:42), அவர்கள் வாயினாலே மட்டும் தேவனை துதித்துப்பாடும் படியாகவும் (எபேசியர் 5:19. கொலோ 3:16) எபிரேயர் 13:15) மேலும் தேவனுடைய ஜனங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக வாரத்தின் முதல் நாளிலே கொடுக்கும்படியாகவும் ( 1கொரிந்தியர் 16:2) பிரசங்கியார் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கின்ற மக்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கை உலகம் கொடுக்கக் கூடியதை விட அதிகமாக கொடுக்கும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதித்தில் பிரசங்கிக்க வேண்டும்.

அவர்கள் ஒருநாள் மரித்து தேவனுடைய நியாயசனத்தின் முன்பாக நிற்க வேண்டும். தேவனை சந்திக்க வேண்டும், நித்தியத்தை பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ கழிக்க வேண்டுமென்பதை கேட்கின்றவர்கள் தங்களை அப்படிப்பட்ட நிலையை சந்திக்கும்படி ஆயத்தப்படுத்த வேண்டும் (1யோவான் 2:15-17; கொலோ 3:17; எபிரேயர் 9:27; மத்தேயு 25:16).

கிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்களை வழிநடத்த வேண்டுமென்றால் பிரசங்கியார் பலவிதமான தவறுகளுக்கு பதில் அளிப்பதோடு அநேக சத்தியங்களையும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். இது அதிகமான படிப்பும் உழைப்பும் தேவைப்படும் ஒன்றாகும் அதனுடைய அர்த்தம் என்னவென்றால் இரட்சிப்பை இழந்து போன மக்களைக் குறித்து கருத்தான கரிசனையோடு அவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டியதின் அவசியத்தை உணரும்படியாகச் செய்ய வேண்டும். தான் தொடர்பு கொண்ட மக்களைக் குறித்த கவலை இல்லாமல் சோம்பலாகவும் கரிசனை இன்றியும் கவலையின்றியும் தன்னுடைய நேரத்தையெல்லாம் அலுவலகத்திலேயே செலவிடுகின்றவராகவும் இருந்தால் இந்தப்பணியைச் செய்ய முடியாது. மேலும் அவர் வாக்கு வாதம் பண்ணுகிறவராகவும் காரியங்களைக் குறித்து தேவையில்லாமல் பேசுகிறவராகவும் தான் சந்திப்பவர்களுடன் எல்லாம் சண்டையிடுகிறவராகவும் இருந்தால் இந்தப்பணியைச் செய்ய முடியாது. மாறாக அவர் ஜனங்கள் மீது அன்புள்ளவராகவும் தன்னுடைய பணியை செய்வதில் சந்தோஷமுள்ளவராகவும் ஆத்துமாக்களைச் சந்தித்து போதித்து அவர்களை கிறிஸ்துவினிடத்தில் திருப்பவேண்டும் அவர் வெற்றியுள்ளவராக இருக்க விரும்பினால் இருக்கலாம். அவர் தன்னுடைய பணியை சரியாகச் செய்வாரென்றால் கர்த்தர்அவரை ஆசீர்வதிப்பார். அவருடைய முயற்சிகள் ஆத்துமாக்களை கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தும்.

பாடம் - 29

# புதிய சபைகளை ஸ்தாபித்தல்

உலகத்தின் ஒரு பாகத்திலே சபையானது துவக்க நிலையில் இருந்து வளர்ந்து வரும்போது அது சிறப்பாக வளர்ந்த நிலையில் அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தும் உற்சாகமுள்ள பிரசங்கியாரும் சுவிசேஷகர்களும் புதிய சபைகளை ஸ்தாபிப்பதிலும் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும். ஒரு பெரு நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பிராந்திய சபை இருக்க வேண்டும் அதே விதமாகத்தான் பக்கத்து நகரங்களிலும் கிராமங்களிலும் கூட சபைகள் இருக்க வேண்டும். அதன் பொருள் என்னவென்றால் முன்னமே இருக்கக் கூடிய சபையில் ஊழியம் செய்யும் படியாக நிறைய பிரசங்கியார்கள் இருக்க வேண்டும். ஆனால் புதிய சபைகளை தொடங்கும்படி மற்ற இடங்களுக்கும் செல்லவேண்டும். ஒவ்வொரு ஆத்துமா இரட்சிக்கப்படுவதோடும் ஒவ்வொரு புதிய சபை ஸ்தாபிக்கப்படுவதோடும் அவர்கள் தங்கள் பணிக்கு புதிய வேகத்தைக் கூட்டுவதோடும் நடக்கின்ற வேலைகளைத் தாங்களாகவும். செய்யலாம் உதாரணமாக ஒரு பிரசங்கியாரைத் தாங்குவதற்கு ஆயிரம் அங்கத்தினர்கள் தேவையில்லை அல்லது சில நூறு அங்கத்தினர்களோ அல்லது நூறு அங்கத்தினர்களோ கூட தேவையில்லை உண்மையாகவே அதாவது வேதாகமம் போதிக்கிறபடி கொடுத்தால் பிரசங்கியாரைத் தாங்குவதற்கு அதிக எண்ணிக்கையுள்ள அங்கத்தினரைக் கொண்ட பிராந்திய சபைதான் உதவி செய்ய போதுமான நிதி கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. அங்கத்தினர்கள் அவர்கள் பிரசங்கியாருக்கு உணவு, உடை போன்றவைகளை அளிப்பதன் மூலம் தாங்கலாம். நமக்கு உண்மையாகவே சுவிசேஷத்தைப் பரப்பும்படியாக உற்காசமுள்ள ஆவி இருக்குமானால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பரப்புவதற்கான காரியங்கள் நடைபெறத் துவங்கும்.

ஒரு பிரசங்கியாராக நீங்கள் ஆத்துமாக்களை கிறிஸ்துவிடமாக அல்லது கிறிஸ்துவிற்குள் இரட்சிக்கப்டும்படியாக நடத்துவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இருக்கின்ற பகுதியிலே சபையானது ஸ்தாபிக்கப்படாமலிருந்தால் அங்குள்ள கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து ஒரு பிராந்திய சபையை உருவாக்க வேண்டும். நீங்கள் ஒரு பிராந்திய சபையிலே ஊழியம் செய்து கொண்டிருந்தாலும் கூட புதிய இடத்திலே சபையைத் தொடங்கும்படியான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

சுவிசேஷப்பணி என்பது சபையினுடைய உயிர் மூச்சாக இருக்கின்றது. அது தன்னுடைய அங்கத்தினர்களுக்கு செய்யும் படியான

ஊழியப்பணிகளையும், அது இருப்பதற்கான நோக்கத்தையும் பிரயாசப்படும்படியான ஒரு இலக்கையும் கொடுக்கிறது. நாம் வாழ்வது மற்றவர்கள் வாழும்படியாக உதவுவதற்கே. பிரசங்கியார்களும், ஊழியத்திற்கென்றே தங்களை அர்ப்பணித்து பல இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்பவர்களும் இதில் முதன்மையாக இருந்தாலும் எல்லா அங்கத்தினர்களும் இதைத் தாங்க வேண்டும் இதிலே ஒரு பங்கிருந்து அது கொண்டுவரும் பலனைக் காணும் போது மகிழ்ச்சியும் சந்தோஷமும் உற்சாகமும் பெலமும் உண்டாகும். நீங்கள் அப்போஸ்தலரின் நடவடிக்கை புஸ்தகத்தைக் கவனமாக படித்துப்பார்த்தால் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் நகரத்திலே சபை தொடங்கியதைக் காணலாம். நீங்கள் தொடர்ந்து படிக்கும் பொழுது மற்ற நகரங்களுக்கும் பகுதிகளுக்கும் சுவிசேஷமானது கொண்டு செல்லப்பட்ட போதும் மக்கள் கீழ்படிந்தபோதும் அந்தப்பகுதியில் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. பவுலும் அவரோடு கூட சுவிசேஷப் பிரயாணம் சென்றவர்களும் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் மேலும் அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபையானது ஸ்தாபிக்கபட்டது. அவர்களோடு மட்டுமல்லாமல் மற்ற அப்போஸ்தலர்களும் மேலும் பல பிரசங்கியார்களும் பல இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது அப்படியே நிகழ்ந்தது. அது அதிசீக்கிரமாக இந்த சுவிசேஷப்பணி வானத்தின் கீழ் உள்ள சகல சிருஷ்டிகளுக்கும் முப்பது ஆண்டுகளுக்குள் சென்றடைந்தது (கொலோ.1:23). நூற்றுக்கணக்கில் மேலும் பல ஆயிரக்கணக்கில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

அந்நாட்களிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும் கிறிஸ்துவின் சபைகளை ஸ்தாபிப்பதும் எளிதானதாய் இல்லை. அவர்கள் பலவிதமான எதிர்புகளை சந்தித்தார்கள். அநேகர் துன்பப்படுத்தப்பட்டார்கள் பலர் தங்கள் விசுவாசத்திற்காக கொல்லப்பட்டார்கள் ஆனால் இவைகள் எல்லாம் அவர்களுடைய பணியை நிறுத்த முடியவில்லை. இந்த விதமான எதிர்ப்புகள் சுவிசேஷப்பணியை அனல் மூட்டி உலகமெங்கிலும் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்க ஏதுவாய் இருந்தது. மறுபடியும் இப்படிப்பட்டவைகளைக் குறித்து அப்போஸ்தலர் புஸ்தகத்தில் நிறைய படிக்கலாம். பேதுருவுக்கும் யோவானுக்கும் (அப்போஸ்தலர் 3:4) நிகழ்ந்தது ஸ்தேவான் கல்லெறியுண்டது (அப்போ 7) யாக்கோபு கொல்லப்பட்டது. (அப்போஸ்தலா 21) இன்னும் பவுல் பட்ட எல்லா துன்பங்களைப்பற்றியும் பார்க்கலாம்.

அவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படியாக அதிக வசதிகள் இருந்ததில்லை பிரசங்கியார்கள் சம்பளம் பெறும் முறையில் வேலை

செய்யவில்லை இருந்த போதிலும் சிலர் தாங்கினார்கள். நிச்சயமாக அவர்களுடைய செலவுகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வெளிநாடுகள் அன்று இல்லை. அவர்களுக்கு சபை கூடிவரும்படியான கட்டடங்கள் இல்லை. வீடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் அல்லது ஜனங்கள் கூடிவருகின்ற பொது இடங்களிலும் அவர்களுக்குப் பிரசங்கியார் பயிற்சிப்பள்ளிகளோ கிறிஸ்தவக் கல்லூரிகளோ மேலும் நாம் இன்றைக்கு இருக்கவேண்டும் என்று நினைக்கின்ற வசதிகளோ அவர்களுக்கு இல்லை. இருப்பினும் அவர்கள் வெளியே புறப்பட்டுச் சென்று சுவிசேஷப்பணியை செய்தார்கள்.

இப்படி இருந்த போதிலும் கூட, அவர்களுக்கு என்ன இருந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களுக்கு தேவன் பேரில் விசுவாசமும் மனிதர்களுடைய ஆத்துமாக்களிலும் கர்த்தரிலும் அன்பும், அவர்களுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடிய ஆர்வமும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்கிற தீர்மானமும் இருந்தது. இந்தப் பணியைச் செய்யும்படியாக துன்பப்படவும் அவமதிக்கப்படவும் அல்லது எதையும் சந்திக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்கள் இல்லை என்ற பதிலை சொல்ல விருப்பமில்லாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் இந்தப் பணி செய்யப்படமுடியும் என்று நம்பினார்கள் அப்படியே செய்தார்கள். அவர்கள் அதை நிறுத்தவோ, செய்யாமலிருக்கவோ விட்டுவிடவோ, பின்னிட்டுப் போகவோ, சாக்குப்போக்குகளைச் சொல்லவோ அல்லது தொடர்ந்து செயல்படாமல் இருக்கவோ இல்லை. அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்கள் நமக்கு எப்பேர்பட்ட மாதிரிகளை வைத்திருக்கிறார்கள்! அவர்கள் உலகத்தை மாற்றினார்கள். அதன் நன்மைகளையெல்லாம் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக் கின்றோம்.

இன்றும் கர்த்தர் நமக்கு சொல்லிக்கொண்டிருப்பது என்னவென்றால் நீங்கள் உலகமெங்கும்புறப்பட்டுப்போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதே (மாற்கு 16:15-16). இன்னுங்கூட மக்கள் இழந்துபோன நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் தான் இந்தப்பணியைச் செய்ய கட்டளையிடப்பட்டிருக்கிறோம். நீங்கள் அப்போஸ்தலர் நடபடிக்கைப் புஸ்தகத்தை மறுபடியும் படித்துப் பார்த்தால் அதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அப்போஸ்தலர்களும் அவர்களால் மனமாற்றப்பட்டவர்களும் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கே கூடி இருந்த மக்களில் விசுவாசித்தவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனம் திருந்தி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து தங்கள்

பாவங்கள் கழுவப்படும்படியாக ஞானஸ்நானம் பெற்றார்கள். கர்த்தர் அவர்களை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்தார்(அப்போஸ் 2). நீங்கள் கவனிக்கிறபடி வேதவசனங்கள் ஆயிரக்கணக்கானோர் கீழ்ப்படிந்ததையும், அநேகர் சபையில் சேர்க்கப்பட்டதையும் அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி அடைந்ததையும், சொல்லுவதைக் காணலாம். அதன் விளைவாக இந்தப் பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொருமுறையும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாக அங்கே சபையானது ஸ்தாபிக்கப்படுகிறது. பொதுவாக இப்படிப்பட்ட சபைகள் சில அங்கத்தினர்களோடு தொடங்குகிறது. அது என்ன வென்றால் அவர்கள் ஒவ்வொரு வாரமும் தொழுது கொள்ளும்படியாக கூடி வருவார்கள். சபையானது எண்ணிக்கையிலே பெருகும் போது தகுதியுள்ளவர்கள் இருந்தால் அவர்கள் மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் சபைக்குத் தலைமை ஏற்று நடத்தும்படி அங்கத்தினர்களால் நியமிக்கப்படுகிறார்கள். பிரசங்கியார்களும், போதகர்களும், மற்றபொறுப்புகளை ஏற்று செயல்பட்டவர்களும் இருந்தார்கள் அந்த வண்ணமாக அவர்கள் வளர்ச்சியடைந்து சுவிசேஷத்தை தங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிரசங்கித்து மற்ற இடங்களில் கிறிஸ்துவின் சபைகளை ஸ்தாபித்தார்கள். இப்பொழுது இதுவே தேவையாய் இருக்கிறது. நீங்கள் இருக்கின்ற இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள்ளாக நடத்தி சபையை ஸ்தாபியுங்கள் கீழ்ப்படிகிறவர்கள் தொழுது கொள்ளத் தொடங்கி தாங்கள் இருக்கின்ற இடங்களில் ஊழியம் செய்யலாம்.

உலகத்தை சுவிசேஷமயமாக்கும்படி செயல்படுவதற்குத் தேவையான சகலத்தையும் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அதிக முக்கியமான பணம், கட்டிடம், போக்குவரத்து வசதிகள், இன்னும் அதிகமாக விசுவாசம், மிகுந்த ஆர்வம், அன்பு, தைரியம் மேலும் கர்த்தருக்கு ஊழியம் செய்து அவருடைய சுவிசேஷத்தைப் பரப்பும் படியான தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார். நீங்கள் அதைச் செய்ய முடியாவிட்டால் எந்த வகையில் கர்த்தருக்குப் பிரயோஜனமுள்ளவராக இருக்க முடியும்?

## பாடம் - 30
## பிரசங்கியாரின் இலக்குகள்

ஒரு பிரசங்கியார் தனக்கென்று இலக்குகளை அமைத்து ஊழியம் செய்யவேண்டும். வாழ்க்கை கொஞ்சக்கால மாத்திரமே. அதில் நாம் செய்து முடிக்க வேண்டியவைகள் ஏராளம். நீங்கள் எந்தவிதமான திட்டமும் இல்லாதிருந்தால், நீங்கள் இலக்குகளை அமைக்காமல் இருந்தால், நீங்கள் அதிகமாக எதையும் சாதிக்க முடியாது. நீங்கள் யாரோடும் போட்டி போடுகிறீர்கள் என்றோ அல்லது பேராசைப் படுகிறீர்கள் என்றோ இதற்கு அர்த்தம் அல்ல. உண்மை என்னவென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் உங்களால் முடியும் போது கர்த்தருக்கென்று எவ்வளவு செய்யமுடியுமோ (சாதிக்க) அவ்வளவு செய்ய வேண்டும் என்பதே. ஆகவே நீங்கள் உங்களுக்கென்று செயல்படும்படியான திட்டங்களை நியமித்து மிகச்சிறப்பானதை அடையும்படியாக செயல்படவேண்டும். நீங்கள் அதை விடவும் மிகச்சிறப்பாக செய்யமுடியும்.

உங்களுக்கு நான் சில இலக்குகளை ஊழியத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய தனிப்பட்ட இலக்குகளைப்பற்றி முதலாவது நாம் பேசலாம்.

முதலாவதாக, உங்கள் வேதத்தை நன்றாகப் படித்து ஆவிக்குரிய பிரகாரமாய் வளரவேண்டும் என்று தீர்மானியுங்கள். இதை நீங்கள் பலவழிகளில் செய்யலாம். இதை நீங்கள் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வேதத்தை வாசித்து கற்றுக்கொள்ளலாம். ஒரு பிரசங்கியார் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படிக்கலாம். உங்கள் சமய சார்பற்ற கல்விக்காக உங்கள் பகுதியிலுள்ள கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம். மேலும் உலகின் பல பாகங்களில் இருந்து சகோதரர்கள் நடத்துகின்ற அஞ்சல் வழி வேதாகம பயிற்சிகளில் சேர்ந்து படிக்கலாம். அவைகளில் சில கல்லூரிபாடத்திட்டத்தைப் போன்றது. உண்மையாகவே நீங்கள் முன்னேற விரும்பினால் உழைக்க வேண்டும். அதிலே நீங்கள் பணம்செலவு செய்ய நேரிட்டாலும் அது மிகவும் பிரயோஜனமான ஒன்றே.

இரண்டாவதாக, உங்கள் குடும்பத்திற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு வாரமும் ஒதுக்குங்கள் அந்த நேரங்களில் குடும்பத்தோடு ஒன்றாக வீட்டில் இருந்தோ அல்லது வெளி இடங்களுக்குச் சென்றோ செயல்படுங்கள் நீங்கள் சுற்றுலா செல்ல விரும்பலாம் ஒன்றாக கடைவீதிக்கு சென்றுவர விரும்பலாம் நண்பர்களையோ, உறவினர்களையோ பார்த்து வரலாம், உங்கள் குடும்பத்தை அலட்சியம் செய்கின்ற அளவுக்கு உழைத்தால் எல்லாம் பாதிக்கப்படும்.

மூன்றாவதாக, உங்களுடைய தனிப்பட்ட நேரத்தை ஞானமாக பயன்படுத்துங்கள் அதை வீணாக்காதீர்கள் நீங்கள் அதை திரும்பப் பெற முடியாது. நீங்கள் பிரசங்கியாராக இருக்கும் பட்சத்தில் கர்த்தருடைய பணிக்கு அப்பாற்பட்டு தனியாக உங்களுக்கென்று இலக்குகளை நியமிப்பது கடினமான ஒன்று தான் ஆனால் உங்களுடைய ஊழியத்திற்கென்று சில இலக்குகள் இங்கே.

முதலாவதாக, ஒவ்வொருவாரமும் நிகழ்ச்சிகளை உங்களுக்கென்று ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது நீங்கள் யாரை சந்திக்கப்போகிறீர்கள், எத்தனைபாடங்கள் எடுக்கப்போகிறீர்கள், எங்கே பிரசங்கம் செய்ய போகீறீர்கள் போன்றவற்றையும் இதற்கும் மேலாக செய்ய முடிந்தாலும் செய்யுங்கள். இல்லா விட்டால் திட்டமிட்டவைகளையாவது நிறைவேற்றுங்கள்.

இரண்டாவதாக, எத்தனைபேரை வருகின்ற மாதத்தில் நீங்கள் இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தப்போகிறீர்கள் என்கின்ற இலக்கை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். உங்களால் சந்திக்க முடியாத அளவுக்கு இலக்குகளை நியமித்து அவைகள் உங்களை அதைரியப்படுத்தும்படி விட்டுவிடாதீர்கள். நீங்கள் ஏற்படுத்தும் இலக்குகளை சந்தித்து வெற்றி பெறும்படியான நிலைகளை அமைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அந்த இலக்கைவிட அதிகமாக அடையும் பட்சத்தில் அடுத்த மாதத்தில்சற்று அதிகமாக திட்டமிடுங்கள். உங்களுக்கு எந்தவிதமான இலக்கும் இல்லாவிட்டால் செயல்கள் திசைமாறி அதை நீங்கள் அடையமுடியாமல் போகலாம். உங்களுக்கு நீங்கள் இலக்குகளை ஏற்படுத்துவதன்மூலம் அதிக முயற்சி எடுத்து செயல்படுவதற்கு அது ஒரு சவாலாக இருக்கும். முயற்சியுங்கள். அது சரியானபடி வேலை செய்யும் என்பதை நீங்கள் காண்பீர்கள் என்று நினைக்கின்றேன்.

மூன்றாவதாக, கர்த்தருடைய சபைகளை சில இடங்களில் ஸ்தாபிப்பது பற்றிய இலக்குகளை ஏற்படுத்துவதைப் பற்றி எப்படி? நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவை உள்ள இடத்தைக் கண்டு பிடித்து அங்கு சென்று செயல்படுவதுதான். உண்மையாகவே கர்த்தருடைய உதவியோடு நீங்கள் செய்ய விரும்புவதைச் செய்ய முடியும். நம்மில் பெரும்பாலானோர் நம்முடைய இலட்சியங்களைத்தாண்டி செல்ல முடியாது.

நான்காவதாக, நீங்கள் வேறொரு நகரத்துக்கோ அல்லது அண்டை நாடுக்கோ சென்று சபையை ஸ்தாபிக்கும்படி ஒரு இலக்கைக் கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட சில கனவுகளைக் கண்டு அந்த திசையில் ஏன் திட்டமிடக்கூடாது?

ஐந்தாவதாக, நீங்கள் இருக்கும் பகுதியில் நகரத்திலேயோ அல்லது நாட்டிலேயோ ஒரு பெரிய சபையை ஸ்தாபிக்க வேண்டுமென்று இலக்கைக் கொண்டிருக்கலாம். கொரியாவில் உலகத்திலேயே பெரிய சபையை உருவாக்க வேண்டுமென்று கனவுகண்ட ஒரு நாமகரணசபையைச் சேர்ந்த ஒரு பிரசங்கியாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அதற்காக அவர் கடினமாக வேலை செய்தார். அநேகர் அவர் தன்னுடைய நேரத்தை வீணாக்குகிறார் என்று எண்ணினார்கள் ஆனால் அவர் அதில் வெற்றிபெற்றார். நீங்கள் ஊழியம் செய்யும்பகுதியில் கர்த்தருடைய சபை மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைய உதவிசெய்து, சபையிலிருந்து நாட்டுக்கு ஏன் உலகமுழுமைக்கும் சத்தியத்தை கொண்டு செல்லும் ஊழியர்களை அனுப்பும்படிச் செய்தால் எவ்வளவு பிரமாதமாக இருக்கும்.

ஆறாவதாக, நீங்கள் திட்டமிட்டு தன்னுடைய தேவைகளை யெல்லாம் சந்திக்கும்படியாக சுயதேவைப் பூர்த்தி செய்யும் சபையாக சபையை உருவாக்கினால் அது மற்றவர்களுக்கு சிறந்த மாதிரியாக அமையும்.

ஏழாவதாக, நீங்கள் ஊழியம் செய்யும் சபை மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் கொண்ட ஒன்றாக இருக்கும்படிச் செய்ய வேண்டுமென்று இலக்கை ஏற்படுத்தலாம். அது இன்னுமொரு தகுதியுள்ள இலக்காக இருக்கும். அது மற்ற பல சகோதரர்களையும் அதே திசையில் சிந்தித்து முயற்சிக்கச் செய்யும்.

நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி (லூக்கா 9:23) அவருடைய ராஜ்யத்தை முதலில் தேடி முதன்மையாக வைத்தால் நீங்கள் சாதிப்பதில் அளவே இருக்காது (மத்தேயு 6;33). உங்களை நீங்களே ஒரு எல்லைக்குட்படுத்தாதீர்கள் அல்லது பிறர் உங்களுக்கு எல்லைகளை ஏற்படுத்தும்படி அனுமதிக்காதீர்கள். காரிய சித்தி உள்ள பிரசங்கியார்கள் யார் என்றால் சுறுசுறுப்பாக இருந்து தரிசனத்தோடு செய்யும் செயல்களைக் குறித்த ஆர்வத்தோடு செல்படுபவர்களே. அவர்களால் தங்கள் இலக்கை அடைய முடிவதற்கான காரணம் என்னவென்றால் அவர்கள் திட்டமிட்டு இலக்குகளை ஏற்படுத்தி அவைகளை அடையும்வரை அயராமல் உழைத்து அடைந்த பின்பு மற்ற இலக்குகளைத் தீர்மானிக்கிறார்கள்.

நீங்கள் உங்களுடைய பங்கை நிறைவேற்றினால் கர்த்தர் உங்களோடிருந்து, உங்களை ஆசீர்வதித்து, நீங்கள் வெற்றி பெறும்படி உதவிசெய்வார், கர்த்தரிடம் இந்தவிதத்திலும் முயன்று பாருங்கள் உங்களை அவர் ஏமாற்றவே மாட்டார்.

கிளாஸிக் மதுரை-1 ✆ 2348919